www.tamilarangam.net

இதழ் — 92 மார்ச்.07 — மார்ச்.20, 1996 விலை — 7.00

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே-பாரதி



## இந்தத் தண்டனை எதற்காக?



### நான் தண்டனை கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை -அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான் .......
உங்களை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்.......
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்........
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்தத் துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!
இந்தச் சவங்களின் மீது
சிம்மாசனம் ஏறிய
அந்தத் துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கை குலுக்க விரும்பவில்லை
ரத்தக் கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்.....!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும் வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்....!

- பாப்லோ நெருடா -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படம்: சி. கே. ராஜா

# திருமலையில் சமாதானம்

உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் இணைப்பாளரும், இப்பாக முவ தேவசரண அமைப்பைச் சேர்ந்த வண. யொஹான் தேவானந்தவின் பங்குபற்றுதலுடன் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மாகாண பிரதான நீதிமன்றச் சங்கநாயக்கர் வண தெல்தூவே தம்மறத்தன தேரரின் தலைமையில் பெப். 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமையன்று மு.ப.10.00 மணியளவில் திருக்கோணமலை ஸ்ரீ வஜிராராம விஹாரையில் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பான கருத்துப் பறிமாறல் கூட்டமொன்று நடைபெற்றது.

அதில் திருக்கோணமலை பாதிஸ்புர அபினவராமயனவைச் சேர்ந்த வண. நுககொட சந்திரஜோதி தேரர், திருக்கோணமலை ஸ்ரீ வஜிராராமவைச் சேர்ந்த மஹாஹீல்லே புத்தவங்ஸ தேரர், திருக்கோணமலை மெதடிஸ்ட் ஆலயத்தைச் சேர்ந்த வண. க. கருணசேகர, இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த ந. கந்தசாமி, திருக்கோணமலை நான்காம் மைல் கல் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியான உதவிப் பொலீஸ் அதிகாரி கே. ஏ. லலாங்க ஆகியோரும் அக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தமிழ் அரசியல்வாதிகள் வீடுகளிலும் சோதனை!

பகிரங்க அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல்வாதிகளின் வீடுகளைச் சுற்றிவளைத்துக் கடுஞ் சோதனை செய்வதற்கு அனுமதி தருமாறு பாதுகாப்புப் பிரிவின் அதி உயர் மட்டத்தின் சிலர் உரிய பொறுப்பு வாய்ந்தவர்களிடம் கோரியுள்ளனர்.

கொழும்பிலுள்ள லொஜ்களை மூட நடவடிக்கை எடுப்பது, வாகனங்கள் மற்றும் மக்கள் செறிந்து வாழும் இடங்களையும் அங்குலத்திற்கு, அங்குலம் சோதனை செய்வது ஆரம்பிக்கப்பட்டதும், தற்கொலைக் குண்டுதாரிகளும், புலிப் பயங்கரவாதிகளும் கொழும்பிலுள்ள சில தமிழ் அரசியல் வாதிகளின் வீடுகளினுள் நுழைந்துள்ளதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அவர்களுக்குப் பாதுகாப்பளித்துத் தேவையான வசதிகளையும் வழங்குமாறு புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இவ் அரசியல்வாதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பாதுகாப்புப் பிரிவு அறிந்துள்ளது.

இதே சமயம் இன்னொரு அதிகாரிகள் குழுவொன்று கடந்த இரு மாதங்களினுள் இவ் அரசியல்வாதிகள் பகிரங்கமாக விடுத்துள்ள அறிக்கைகளையும், அறிவித்தல்களையும் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர். அச் சந்தர்ப்பங்களில் சிலர் புலிகள் இயக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் அறிக்கைகள் விடுத்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக அக் குழு உயர் மட்ட விசாரணைப் பிரிவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

தமிழ் அரசியல் வாதிகளின் ஆடம்பர வீடுகளினுள் நடைபெறும் அரச விரோத நடவடிக்கைளை விசாரணை செய்யும் அதிகாரம், இல்லாமை நாட்டின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாகும் எனப் பாதுகாப்புப் பிரிவுத் தலைமை அதிகாரிகள் கடுமையாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொறுப்புவாய்ந்தவர்களின் அனுமதி கிடைக்கும் வரை இவ் அரசியல்வாதிகளின் மாளிகைகளுக்கோ, அவர்களுக்குச் சொந்மான வேறு இடங்களுக்கோ சென்றுவரும் நபர்கள் தொடர்பாக அறிந்து கொள்ள அவதானப் பணிக் குழுக்கள் சில தற்போதே ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அதற்குப் புறம்பாக அவ் இடங்களுக்குச் சென்றுவரும் வாகனங்களின் இலக்கங்களை மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தினூடாக விசாரிப்பதும், அவற்றில் பிரயாணம் செய்யும் நபர்களை இடைநடுவில் நிறுத்தி விசாரிப்பதும் எதிர்வரும் வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதெனப் பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் கூறினார்.

(லக்பிம - 19960303)

# பறக்க முடியாத ஹெலிகள்

யுத்தத்தின் அவசர தேவையைப் பயன்படுத்தி ரென்டர் (Tender) விலை மனுக்கோராது கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் கடந்த சில தினங்களுக்கு முன்பு விமானப் படைக்குக் கொண்டு வரப்பட்ட எம்.ஐ. 24 வகைத் தாக்குதல் ஹெலிகொப்ரர்கள் மூன்றில் எல்லா இயந்திரங்களினதும் இயங்கு காலம் முடிவடைந்துள்ளமையால் இப்போது அவ் ஹெலிகொப்ரர்கள் ஓட முடியாது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமானப் படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றிற்குப் பாதுகாப்பு வரி போன்றவை ஊடாகப் பொது மக்களிடமிருந்து சேர்த்த பொதுமக்கள் பணமே செலவழிக்கப்படுகிறது.

கசகஸ்தானிலிருந்து இலக்கம் ஐ.எல். - 76 கொண்ட பொருட் போக்குவரத்து விமானமொன்றில் அவசர அவசரமாக இந் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இறக்கப்பட்ட இத் தாக்குதல் ஹெலிகொப்ரர்கள் மூன்றும் ஒரு அங்குலமேனும் ஓடாது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதற்கான அனைத்துக் காரணிகளும் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

விமானப் படைத் தளபதிகளினால் இம் மூன்று ஹெலிகொப்ரர்கள் பற்றிய அறிக்கையொன்றை அளிப்பதற்காகச் சிலர் நியமிக்கப்பட்டுத் தனியான வேலைத் திட்டமொன்று போடப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது.

அவ் வேலைத் திட்டத்தின் கீழ் இப் பழுதடைந்த இயந்திரங்களை மீளத் திருத்தியமைக்கக் கசகஸ்தானிலிருந்து குழுவொன்றை அவசரமாக இங்கு வரவழைக்கவும் விமானப் படைத் தளபதிகள் இரகசியமாக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிங்கப்பூர் தரகர் ஒருவர் மூலமாக இவ் ஹெலிகொப்ரர்கள் மூன்றும் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதுடன், இடைத் தரகர்களுக்கும் பெருந்தொகைத் தரகுக் கூலி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அவற்றைக் கொண்டு வரச் சென்றவர்கள் அவற்றின் இயந்திரங்களின் ஓடும் காலம் போன்றவற்றையும், நிலைமைகளையும் பரிசோதித்துப் பார்க்காது கொண்டு வந்துள்ளனர். அவற்றிற்கான பணம் முழுமையாகவே வழங்கப்பட்டுவிட்டது. இடைத் தரகர்கள் போன்ற அனைவருக்குமே கமிஷன் கிடைத்துள்ளது.

ஆனாலும், ஹெலிகொப்ரர்கள் ஓட முடியாததால் வட-கிழக்கு யுத்தத்தின் அவசர தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்பட்ட ஹெலிகொப்ரர்கள் இல்லாத பிரச்சினைக்கு விமானப்படை தொடர்ந்தும் முகங் கொடுக்கிறது.

யுத்தம் என்ற போர்வையில் ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், யுத்தத்தை வியாபாரமாக்கிய இன்னொரு சந்தர்ப்பமாக இதனை இனங்காணலாம்.

இதே சமயம் கசகஸ்தானிலிருந்து எம். ஐ. - 24 என்ற இதே போன்ற வேறு தாக்குதல் ஹெலிகொப்ரர்கள் மூன்றை வாங்க விமானப்படை ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்குப் புறம்பாக ஏ.என். - 32 விமானங்கள் 4உம், கடல் வான் எல்லைகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய விமானங்கள் 6 உட்பட மேலும் விமானங்கள் 27க்கும் அவசர அவசரமாக விலை மனுக் கோரப்படாது விலைக்கு வாங்கத் தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாக விமானப்படைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(யுக்திய - 19960303)

# தர்மலிங்கம் கைது-பொலிசார் சதி?

பௌத்த விஹாரை வளவினுள் நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் விசாரிக்கப்பட்ட நாரஹேன்பிட்டிய தர்மதூத்த விஹாரையைச் சேர்ந்த குருந்தென்குலமே சாந்த சோபன தேரர் பொலன்னறுவைப் பொலிசாரின்கை இவ்விடயத்தின் பின்னணியில் இருக்கின்றதென தான் திடமாகச் சந்தேகிப்பதாகக் கூறினார்.

பெப். 18ஆந் திகதி நாரஹேன்பிட்டிய தர்மதூத்த விஹாரை வளவினுள்ளிருந்து பொலன்னறுவை பொலிசார் இரு ஆர். பீ. ஜீக்களையும், 16 கிரனேட் குண்டுகளும், இரு ஆர்.பீ.ஜீ. சார்ஜர்களையும் மீட்டது தொடாபாக உதவித் தொழில் ஆணையாளரான தர்மலிங்கம் என்பவர் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே.

அம் மீட்பின் போது அங்கிருந்த பௌத்த குருமாரும் நான்காம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அதில் ஒருவரே குருந்தென்குலமே சாந்த சோபன தேரோ என்றழைக்கப்படும் சாந்த ஹாமதுருவோ ஆவார்.

திரு தர்மலிங்கத்தைக் கைது செய்வதனை நியாயப்படுத்துவதற்காகவே பொலன்னறுவ பொலிசார் ஆயுத உபகரணங்களை ஆலய வளவுள் புதைத்திருக்கிறார்கள் என்று சாந்த ஹாமதுருவோ எம்மிடம் தெரிவித்தார்.

வெடிமருந்துகளைத் தேடிவந்த பொலன்னறுவ பொலிசாருக்கு விஹாரை வளவினுள் ஆயுதங்கள புதைத்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்திருந்தது. அவை மீட்கப்படும் முன்னரே ஆயுத தளபாடங்கள், பிளாஸ்ரிக் பொம்மைகள் தொடர்பாகவும் பொலிசார் அறிந்திருந்தனர் என்பதை அவர்களது பேச்சிலிருந்து உணர்ந்தவுடன் நான் ஆச்சரியப்பட்டேன். வளவினுள் குண்டுகள் இருக்கலாமெனவும், பிளாஸ்டிக் பொம்மைகள் தொடர்பாகவும் பொலிசார் முன்னரே தெரிவித்ததனாலேயே நான் அவர்களைச் சந்தேகிக்கிறேன்.

மேலும் அவர் இது தொடர்பாக கூறியதாவது:

''பொலிசார் முதலில் தம்ம பாடசாலைகளை மூடுமாறு கேட்டனர். ஏனென நான் கேட்டபோது குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால் மாணவர்கள் கலவரமடைவார்கள் என அவர்கள் கூறினர். நான் அவர்கள் கூறியபடி செய்தேன். பொலிசார் என்னிடம் மண்வெட்டியொன்றைக் கேட்டனர். மண் வெட்டியொன்றை எடுக்க நான் களஞ்சிய சாலைக்குப் போனேன். ஆனால் நான் அவ் இடத்திற்கு வருகையில் பொலிசார் வெடிமருந்துகளை புதை குழியிலிருந்து ஏற்கெனவே மீட்டிருந்தனர். எங்கிருந்து எவ்வாறு அவற்றை அவர்கள் எடுத்தார்கள் என எனக்குத் தெரியாது.

குண்டுகள் மூன்று நாட்களுக்கு முன்பே புதைக்கப்பட்டிருக்க வேண்டுமென அவர்கள் கூறினார்கள். ஆனால், தர்மலிங்கம் ஒன்பது நாட்களுக்கு முன்பே கைது செய்யப்பட்டிருந்தார். இப்படியிருக்கையில், குண்டுகளை யார் மறைத்து வைத்திருப்பர்? தர்மலிங்கத்தை இதனுடன் சம்பந்தப்படுத்துவது எப்படி?

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர் ஒருவருக்கு தர்மலிங்கத்துடன் தொடர்புகள் இருந்தது தொடர்பாக யாரோ ஒருவர் ஆரம்பத்தில் பொலிசாரிடம் அறிவித்ததாக அவர் கூறியதுடன் பொலிசார் அவரைச் [illegible] தேகித்தது ஏன் எனக் கேட்டார்?

அவ் விஹாரை நாரஹேன்பிட்டி பொலிசார் அதிகாரப் பிரிவினுள் வந்தாலும் அப் பொலிசிற்குப் பொலன்னறுவப் பொலிஸ் எதனையும் அறிவிக்கக் கூட வில்லை.''

புதைக்கப்பட்ட குண்டுகள் தொடர்பாக பொலிசார் முன்கூட்டியே விவரமாக தெரிந்து வைத்திருந்தது தேரருக்கு பெரும் வியப்பையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தேரர், தனது அறைகளில் வெடிமருந்துகளை மறைத்து வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு விஹாரையில் இருக்க உதவி செய்ததாகவும் பொலிசார் அவரை ஏசியதாகவும் மேலும் கூறினார். பொலிசார் விஹாரைக்கு வந்த அன்றைய தினம் எனது அறைகளையும் அவர்கள் சோதனை செய்தார்கள். என்னிடம் வெடிமருந்துகள் இருந்திருந்தால் அன்றைக்கே அவர்களால் அதனை எடுக்க முடியாது போனது ஏன்? என்று கேட்கிறார் தேரர்.

(த சண்டே லீடர் 25021996)

# 1800 தமிழர் கைது!

பெப்ரவரி 14 ஆந் திகதி நாடெங்கிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்ட பின் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள், வீதித் தடைச் சோதனைகளிலும் சந்தேகத்திற்கிடமான தமிழர்கள் ஆயிரத்து எண்ணூறு பேரளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் வட பகுதியைச் சேர்ந்தவர்களாவர் எனக் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மத்தியில் மூவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னணித் தலைவர்கள் எனவும் தகவல் வெளிவந்துள்ளது.

இவர்கள் தாம் கொழும்பிற்கு வந்த காரணத்தை உறுதியாகக் கூற முடியாததும் பொய்த் தகவல்கள் கூறி, பாதுகாப்புப் பிரிவைத் தவறான வழியில் இட்டுச் செல்ல முனைந்தவை உட்படப் பல குற்றச்சாட்டுக்களின் மீதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

(யுக்திய - 19960303)

# றோ வருகை!

வட - கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வாக அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தின் பின்னணியில் உயர் மட்ட இந்தியக் கையொன்று உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இத் தீர்வுத் திட்டத்தை இந் நாட்டினுள் அரசியலமைப்பு மட்டத்தில் செயற்படுத்துவது இவ் இந்தியக் கையின் நோக்கமாகவுள்ளதெனவும், அதற்காகத் தற்போதே இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் பலவும் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இதனால் இந் நாட்டு அரசியல் கட்சிகள் பல மீது பல்வேறு நிர்ப்பந்தங்கள் விடுக்கப்பட்டுள்ளதுடன், இந்நாட்டு உயர்மட்ட இந்திய நிறுவனமொன்றின் முன்னணி அதிகாரிகள் இருவர் தற்போதே தமிழ் அரசியல் கட்சிகள் சிலவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகளின் நோக்கமானது இந்தியத் தரப்பின் அடிப்படை மீது அரசியல் கட்சிகளைக் கீழ்ப்படிய வைத்தலாகும்.

இதே சமயம் இந்திய இரகசிய புலனாய்வு நிறுவனமான றோ (RAW)அமைப்பின் பிரதிநிதிகள் சிலரும் இந் நாட்டிற்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கும் அத் தகவல் வட்டாரங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாகச் செயற்படுவதும், மற்றும் தற்போதைய அரசியல் தீர்வுத் திட்ட வரைவுப் பிரதி தொடர்பாக அறிக்கை தயாரிப்பதும் அவர்களின் வேலையாகவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

(திவயின - 19960303)

# அமெரிக்க-இந்தியக் கடற்படைக்கூட்டு!

அமெரிக்க, இந்தியக் கடற்படைகள் ஒன்றிணைந்து தென் இந்தியக் கடற் பரப்பில் கூட்டுக் கடற் பயிற்சித் தொடரொன்றை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக நம்பகரமான தகவல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இப் பயிற்சித் தொடரானது எதிர்வரும் இரு வாரங்களினுள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாகத் தென் இந்தியக் கடற் பரப்பினூடாக நடைபெறும் அநேக சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியுமென நம்பப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் தென் இந்தியாவிற்குத் தப்பியோடுவது இக் கடற் பரப்பினூடாகவே என இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடற் பயிற்சியை நடத்தியதன் பின்பு தென் இந்தியக் கடற் பரப்பின் பாதுகாப்பு ஒழுங்குகளை மேலும் பலப்படுத்த இந்தியக் கடற்படை நடவடிக்கை எடுக்கவுள்ளது. இதனூடாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வெளி நாடுகளிலிருந்து ஆயுதங்கள் கிடைப்பதை முழுமையாகவே நிறுத்திவிட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இக் கடற் பயிற்சியின் நோக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் தென் இந்திய வலயத்தினுள் செல்வதைத் தடுப்பதாகும் எனத் தெரிகிறது என யுத்த வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

விஷேடமாகக் கடற் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அதிகமாகக் காணப்படுவது இந்தியக் கடற் பரப்பினூடாகவே என்பதால் இவ்வாறான கடற் பயிற்சியொன்று கடற் புலிகளுக்கு அபாய எச்சரிக்கையாக இருக்குமென இந்தியப் பாதுகாப்புப் பிரிவு நம்புகிறது.

(லங்காதீப - 19960303)

# அரசாங்கப் பா.உக்கள் அதிருப்தி!

அரசாங்கப் பராளுமன்றக் கட்சிக் குழுக் கூட்டம் மூன்று மாதங்களாக நடைபெறாததால் அரசாங்கக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் மிகுந்த அதிருப்தியடைந்துள்ளனர்.

அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழு உறுப்பினர்கள் தமக்குள்ள முரண்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாட உள்ள ஒரேயொரு சந்தர்ப்பத்தையும் நழுவ விடத் தலைமை செயற்படுவது தொடர்பாகத் தாம் கடும் அதிருப்தியடைந்துள்ளதாகப் பின்வரிசை உறுப்பினர்கள் குழுவின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக உறுப்பினர் குழு அமைச்சர்கள் பலரையும் விசாரித்துள்ள போதும் அவர்கள் எதனையும் தெரிவிக்க முடியாதுள்ளனர்.

(லக்பிம - 19960225)

**இப்பத்தியின் நோக்கம் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும், அதே சமயம் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவராத செய்திகளை வழங்குவதேயாகும்.**

தொகுப்பு : சி. விவேக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்லாம் மாயை தானா?

சமாதானம், இன ஐக்கியம், ஜனநாயகம் என்பவையெல்லாம் வெறும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கோஷங்கள் மட்டுமே. அவை ஒன்றும் நடைமுறைக்கு அல்ல என்ற கோட்பாட்டையே பொ.ஐ.மு. கொண்டிருக்கிறதா?

இன்றைய பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்து ஒன்றரை ஆண்டுக்கு மேலாகி விட்டது.

ஆட்சியதிகாரத்தை ஐ.தே.கவின் கையிலிருந்து எடுத்துக்கொள்வதற்காக பொ.ஐ.மு. வால் முன்வைக்கப்பட்ட முழக்கங்களின் ஞாபகச் சுவடுகள் கூட இன்று காணாமல் போய்விட்டன. ஜனாதிபதி முறைக்கு பதில் பாராளுமன்ற ஜனநாயக அரசமைப்பொன்றை கொண்டு வருதல், 17 ஆண்டு கால இராணுவ மயப்படுத்தப்பட்ட ஐ.தே. வின் காட்டாட்சிக்குப் பதிலாக, மக்கள் ஆட்சியை மீளத் தருகின்ற ஜனநாயக நடைமுறைகளை அமுல்படுத்தல், இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமாக தீர்வொன்றை காண்பதன் மூலம் இனங்களிடையே நல்லுறவையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தல், யுத்தமற்ற நிலைமை ஒன்றை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்பவை இன்றைய அரசாங்கத்தின் பிரதான முழக்கங்களாக இருந்தன.

ஆட்சிக்கு வந்த புதிதில் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் மக்கள் அளித்த மாபெரும் வாக்குபலத்துடன் ஒரு சில நடவடிக்கையில் இந்த அரசாங்கம் கால் வைத்தது என்னவோ உண்மைதான். ஆனால், வழமை போல, இதுவரைகால எல்லா அரசாங்கங்களும் செய்தது போலவே, அந்த விடயங்கள் ஒவ்வொன்றாக உடைப்பில் போடப்பட்டன; அல்லது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

ஜனநாயக விரோதமான, தனிநபர்கையில பெருமளவுக்கு கேள்விமுறையற்ற அளவு [அ]திகாரங்களை குவிக்கின்ற ஜனாதிபதி ஆட்சிமுறையை தூக்கியெறிந்து விட்டு பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு திரும்பிப் போவது என்று கூறி அதற்கு ஒரு கால எல்லையையும் இந்த அரசாங்கம் விதித்திருந்தது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் தான் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டபோது 1995 ஜூலை மாதத்திற்கு முன்பாக ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்பட்டுவிடும் என்று பலத்த கரகோசத்தின் மத்தியில் சூளுரை செய்தார். நாடுபூராவும் உள்ள மக்களுக்கு இந்த உரை தொலைக்காட்சி மூலமாகவும் வானொலி மூலமாகவும் பரப்பப்பட்டது. தாம் பாவித்த தமது வாக்குரிமைக்கு நிச்சயமாக பலன் இருப்பதாக அந்த நேரத்தில் மக்கள் பெருமிதமடைந்திருப்பார்கள். என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த ஜூலை [மா]தம் முடிவடைந்து அதை அடுத்து இன்[று]ம் ஒரு அரையாண்டு கடந்தபின்பும் - இந்த ஆட்சி முறை மாற்றத்திற்கு பிரதான எதிர்க்கட்சிதானும் ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தபோதும் இது தொடர்பான முயற்சிகள் மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்றன. நீதி மற்றும் அரசியலமைப்புத்துறை அமைச்சு ஜனவரி மாதம் திகதியிட்டு பெப். மாதத்தில் வெளியிட்டிருந்த அரசியலமைப்பு திட்டமாற்றத்திற்கான சட்ட வரைவில் ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனைப் படி தனது அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட வரைவு பாராளுமன்றத் தெரிவுக் குழுமுன் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் மக்கள் மத்தியிலான ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் பின் இது நடைமுறைக்கு வரும் என்று குறிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு மாற்றத்திற்காக இதுவரை காலமும் செய்யப்பட்டது என்ன என்ற கேள்விக்கு பதில் கூறக்கூடிய விதத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையானது பிரதானமாக இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு என்ற அடிப்படையில், அத்தகைய ஒரு நோக்கத்துடனேயே வெளியிடப்பட்டிருக்கிறது. நாட்டின் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைக்கும் விவகாரம் தொடர்பாக அது மேற்குறிப்பிட்ட ஒரு வரியைத் தவிர வேறெதனையும் பேசவில்லை.

ஜனாதிபதி முறை மாற்றியமைக்கப்படும் என்பதால், ஜனாதிபதியின மாளிகையில் தான் தங்கப்போவதில்லை என்று குறிப்பிட்ட இன்றைய ஜனாதிபதி, பிரதமரின் இல்லத்திலேயே தங்கியிருப்பது சகலரும் அறிந்த விடயம். ஆனால், அதேவேளை ஜனாதிபதிக்குரிய சகல அதிகாரங்களும், ஒழுங்காக இந்த நிமிடம் வரை பாவிக்கப்பட்டுவருவதையிட்டு வெட்கப்படுவதாகத் தெரியவில்லை!

ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்ற விரும்பியதாகக் கூறியபடி அதைச் செய்வதில் காட்டிய இழுத்தடிப்பு ஒன்றும் தற்செயலானதல்ல. இது திட்டமிட்டே செய்யப்பட்டு வருகின்ற ஒன்று என்பது அரசு தரப்பு தகவல்களிலிருந்து தெரிகிறது. ஏனென்றால், தமக்குள்ளேயே பாரிய கருத்து வேறுபாடுகளைக் கொண்டதாக பொ.ஐ.முன்னணி இருப்பதாலும் பாராளுமன்றத்தில் மெல்லிய பெரும்பான்மை மட்டுமே இருப்பதாலும் இந்தப் பதவியை தக்கவைத்திருப்பது அவசியமாகும் என்பதே அரசாங்க தரப்பினரின் விவாதமாகும்.

ஆனால், இனப்பிரச்சினை தொடர்பாக இந்த அரசாங்கத்தின் முயற்சிகள், அதுவும் குறிப்பாக யுத்தம் வெடித்தபின் உலகளாவிய அளவில் கேள்விக்குட்படுத்தப்படத் தொடங்கியதால் நீதி மற்றும் அரசியலமைப்புத்துறை அமைச்சு இப்போது நகல் சட்ட வரைவை வெளியிட்டிருக்கிறது. நெருக்கடி காரணமாக எழுந்த அவசர்த்தில் வெளியிடப்பட்டதால், சட்டநகல் வெறுமனே இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக மட்டுமே வெளியிடப்பட்ட ஒன்று என்று காட்டுவதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி முறை மாற்றம் சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. சட்டநகலின் தலைப்பு மட்டும் 'அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான அரசாங்கத்தின் பிரேரணைகளை உள்ளடக்கிய சட்ட நகல் சரத்துக்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

இந்தச் சட்டநகலின் அறிமுகத்தில் 'இன நல்லுறவு' அடிப்படையில் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த சட்ட நகல் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

1. எல்லா இனங்களும் பாதுகாப்பாகவும், மனித கௌரவத்துடனும், சமத்துவத்துடனும் வாழும் நிலையை உருவாக்கல்.
2. இனங்களின் தனித்துவம், அவர்களது மத, மொழி தனித்துவம், அரசுடனும் தாம் விரும்பும் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமை என்பவற்றை உறுதிப்படுத்தல்.
3. எல்லா பிரஜைகளும் தமது மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள் என்பவற்றில் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்பதை உறுதிப்படுத்தல்.
4. தமிழ், சிங்களம் இரண்டும் உத்தியோக மொழிகளாக்கப்படல்; ஆங்கிலம் தொடர்பு மொழியாக்கப்படல்.
5. மத்திய அரசுக்கும் பிராந்திய அரசாங்கங்கட்கும் இடையில் நல்லுறவை பேணுவதற்கு இசைவான விதத்தில் அரசியலமைப்பு ரீதியிலான பாதுகாப்பை வழங்குதல்.
6. நாட்டின் பல்லினங்களுக்காக ஜனநாயக அமைப்புகள், எல்லா இனங்களும் முழுமையாக நாட்டின் தேசிய வாழ்வுள் பங்கு பற்றும் நிலையை உறுதிப்படுத்தல்...

ஆக, இந்தத் திருத்தம், நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அடிப்படையில் கொண்டு வரப்பட்ட ஒன்று என்ற படமே இவற்றின் மூலம் காட்டப்படுகிறது.

உண்மையில் அது அவசியமானதும் தான். ஆனால், ஜனாதிபதி ஆட்சி மாற்றவிவகாரம் வேண்டுமென்றே குறிப்பிடப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளதென்பதை இங்கே குறிப்பிடத்தான் வேண்டும்.

சரி, இந்த இனப்பிரச்சினை தொடர்பான அரசாங்கத்தின் நகல் அறிக்கையையும் சட்ட அம்சங்களையும் ஆரம்பத்திலேயே சட்ட வல்லுநர்களுக்கு விட்டுவிட்டு அதை முன் வைப்பதற்காக அரசாங்கம் கூறும் காரணங்களைப் பார்ப்போம். இதுவரை காலமும் இனப்பிரச்சனைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965), இலங்கை - இந்திய ஒப்பந்தம் (1987), ஜனநாயக மக்கள் கூட்டு முன்னணியின் பிரேரணைகள் (1988), மங்களமுனசிங்கவின் இடைக்கால அறிக்கை (1992), காமினி திசநாயக்காவால் ஜனாதிபதி தேர்தலின் போது முன்வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகள் (1994) அனைத்தினதும் தோல்விக்கான காரணங்களாக இரண்டு காரணங்களை அரசாங்கம் முன்வைக்கிறது. ஒன்று இந்தத்தீர்வு உள்ளடங்கலாக இருந்த குறைபாடுகள். இரண்டு: தீர்வுகளை செயற்படுத்தும் அரசியற் தலைமைத்துவம் பல்வேறு தீவிரக்கருத்துக்கொண்ட எதிர்தரப்பு சக்தியால் இயங்க முடியாமல் செய்யப்பட்டமை.

இந்த இரண்டு காரணங்களையும் குறிப்பிட்டு இவை இரண்டிலதும், பாதிப்பிலிருந்து விடுபட்ட ஒரு தீர்வையும், அது நடைமுறைப்படுத்த சக்திவாய்ந்த ஒரு தலைமைத்துவத்தையும் தாம் கொண்டிருக்கிறோம் என்ற உறுதியுடன் இந்த நகல் வெளியிடப்பட்டிருக்கிறது.



ஆனால், பரிதாபகரமான முறையில் இந்த இரண்டிலதும் பாதிப்புக்கு தீர்வுத்திட்டமும் விதிவிலக்காகி விடவில்லை!

ஆனால், இது ஒன்றும் எதிர்பார்க்காத விடயமல்ல. இத்தகைய ஒரு நிலைமையை நாற்பது ஆண்டுகால வரலாறு பற்றி பேசத் தெரிந்த அரசாங்கம் கட்டாயம் தெரிந்து வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், துரதிஷ்டவசமான விடயம் என்னவென்றால், இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களைப்போலவே, எந்த விடயங்களைக் கூறுகின்றதோ அதற்கு நேரெதிரான போக்கிலேயே தனது காய்களை நகர்த்திக்கொண்டு வருகிறது. நாடகப் பாணியில், அபரிமித உணர்ச்சியுடன் தமிழ் மக்களது உரிமைகள் குறித்துப் பேசிக் கொண்டே, அவர்கள் மீது முற்றும் முழுதான சந்தேக நிலையை உருவாக்கும் விதத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. சில உதாரணங்கள் போதும் இதை விளங்கிக் கொள்ள.

✤ நவாலி தேவாலயம் உடைக்கப்பட்ட போது, அது உடைக்கப்பட்டதும் அங்குள்ள மக்கள் கொல்லப்பட்டதும், தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு அனுதாபச் செய்தியைக் கூட தெரிவிக்க தயாரற்ற இந்த அரசாங்கம், அப்படியெதுவும் நடக்கவில்லையென்று அடித்துக் கூறியது. அதுமட்டுமல்லாமல், இன்னும் ஒரு படி மேலே போய், அது புலிகள் வைத்த குண்டினால் நடந்திருக்கலாம் என்று தெரிவித்தது.

✤ நாகர் கோவில் மகா வித்தியாலயம் வளவில் குண்டு போடப்பட்டு பாடசாலை சிறுவர்கள் கொல்லப்பட்டபோது அதை மூடி மறைக்க முடிந்தளவு பிரயத்தனப்பட்டது. அச்செய்தியை வெளியிட்ட வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் மீது தீவிரமான காட்டத்துடன் நடந்து கொண்டது. அதற்காக அது கொஞ்சமும் வருந்தியதாக காட்டிக்கொள்ளவில்லை.

✤ மிக அண்மையில் மகசின் சிறைச்சாலையில் கைதிகள் சக சிங்களக்கைதிகளாலும், ஜெயிலர்களாலும் தாக்கப்பட்டபோதும் அவர்கள் மீது எந்த அனுதாபமும் காட்டாது, ஜெயிலர்களை மாற்றுங்கள் அல்லது தம்மை வேறுசிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரிய பாதிக்கப்பட்ட கைதிகளின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

✤ கடந்த மாதம் கிளிவெட்டி குமாரபுரத்தில் நடைபெற்ற படுகொலைகளின் போது, இப்படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் இராணுவத்தினரே என்று தெரிந்தும் அதை மூடி மறைக்க முயன்றது. விசாரணை நடத்துமாறும் கொலையாளிகளை அடையாளம் காட்ட முடியும் என்றும் கோரியபோதும் விசாரணையை இராணுவ விசாரணையுடன் மட்டுப்படுத்திக்கொண்டது.

✤ புல்லர்ஸ் வீதிபடுகொலைகள் உள்ளிட்ட படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் மீதான விசாரணைகளை இழுத்தடித்து வருகிறது. (எம்பிலிப்பிட்டி புதைகுழிகளோடு சம்பந்தப்பட்டதாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள், இப்போது விடுவிக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல, பதக்கம் கொடுத்து கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.)

✤ வடக்கில் இருந்து. அங்குள்ள யுத்தநிலை காரணமாக கொழும்பு நோக்கி வருபவர்களை வவுனியாவில் 'சிறை' வைத்திருப்பது போல தடுத்து வைத்திருக்கிறது; கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் மீது தேவையற்ற விதத்தில் சந்தேகத்தை பரப்பி வருகிறது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் தீவிர விசாரணை முடியும் முன்பாக புலிகள், பயங்கரவாதிகள், போன்ற பூச்சாண்டியை பரவலாக பரப்பிவருகிறது.

✤ இவையெல்லாவற்றிற்கும் மேலாக கொழும்பில் பாடசாலைகளை இழுத்து மூடிவிட்டு அதற்கு காரணம் கற்பிப்பதற்காக அதிபர்கள் குண்டு வைக்கப்படும் என மிரட்டல் கடிதங்கள் வந்துள்ளதாக தெரிவித்துள்ளதாக குறிப்பிடுகிறது. ஆனால், அண்மையில் நடந்த கல்வியமைச்சு- அதிபர்கள் சந்திப்பின் போது இது வெறும் கட்டுக்கதை என்பதும், எந்த அதிபரும் அவ்வாறு தெரிவிக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

கொழும்பில் நிலைமை மோசமாக இருப்பதாக பூச்சாண்டி காட்டுவதன் மூலமாக அரசாங்கம் எதைச் சாதிக்கப் போகிறதோ இல்லையோ, தமிழ் மக்கள் மீது பரவலான சந்தேகங்களை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் மட்டும் அது வெற்றி பெற்றுவருகிறது.

✤ வடக்கு நோக்கிச் சென்ற கத்தோலிக்க குருமார் இருவர் தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கடத்திச் சென்றார்கள், கொழும்பில் உண்டியல் வர்த்தகர்கள் புலிகளுக்கு பணம் அனுப்புகிறார்கள், நாரஹேன்பிட்டியவில் இருந்த உதவித் தொழில் ஆணையாளர் புலிகளின் ஏஜென்ட் போன்ற பிரச்சாரங்கள் (அவை எவையும் நிரூபிக்கப்படவில்லை! கத்தோலிக்க குருமார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தவறானது என்று கூறி அவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.) இந்த நிலைமை மேலும் மேலும் மோசமாக்கி வருகின்றன! பத்திரிகைத் தணிக்கையைக் கூட அமுல்படுத்த தயாராக இருந்த அரசாங்கம் இந்த மாதிரியான தகவல் குறித்தும் அவையேற்படுத்தும் தாக்கங்கள் குறித்தும் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஆக, இனங்களுக்கிடையில் நல்லுறவு என்று கூறியபடி அதில் மிகமோசமான பிரிவினை ஏற்படுத்தும் விதத்திலேயே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இந்த லட்சணத்தில் வைக்கப்பட்ட தீர்வு நகலுக்கு என்ன நடக்கும்?

அதிலே கூட திட்டமிட்ட நாடகங்கள். தமிழ் மக்களுக்கு ஒரு கதை; சிங்கள மக்களுக்கு ஒரு கதை. தமிழ்க் கட்சிகளுக்கு ஒருகதை; சிங்கள தீவிரவாதிகளுக்கு ஒரு கதை. இத்தகைய ஒரு அணுகுமுறை இரண்டு பக்கத்திலும் அவநம்பிக்கையை வளர்க்கவுட்டுமே உதவும் என்பது பேராசிரியருக்கும் ஜனாதிபதிக்கும் தெரியாத ஒன்று என்ற கொள்ளலாமா? இது அவர்களை அவமதிப்பதாக ஆகாதா?

அப்படியானால், உண்மையில் இவர்கள் விரும்புவதுதான் என்ன?

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் இருந்து தமிழ் மக்களை விரட்டுவதா? - இன்றைய போக்கின் யதார்த்த முடிவு அதாகத்தான் இருக்கும் என்பதை அனுபவப்பட்ட தமிழ் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்! ஒரு தடவை இரு தடவையல்ல மூன்று தடவை கப்பலேற்றப்பட்டு அனுபவப்பட்டவர்கள் அல்லவா நாம். இம் முறை கப்பல் ஏற்றினால் வலிகாமத்தில் தமிழ் மக்களை குடியேற்றி அங்கு தேர்தலையும் நடாத்தும் சாத்தியம் அரசுக்கு ஏற்படும். அது புலிகளை வெற்றிகொண்ட பெருமிதத்தையும் கூட ஏற்படுத்தும்!

யுத்தத்தை நடாத்தியபடி இனப்பிரச்சினையின் தீர்வையும், பொருளாதார வளர்ச்சியையும் பற்றி ஆரம்பத்தில் சிந்தித்தற்கு நேரெதிரான முறையில் இப்போது பேசி வருகிறது அரசு. அற்ப அதிகாரங்கள், பதவி உயர்வு போன்றவற்றுக்காக கதை சோடிக்கும், பொலிசார்களின் தகவல்கள் தங்கியிருக்கும் பத்திரிகைகள் இதற்கு எண்ணெய் ஊற்றுகின்றன தமிழர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு செய்தியை கொஞ்சமாவது பொறுப்புடன் எழுத வேண்டுமென்பதை 'சமத்துவம்' பேசும் பத்திரிகைகள் கூட கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இவையெல்லாவற்றினதும் முடிவுதான் என்ன?

சமாதானம், இன ஐக்கியம், ஜனநாயகம் என்பவையெல்லாம் வெறும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான கோஷங்கள் மட்டுமே. அவை ஒன்றும் நடைமுறைக்கு அல்ல என்ற கோட்பாட்டையே பொ.ஐ.மு. கொண்டிருக்கிறது என்ற உண்மையை நிலைநிறுத்துவது தானா?

பொ.ஐ.மு. பதில் சொல்லுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிழக்கு மாகாணத்தில் உக்கிரமடைந்திருந்த அரசியல் பின்னணி கொண்ட தமிழ் - முஸ்லிம் இனமுரண்கள் அண்மைக்காலத்தில் ஒரு நல்ல நிலைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறது. வேண்டாம் இன்னொரு இறந்தகாலம் என்பதுவே இரு இன மக்களினதும் விருப்பமாக இருந்து கொண்டிருக்கிறது.
எனினும், சில அரசியல் அதிகாரம் பெற்ற சக்திகள் மீண்டும் ஓர் முறுகல் நிலையை தோற்றுவித்து விடுமோ என்ற அச்சநிலையும் கிழக்குவாழ் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மெல்ல முளைவிட்டிருக்கிறது.
அபிவிருத்தி வேலைகள் என்ற வகையில்



# கிணறு வெட்ட புறப்பட்ட பூதம்?

ராஜன்

இன்னோர் இன மக்கள் பாதிப்புறும் நிலைமைகளை கிழக்கில் அவதானிக்க முடிகிறது. அதிகார துஷ்பிரயோகங்கள் சமூக முரண்பாடுகளை வளர்க்க துணைபோகின்றன.
இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதியமைச்சருமான ஹிஸ்புல்லாவின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விசனம் கொள்கின்றனர்.
காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக மட்டக்களப்பிலிருந்து பொலிஸ் பாதுகாப்புடன் ஆயிரக்கணக்கான ட்ரக்டர் லோட் கிறவலை எடுத்துச் சென்றமை. இது விடயத்தில மட்டு மேயருடன் பிரச்சினைப்பட்டமை. (பெருந்தொகையான கிறவல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி பள்ளமாகி கழிவுகளின் இருப்பிடமாகியுள்ளது.)
நிலமற்ற பல பொதுமக்கள் இருக்க ஆரையம்பதியிலுள்ள அரசாங்கக் காணிகளில் வீடுகள் அமைத்துக் கொடுத்து முஸ்லிம் மக்களைக் குடியேற்றியமை என்பன இதற்கு அடிப்படையாக இருக்கின்றன.
மேற்கூறிய இரு நடவடிக்கைகளும் முஸ்லிம் மக்களின் நன்மை கருதி எடுக்கப்பட்டவை என்று கொண்டாலும், ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காங்கேயனோடை என்னும் முஸ்லிம் கிராமத்தைச் சூழவுள்ள 42 ஏக்கர் சதுப்பு நிலத்தை சொந்த அரசியல் இலாபம் கருதி தனது உறவினருக்கு இறால் வளர்ப்புத் திட்டத்திற்கு தாரை வார்த்துக்கொடுத்துள்ளார். இது தமிழ் - முஸ்லிம் சமூகத்திடையே விரோதத்தை வளர்க்கும் நடவடிக்கை என்று கொள்ளா விட்டாலும் தனது, சொந்த சமூகத்தையே வஞ்சிக்கும் நடவடிக்கை என்றே கூறவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் வளர்ப்புத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட இடம் வாகரை பிரதேசத்தில் மாத்திரமே உள்ளது. தனது அரசியல் செல்வாக்கைப் பாவித்து காங்கேயனோடைக் கிராமத்தைச் சூழவுள்ள இச்சதுப்பு நிலங்களை வறிய விவசாயிகளிடம் மிகக் குறைந்த விலையில் பெறப்பட்டதோடு சில காணிகளுக்கு கள்ள உறுதிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இவ் இறால் வளர்ப்புத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் பின் வரும் விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டே தீரும் என்கின்றனர் மட்டக்களப்பு சூழலியலாளர்கள்.
1. காங்கேயனோடை, மாவிலங்கத்துறை கிராமத்தைச் சூழவுள்ள 42 ஏக்கா வயல நிலங்களும் உவர் தன்மைகொண்டவையாக மாறும்.
2. வெள்ளம் ஏற்படுகின்ற மழைக்காலங்களில் ஆற்றுநீர் இவ்இரு கிராமங்களினுள்ளும் பிரவேசிக்கும்.
3. இக்காணிகளில் உள்ள சதுப்பு நிலத்தாவரங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டு மீன் இனம் உற்பத்தியாவதற்கான சாத்தியம் இல்லாமல் செய்யப்படும்.
4. இறால் வளர்ப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின், வெளியேற்றப்படும் அழுக்கான, இரசாயனத் தன்மை கொண்ட நீர் நேரடியாக மட்டக்களப்பு வாவியைச் சென்றடையும் என்பதால் பல்லாயிரக்கணக்கான வறிய மக்களின் ஜீவனோபாயத்திற்கு ஆதாரமாக உள்ள மட்டக்களப்பு வாவி மேலும் மாசடையும்.
இத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இறால் வளர்ப்புத்திட்டத்தை எப்படியாவது செய்தே தீர வேண்டும் என்ற உறுதியுடன் ஹிஸ்புல்லா இருப்பதாகவே தெரிகின்றது. மீன்பிடித்திணைக்களம், மன்று, பிரதேச சபை, காங்கேயனோடை பள்ளிவாசல் நிர்வாகம், பிரதேச செயலகம், ஊர் பொதுமக்கள் என பலதரப்பட்ட அமைப்புக்கள் இதற்கெதிராகக் குரல் கொடுத்திருந்தும் எதுவுமே ஹிஸ்புல்லாவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.
இவையெல்லாவற்றையும் விட சமூகரீதியான விரோதத்தை அதிகரிக்கும் செயற்பாடாக இவருடைய காத்தான்குடி நீர்விநியோகத் திட்டம் அமைந்துள்ளது.
உண்மையில் காத்தான்குடி தெற்காசியாவிலேயே சனத்தொகை கூடிய ஒரு கிராமம். இதனால் ஏற்பட்ட இட நெருக்கடி காரணமாக சுகாதார முறைப்படி கிணறுகள் அமைக்கப்படாத காரணத்தினால், மலசலகூடக் கழிவுநீர் கிணற்று நீருடன் சேர்ந்து கிணற்று நீர் குடிப்பதற்கு உதவாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதை நிவர்த்தி செய்வதற்காக காத்தான்குடிக்கான நீர் விநியோகத்திட்டம் ஒன்றை பல மில்லியன்கள் செலவில் அமுல்படுத்த ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இதன்படி இந்நீர் விநியோகத்திட்டத்திற்கான நீர் எடுக்கும் கிணறுகள் காத்தான்குடியை அடுத்த தமிழ் பிரதேசமான ஆரையம்பதியில் நிறுவப்படுகின்றன. இத்திட்டத்தை இவர் சமர்ப்பித்து இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கும் வரை இவ்விடயம் எவருக்கும் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டே இருந்தது. விடயம் வெளியே தெரிந்தவுடன் ஆரையம்பதி மக்களும் விசேடமாக மண்முனைப்பற்று பிரேதச சபையும் தமது பலமான எதிர்ப்பையும் ஆட்சேபனையையும் தெரிவித்திருந்தனர். மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் எல்லாம் பலமுறை இவ்விடயம் விவாதிக்கப்பட்டு பலமான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும், ஹிஸ்புல்லா இத்திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே உறுதியாக இருக்கின்றார். இறுதியில் பொலிசாரின் பாதுகாப்புடன் தற்போது ஆரையம்பதில் கிணறு தோண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதை எதிர்த்து பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த பெப். 9ம் திகதி அன்று ஆரையம்பதியில் நடாத்தப்பட்டது.
சூழல் ரீதியாகவும் இக்கிணறு அமைக்கும் வேலைகள் ஆரையம்பதி பிரதேசத்திற்கு நாளடைவில் தண்ணீர்ப் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என்று கூறியும் பிரயோசனமில்லாமல் இருக்கின்றது.
இவ்விடயம் தொடர்பாக ஆரையம்பதி முக்கியஸ்தர் ஒருவரிடம் கேட்டபோது நாங்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல, ஆனால் இதனால் எங்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்தைச் சுட்டிக்காட்டியும் கூட ஹிஸ்புல்லா அவர்கள் அதையெல்லாம் புறக்கணித்து தனது அதிகார பலத்துடன் இதை நிறைவேற்ற முன்வந்திருப்பது ஒரு போதும் அனுமதிக்கப்பட முடியாத விடயம். அவர் முஸ்லிம்களிடம் வாக்குப் பெறவேண்டும் என்பதற்காக நாங்கள் பாதிக்கப்பட முடியாது. இதற்கு எதிராக இறுதி வரை போராடுவோம் என்றார்.
இவ்விடயம் தொடர்பாக காத்தான்குடி எல்லைவீதியைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர் ஒருவரிடம் அபிப்பிராயம் கேட்டபோது, தற்போதுதான் தமிழ் மக்களுடன் சுமுகமாகப் பழகுகின்றோம். கடந்த வன்செயல்களினால் எமக்கு ஏற்பட்ட இழப்புக்களைக் கணிப்பிடுதல் இயலாது. அவ்வாறான ஒரு நிலை ஒரு போதும் ஏற்படக்கூடாது. ஆனால், காத்தான்குடியைப் பொறுத்தவரை குடிநீர் ஒரு முக்கிய தேவையாகவே இருக்கின்றது. இதை ஆரையம்பதி தமிழர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். எனவே இரு தரப்பினரும் கலந்துரையாடி சுமூகமான தீர்வுக்கு வரவேண்டும் எனக் கூறினார்.
இதே விடயம் தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள உயரதிகாரிகளுடன் கதைத்தபோது, இவ்விடயம் சிக்கலானதுதான். இரண்டு பக்கங்களிலும் நியாயங்கள் இருக்கின்றன. மட்டக்களப்பு நகருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கின்றது. இதற்கான தீர்வாக கடந்தபல வருடங்களாக முன்வைக்கப்பட்ட உன்னிச்சைக் குளத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு நீர்வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தினால், அந்நீரைக்கொண்டே காத்தான்குடிக்கும் நீர் வழங்கலாம். அவ்வாறு செய்தால் பல பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.அத்திட்டத்தை அமுல் படுத்த பல மில்லியன்கள் செலவாகும். எனவே ஹிஸ்புல்லா உட்பட சகல அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் ஒன்றுபட்டு உன்னிச்சை நீர்வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தினால் பிரச்சினை சுமூகமாகத் தீர்ந்து விடும் என்றார்கள்.
ஆனால், மட்டக்களப்பு தமிழ் அரசியல்வாதிகளோ அசல் பச்சோந்திகளைப் போன்று இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் ஒரு கதை, பாராளுமன்றத்திற்கு வெளியே ஒரு கதை, கொழும்பில் ஒரு கதை, வெளிநாட்டில் இன்னொருகதை, மட்டக்களப்பிற்கு வந்தால் முன்பு பேசியவற்றையெல்லாம் மறந்துவிட்டு புதுக்கதை என்று. எனவே இவர்கள் தற்போது குடிநீர்ப் பிரச்சினை காரணமாக எழுந்துள்ள இரு சமூகங்களின் நெருக்கடியைத் தீர்க்க முன்வருவார்களா என்பதே கேள்வி.

---

தமிழர்களுடைய தாயக்க் கோரிக்கை உச்சநிலையை அடைந்த காலத்தின் பின் அதனூடாக நடைபெற்ற, நடைபெறுகின்ற அரசியல், போராட்டங்களின் விளைவால் எழுந்த அனுபவங்கள், பாதிப்புக்கள் வாயிலாக - நீண்ட காலமாய் தமிழர்களையும், முஸ்லிம்களையும் வடக்கு கிழக்கில் பிணைத்திருந்த "தமிழ் பேசும் மக்களின்" அரசியல் தலைமைத்துவம் என்ற கூட்டு, தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம், முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் என வெவ்வேறாக பிரிந்து போயிற்று. அப்பிரிவின் ஊடாக தமிழர்கள் தங்களுக்கென தனி அதிகார அலகு கோரும் நீண்ட கால கோரிக்கையின் ஊடே, இன்று முஸ்லிம்களும் தங்களுக்கென்ற அதிகார அலகொன்றை கோரி நிற்கின்றனர். இது பற்றி இன்று அரசியல் அரங்கில் பலத்த கேள்விகள் எழுப்பப்பட்டு வருகிறது.
தமிழர்களின் அளவிட முடியா தியாகங்களின் பின்னும், சிங்கள மேலாதிக்கவாதிகள் தமிழர்களுடைய நியாயமான தாயகக்கோட்பாட்டை ஏற்க மறுத்து வரும் இன்றைய சூழலில் முஸ்லிம்களின் இக்கோரிக்கையானது சிங்கள மேலாதிக்கவாதிகளாலும் தமிழ் இனவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுவதற்கு ஒரு சிறு ஒளிக்கீற்றாலும் தென்படும் என்ற நம்பிக்கை இல்லாத நிலையில்; முஸ்லிம்களின் தனி அதிகார அலகு பற்றிய கோரிக்கையின் நியாய, சாதக, பாதக தன்மைகள் பற்றி அரசியல் வாதிகள், இனவாதிகளை விடுத்து சாதாரணமான வடக்கு - கிழக்கில், தெற்கில், வாழும் முஸ்லிம்களின், தமிழர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளுதலானது இக்கோரிக்கைபற்றிய சந்தேகங்களையும் அச்சங்களையும் இல்லாது ஒழிப்பதற்கும் இக்கோரிக்கை பற்றிய மக்களின் கருத்துக்களை அரசியல் அரங்கிற்கு கொண்டுவரும் மார்க்கமாகவும் கொள்ளலாம்.
ஆகவே, முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு பற்றி வடக்கு - கிழக்கு தெற்கில் வாழும் முஸ்லிம், தமிழ் மக்கள் தங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களை சரிநிகரின் ஊடாக எழுதுங்கள். ஆரோக்கியமான தளத்தில் உங்களுடைய கருத்துக்கள் விமர்சிக்கப்படுவதற்கு களம் ஏற்படுத்தப்படும். நமக்குள் இருக்கும் அனைத்துக் கருத்துக்களையும் நியாயமான விமர்சனத்தின் ஊடாக சுத்தமாக்கிக் கொள்வோம்!

## சொல்வதைத்தவிர வேறு வழியில்லை!...

## முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு கோரிக்கை குறித்து வடக்கு கிழக்கு தெற்கு மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

முஸ்லிம் மாகாணக்கோரிக்கை 1985ம் ஆண்டளவில்தான் அரசியல் அரங்கில் முன் வைக்கப்பட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளராக விருந்த எம்.ஐ.எம். முஹியத்தின் அவர்கள் தான் இக்கோரிக்கையின் முதற் குரல்! சர்வகட்சி மகாநாடு தொடக்கம் தேர்தல் மேடைகள் வரை இக்கோரிக்கை சொல்லப்பட்டு வந்திருக்கிறது. முஸ்லிம் லீக்கில் எம்.ஐ.எம் முஹியத்தின் அவர்கள் அங்கம் வகித்த காலத்திலேயே தான் முதன் முதலாக இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது.
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி கிழக்கில் அதிகம் செல்வாக்குப் பெறாததும் அதன் கீழ் முஸ்லிம்களை ஒன்றுதிரட்ட அக்கறைப்படாததாலும் 1982ம் ஆண்டு ஒரு அமைப்பாக தோற்றம் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ், ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட் பின், வடக்கு - கிழக்கில் நடைபெற்ற தேர்தல்களில் முஸ்லிம் மாகாணத்தை பெற்றுத் தருவதே நோக்கமென முஸ்லிம்களிடம் சொல்லி வந்திருக்கிறது.
அண்மையில் கூடவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன், முஸ்லிம் காங்கிரஸினால் இக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கோரிக்கை குறித்து முஸ்லிம் மக்களிடையே பலத்த கேள்விகள் எழுப்பப்பட்டு வருகிறது. அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் ஒரு கருத்தையும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் ஒரு கருத்தையும் வடக்கே தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் இன்னுமொரு கருத்தையும் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.
முஸ்லிம்களுக்கு தனி அதிகார அலகு கோரும் கோரிக்கையானது சாதாரணமான மக்களிடத்தே இன்னும் தெளிவுபடுத்தப்படாததாகவே உள்ளது. ஆனால், இப்போது முஸ்லிம் காங்கிரசினால் தெரிவுக்குழு முன் வைக்கப்படவுள்ள யோசனைகள் குறித்து அறியப்படக்கூடியதாகவுள்ளது. இவ்யோசனைகள் குறித்து ஏனைய அரசியல் கட்சிகள்; முஸ்லிம் அமைப்புக்கள் இன்னும் தங்களது கருத்துக்களை தெரிவிக்கவில்லை.
இரண்டு வகையான யோசனைகளை முஸ்லிம் காங்கிரஸ் கொண்டுள்ளது. இவ்யோசனைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைக் கோருகிறார். அவ்யோசனைகளாவன:-

நன்கிழக்கு மாகாணசபை.
இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கான உபஅலகு.

***1. தென்கிழக்கு மாகாணசபை***

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை மையமாகக் கொண்ட தென்கிழக்கு மாகாண சபை எனும் தனி அதிகார அலகு. இத்தனியான அதிகார அலகுடன் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் இணைக்கப்படல் வேண்டும்.
இணைக்கப்பட வேண்டிய பிரதேச சபைகளாவன:-
காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, குச்சவெளி, கிண்ணியா, தம்பலகாமம், புல்மோட்டை, மன்னார், எருக்கலம்பிட்டி, முசலி ஆகியனவாகும். இச்சபைகள் நிலங்கள் தொடர்பற்றதும், அதிகாரங்கள் தொடர்புடையதுமாக அமையும்.

***2. இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கான உபஅலகு!***

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தொகுதிகளுடன் வடக்கு கிழக்கிலுள்ளஏனைய முஸ்லிம் பிரதேச சபைகளை இணைப்பதுடன், இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கான உபஅலகு.
இவ் உபஅலகு தனித்துவமாக இயங்க அமைக்கப்படுவதோடு; வடக்கு கிழக்கு மாகாண அரசில் உதவி முதலமைச்சர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அது முஸ்லிம் ஒருவருக்கு வழங்கப்படுவதுடன் வேறு இரண்டு அமைச்சர் பதவிகளும் வழங்கப்படவேண்டும். உதவி முதலமைச்சர் வடகிழக்கின் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பொறுப்பானவராக இருக்க வேண்டும். மற்ற இரு அமைச்சர்களும் கல்வி, காணி, விவசாயம், நீர்ப்பாசனம், சுகாதாரம் ஆகிய முக்கியமானவற்றில் சிலவற்றை வழங்கவேண்டும்.
முஸ்லிம் காங்கிரசின் இக்கோரிக்கைகள் குறித்து முஸ்லிம்கள் மௌனம் சாதிக்கக் கூடாது! தமிழ் மக்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லத் தயங்கக் கூடாது! இதனுடைய விளைவுகளை அனுபவிக்கப் போகிறவர்கள் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களுமே, எனவே - உங்கள் நியாயமான கருத்துக்களை எழுதுங்கள்!



www.tamilarangam.net

www.tamilarangam.net





# குட்டை குழப்பும் ஐ.தே.க. பூச்சொருகும் பொ.ஐ.மு. காதை நீட்டும் தமிழ்க் கட்சிகள்!

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக அல்லலுற்று வரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சந்திரிகாவின் மூலமேனும் ஒரு சுமூகமான தீர்வைக் கண்டிடலாம் என்ற தமது சற்றும் மனந்தளராத முயற்சியில், தமிழர் விடுதலைக் கூட்டணியும், முன்னாள் விடுதலை அமைப்புகளும் மீண்டும் களத்தில் இறங்கி பல மாதங்கள் உருண்டோடிவிட்டன.

அரசு தனது தீர்வுப் பொதியை ஒரு சட்ட வரைவாக ஜனவரி 16ம் திகதி வெளியிட்ட பின்னர் தமிழ்ப் பிரதிநிதிகள் மிக முனைப்பாக அரசுடனும், ஐக்கிய தேசியக்கட்சியுடனும், மற்றும் தென்னிலங்கையில் உள்ள பல அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஆர்வமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தத் தீர்வுப் பொதிவிடயத்தில் தமிழரின் ஐக்கியப்பட்ட ஒரு நிலைப்பாடு முக்கியம் என்ற அடிப்படையில் ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல.எப், ஈரோஸ் ஆகிய ஐந்து அமைப்புகளும் ஓரணியில் இணைந்து செயல்படுகின்றன.

கூட்டணி வழமைபோல் தனித்துத்தன் வேலைகளில் ஈடுபடுகிறது.

ஐந்து இயக்க அணி ஒரு புறமாகவும் கூட்டணி மறுபுறமாகவும் தீர்வுப்பொதியின் சட்ட வரைவு பற்றி அடிக்கடி பேசுவதாலும், பல முக்கிய சந்திப்புகளில் ஈடுபடுவதாலும் இவற்றிற்கெல்லாம ஒழுங்காக பத்திரிகைகளில் விளம்பரம் கிடைப்பதாலும் மக்கள் மத்தியில் தீர்வு ஏதோ விரைவில் கையில் கிடைத்துவிடும் என்பது போன்ற எண்ணம் தோன்றக்கூடிய ஒரு சூழல் உருவாகியுள்ளது.

உங்களுக்கும் உங்களது சந்ததிகளுக்கும் ஒரு கௌரவமான தீர்வைப் பெற்றுத்தருகிறோம் எனத் தமிழ் மக்களது ஜனநாயக வழிப்பிரதிநிதிகள் இழுத்தடித்தது நாற்பது வருடங்களுக்கு மேலாக.

அதன் பின்னர் தமிழ் ஜனநாயகவாதிகள், துரோகிகள், ஆயுதப் போராரட்டமே சரியான வழி என வந்தவர்கள் கூட தீர்வொன்றை நாம் சிங்களத் தலைமைகளிடமிருந்து பெற்றுத்தருகிறோம் எனக் கூறத்தலைப்பட்டு இப்போது ஒன்பது வருடங்கள் உருண்டோடிவிட்டன.

இவ்வாறு காத்திருந்து, காத்திருந்து இலவ மரத்துக்கிளிகளாய் அல்லற்பட்டு நிற்கும் தமிழ் மக்களுக்கு மீண்டும் தடபுடலாகக் கானல் நீர் அள்ளப் புறப்படு முன்னர் தீர்வுப் பொதி தொடர்பான உண்மை நிலவரத்தை இம்முறையாவது வெளிப்படுத்த அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் குழுக்களும் முன்வர வேண்டும் என்பதே எமது அவா.

இதில் குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்னவெனில் தமிழ்ப் பிரதிநிதிகள் பலருக்கே இது சரிவராது என்ற எண்ணம் உள்ளது. அதை வெளிநாட்டு இராஜ தந்திரிகளிடமும், நெருங்கிய நண்பர்களிடமும் கூறுகின்றார்களே ஒழிய மக்களிடம் கூறத்தயங்குகிறார்கள்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று, இதைச் சொன்னால், அரசாங்கத்திற்கு பாராளுமன்றில் ஆதரவளித்து என்ன சிரைக்கிறீர்கள் என மக்கள் கேட்பர் என்ற ஒரு சஞ்சலம். இரண்டு, நாமும் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக்காண்பதற்காக அவர்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் அயராது முயற்சிக்கிறோம் என்ற மயக்கத்தை நீடிக்க முடியாது போய்விடும் என்ற கவனம்.

அரசு முன்வைத்த தீர்வுப் பொதியின் சட்ட வரைவைத்தாம் விரும்பிய திருத்தங்களுடன் சட்டமாக்குவதில் தமிழ்கட்சிகளும் குழுக்களும் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?

முதலாவது, அரசின் நிலைப்பாடு: இம்மாதம் 25ம்திகதி ஐந்துகட்சிக்கூட்டு ஜீ. எல். பீரிஸை தீர்வுப் பொதி தொடர்பாக அதிகார பூர்வமாகச் சந்தித்தன என்பதும், சட்ட வரைவில் தாம் சிக்கலெனக் கருதிய 5 விடயங்கள் பற்றியும், அதிகார அலகு தொடர்பாகவும் பேசின என்பதும் பத்திரிகையில் வந்த செய்தி. அவர்களிடம் ஜீ.எல். பீரிஸ் அடிப்படையாக வலியுறுத்தியது என்ன? ஐ.தே.கவை நீங்கள் எவ்வாறாயினும் வழிக்குக் கொண்டுவரப்பாருங்கள். அந்தக் கட்சி அரசியல் யாப்பின் இரண்டாவது சரத்து பற்றியும், 76வது சரத்து பற்றியும் தற்போது கொண்டுள்ள நிலைப்பாட்டை மாற்றினால் எல்லாம் சுமூகமாக நடைபெறும் என்று அவர் கூறினாராம். அத்துடன் வடகிழக்குத் தாயகம், பௌத்த மதத்திற்குச் சட்டநகலில் கொடுக்கப்பட்டுள்ள அதிமுதன்மை, மாநில சபைக்கான காணியதிகாரம் மற்றும் இன்னோரன்ன குறைகளை பெரிது படுத்தி வெளிப்படையாகக் கூக்குரலிடாதீர்கள் என்றும் அவர் ஐந்து தமிழ்க்கட்சிகளிடமும் கேட்டுக்கொண்டார்.

(இதற்கு முதல்நாள் மாலை இக்கட்சிகள், இன்று பொதுஜன முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளை சந்திக்கப் போனபோது கூட இந்த ஆலோசனை கூறப்பட்டது என்பதும் கவனிக்கப்படவேண்டிய விடயம்.)

''நீங்கள் எம்மை ஐ.தே.கவை வழிக்குக் கொண்டு வாருங்கள் எனக் கூறி அனுப்புவதை விடுத்து, உங்களது நிலைப்பாட்டை முதலில் திட்டவட்டமாகப் பிரேரியுங்கள். அதுதான் உங்கள் கடமை'' என ஜீ. எல். இற்கு இக்கூட்டத்தில் பதிலிறுத்த ரெலோ ஆலோசகர் சிறீகாந்தாவின் கூற்றை நாம் கவனிக்கவேண்டும். முன்னர் தமிழ்க்கட்சிகளை பகைக்காமல் தனக்கு நெருக்கமாக வைத்துக் கொள்வதற்கும் அதே வேளையில் அவர்களுக்கு தீர்வுத் தொடர்பாக ஒரு திட்டவட்டமான உறுதிமொழியைக்கொடுத்து அதன் மூலம் சிங்கள எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொள்ளாமல் இருப்பதற்குமாக பிரேமதாசா கையாண்ட தந்திரத்திற்கொப்பானதே இன்று ஜீ.எல். பீரிஸ் தமிழ்க் கட்சிகளை ஐ.தே.கவின் பின் அனுப்புவது.

இதைப் புரிந்துக் கொள்ளமுடியாத அரசியல் அப்பாவிகள் அல்ல நம் தமிழ்ப்பிரதிநிதிகள். பிரச்சினை என்னவெனில் 87 இற்குப் பின்னர் அவர்கள் விக்கிரமாதித்தர்கள் ஆகிவிட்டார்கள் என்ப்து தான் உண்மை. (சிங்கள இனவாதம் எனும் முருங்கை மரத்தில் தொங்குகிறது தீர்வு எனும் வேதாளம்)

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்தில் பிரேமதாசா ஒரு சர்வகட்சி மாநாட்டினை தொடர்ந்து நடத்தி வந்தது தெரிந்தவிடயம். அது பிசுபிசுத்துப் போக அவர் பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரத்தினை ஆரம்பித்தார். இது தமிழ்க்கட்சிகளின் முழுமையான ஆதரவு அவருக்குத் தேவைப்பட்ட காலம். இக்கால கட்டத்தில் தமிழ்க்கட்சிகள் தீர்வுத்திட்டம் ஒன்று பற்றிய உறுதிப்பாட்டை அவரிடம் எதிர்பார்த்துச் சென்ற போதெல்லாம் அவர் கூறுவார். ''எனக்கு ஒரு தீர்விற்கு உடன்படுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் நீங்கள் முஸ்லிம் காங்கிரசுடனும் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்தபின் என்னிடம் கூறினால் காரியத்தை முடிக்கலாம்'' என்று. அவருக்குத் தெரியும் அஷ்ரஃப்பைப் பற்றி.

கொஞ்ச நாள் பிரேமதாசாவின் கதையைக் கேட்டு தமிழ்க்கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன்பேசிப்பார்த்தன. சரிவரவில்லை. காலம் ஓடிற்று. பிரேமாவை எதிர்க்கவும் முடியவில்லை. தீர்வைப் பெறவும் முடியவில்லை. இன்று ஜீ.எல். உம் சந்திரிகாவும் இதைத்தான் செய்கிறார்கள்.

ஐ.தே.கவிடம் தமிழ்க்கட்சிகளை அனுப்பினால் அவை வெறுங்கையுடன்தான் திரும்பும் என்பது அவர்களுக்குத் தெரியாததொன்றல்ல.

ஒற்றையாட்சி முறை, வடகிழக்கு இணைப்பு ஆகியவற்றில் ஐ.தே.கவிட்டுக் கொடுக்காது என்பது தெரிந்தவிடயம். எனவே ஐ.தே.கவை வழிக்குக் கொண்டு வரும் பணியில் தமிழ்க்கட்சிகளை இறக்கி விட்டால் அவற்றிற்கும் ஐ.தே.கவிற்குமிடையிலான முரண்பாடு பெருகி அதன் மூலம் அக்கட்சிமீது தமிழரின் வெறுப்பும் அதிரிக்கும் என்பதும், அங்ஙனமில்லாமல் தற்செயலாக பிரச்சினையான விடயங்களில் ஐ.தே.க. விட்டுக் கொடுத்துவிடுமெனில், அதற்குரிய கைதட்டலும் தமிழர் மத்தியிலிருந்து தமக்கே கிடைக்கும் என்பதும், இறுதியில் தீர்வுப் பொதி வெற்று வேட்டாயிற்று எனத் தமிழ் மக்கள் உணரத் தலைப்படும் போது குற்றச் சாட்டை ஐ.தே.க. மீது சுமத்தலாம் என்பதும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கணக்கு. இதைச் சரியாகப் புரிந்துகொண்டு எதிர்க்கணக்குப் போட்டு மிகச் சாதுர்யமாக வேலை செய்கிறது ஐ.தே.க.

முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னாந்து தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு குழுவொன்றை நியமித்துள்ளது அக்கட்சி. தமிழ் அமைப்புகளுடனான பேச்சுவார்த்தைகளை அக்குழுவே கையாள்கிறது. முதலில் கூட்டணி சந்தித்தது. வீரகேசரியில் தடபுடலாக முன்பக்கப்படமும் செய்தியும் வந்தன. நடந்தது என்ன?

கூட்டணிப் பிரமுகர் கூறியவற்றையெல்லாம் கவனமாய்க் கேட்ட ஐ.தே.க. வினர் நாம் இவற்றை எமது செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கிறோம் என மட்டும் கூறினர்.

பின்னர் ஐந்து கட்சிகள் சந்தித்த போதும் இதே பதில். தமிழ்ப் பிரதிநிதிகள். வடக்கு கிழக்கு இண்ணப்பு, பௌத்தம், ஒற்றையாட்சி முறைநீக்கம் ஆகியன பற்றிக் கூறியவற்றை ஐ.தே.க மறுத்துரைக்கவில்லை. எல்லாவற்றையும் நாம் கட்சியின் செயற்குழுவிடம் இடம் சமர்ப்பிக்கிறோம் என்றே மீண்டும் மீண்டும் கூறப்பட்டது.

ஏன் இப்படி நடந்து கொள்கிறது ஐ.தே.க.? மூன்றாம் ஈழப்போர் வெற்றி தோல்வியின்றி நீடிக்கப் போகிறது. அது ஏற்கெனவே தமிழ் மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இனியும் பாதிக்கப்போகிறது. இதன் காரணமாக சந்திரிகாவை ஒரு காலத்தில் தலைமேல் வைத்துக் கொண்டாடிய தமிழ் மக்கள் அவரையும் பொ.ஜ.ஐ.முவையும் விரைவில் மிகவும் வெறுக்கத் தொடங்கி விடுவார்கள். நிலைமை இப்படியிருக்கும் போது தீர்வுப் பொதி சட்டமாகுவதற்கும் நாம் ஆதரவளித்து அது நடைமுறைக்கு வந்தால் சந்திரிகாவிற்கே அக்காரியத்தைச் சாதித்த பெருமை போய்ச் சேர்ந்துவிடும். தமிழர் மத்தியில் அவருக்கு இன்று விரைவாகச் சரிந்து போய்க்கொண்டிருக்கும் ஆதரவு மீண்டும் நிமிர்ந்து விடும். எனவே நாம் ஏன் மடத்தனமாக சந்திரிகாவிற்கு தமிழ் ஆதரவுப் பெருகிட உதவ வேண்டும் என்பது ஐ.தே.கவின் சிந்தனை.

சென்ற முறை பொதுத்தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் டி.பி.விஜேதுங்க செய்து போன கைங்கர்யத்தின் காரணமாக, சிறுபான்மையினரின் வாக்கு தம் கட்சிக்கு விழாமற் போனதாலேயே தாம் தோற்க வேண்டியதாயிற்று எனவும், சந்திரிகாவின் பெரிய வெற்றிக்குக் காரணம் சிறுபான்மை வாக்குகள் அதிலும் குறிப்பாகத் தமிழ் வாக்குகள் அவர் பக்கம் திரும்பியமையே எனவும், ஐ.தே.க சரியாகவே கருதியுள்ளது.

இந்நிலையில் தமிழ் வாக்குகளை சந்திரிகாவிடம் இருந்து அந்நியப்படுத்தித் தம் பக்கம் இழுக்கின்ற வேலையை சிங்கள மக்களை விரோதிக்காத வகையில் செய்ய வேண்டும் எனக் களத்தில் இறங்கியுள்ளது ஐ.தே.க. ஒரு பக்கத்தில் டொக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் ஊடாக தான் மட்டுமே வடக்கு அகதிகள் பற்றி மிகவும் கவலையும் அக்கறையும் கொண்டுள்ளதாகக் காட்டுகிறது. தமிழ்க் கட்சிகளை உடனுக்குடன் சந்தித்து மிகக் கரிசனையாக அவர்களது கருத்துக்களைக் கேட்கிறது. தமிழ்ப் பத்திரிகைகளில் தான் தமிழர் மீது கரிசனை கொண்டுள்ளது போல் காட்ட முற்படுகிறது.

மறுபக்கம்தான் ஒற்றையாட்சி விடயத்தில் விட்டுக் கொடுக்கப்போவதில்லை எனவும், தமிழர் தாயகக்கோட்பாட்டை அங்கீகரிக்கப் போவதில்லை எனவும், ஆங்கில, சிங்கள பத்திரிகைகளுக்கும் மற்றும் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலும் திட்டவட்டமாகக் கூறிவருகிறது.

ஐந்து தமிழ்க்கட்சிக் கூட்டு அண்மையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசியபோது ஐ.தே.கவின் இவ்விரண்டு நிலை தெடடத் தெளிவாகவே வெளிப்பட்டது. ''எமதுகட்சியில் தீர்வுப் பொதி தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. நாங்கள் இவற்றைத் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று கூறினார் அவர் போனவர்களிடம். சந்திப்பின் முக்காற் பகுதி நேரத்திற்கு மேலாக ரணிலிடம் ரெலோ சிறிகாந்தாவே பேசினார்.

புலிகளுக்கு வடக்கில் தற்போது மக்கள் மத்தியில் ஆதரவு கணிசமாக வீழ்ந்து வருகிறது; பிரபாகரனின் பிறப்பிடமான வல்வெட்டித் துறையில் கூட அவருக்கான ஆதரவு வீழ்ந்து விட்டது. எனவே இந்நிலையில் தீர்வுத்திட்டம் ஒன்று நடைமுறையாகிறதெனில் தமிழ் மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கும். அதனால் ஐ.தே.க. பொதி நடைமுறையாக ஆதரிக்க வேண்டும் என ரணிலுக்கு எடுத்துரைத்தார்.

இதற்கு முன்னர் ஐ.தே.கவுடன் ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டு நடத்திய பேச்சின் போது ரெலோ சார்பில் சென்றிருந்த சிவாஜிலிங்கம் புலிகளை உட்படுத்தியே ஒரு சமாதானத் தீர்வு அமைய வேண்டும் என்பதே தமது அமைப்பின் திட்டவட்டமான நிலைப்பாடு எனக்கூறியிருந்தார். புலி விசயத்திலும் ஐந்து கட்சிக் கூட்டணிக்குள் முரண்பட்ட கருத்து நிலவுவதைப் பேச்சுக்களின போது கண்டறிந்த ஐ.தே.க. அதனையும் பயன்படுத்தி மேலும் குட்டையைக் குழப்பி காரியத்தை கொண்டு போகலாம் என எண்ணுவது வெளிப்படை.

இதனிடையில் தீர்வுப் பொதியின் சட்டவரைவில் பல முக்கிய மாற்றங்களை வலியுறுத்தவென ஜனாதிபதியைக் கடந்த 29ம் திகதி சந்திக்க இருந்தனர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

சந்திப்பு கடைசியில் ரத்தாயிற்று.

ஆனால் அதே வேளை டக்ளசுடன் சந்திரிகா அடிக்கடி நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார். மீண்டும் இடைக்கால நிர்வாக சபை பற்றி ஒரு இணக்கம் இச்சந்திப்புகளின் மூலம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அரசிற்கு தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றி எந்த விதமான திட்டவட்டமான நிலைப்பாடும் இல்லை என்பதும்; இது விடயத்தில் சுற்றிவளைத்துப் பேசி தமிழ்ப் பிரதிநிதிகளின் காதில் நயமாகப் பூச்சுற்றுவதே ஐ.தே.கவின் குறிக்கோள் என்பதும் இவற்றிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இருகட்சிகளுக்கும் தேவை ஒன்றே ஒன்று. அது தமிழ் மக்களின் மொத்த வாக்கு. அதை சிங்கள மக்களைப் பகைக்காமல் எவ்வாறு பெற்றுத் தக்கவைத்துக் கொள்வது என்பது தான் ஐ.தே.கவுக்கும் பொ.ஜ.ஐ.முவுக்கும் உள்ள பெருங்கவலை.

அரசும் ஐ.தே.கவும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு என்ற விடயத்தை இந்தக் கவலையின் வட்டத்தினுள் வைத்துத்தான் எடைபோடுகின்றன.

பாராளுமன்றப் பாதையூடாகவும், சிங்களத் தலைமைகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் ஊடாகவும் தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியாததெனவும், அங்ஙனம் முயன்றவர்கள் இனத் துரோகிகள் எனவும் இன்றைய ஐந்து கட்சிக் கூட்டில் உள்ள ஒவ்வொரு அமைப்பும் தமிழ் மக்கள் மத்தியில் 87ம் ஆண்டிற்கு முன்னர் ஆணித்தரமாகப் பிரச்சாரம் செய்தது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

ஜனநாயக வழியில் சிங்களதலைமைகளுடன் பேசி ஒரு தீர்வைப் பெறலாம் என முற்பட்ட ஒரு சிலருக்கு இவ்வியக்கங்கள் மரண தண்டனை வழங்கியதும் உண்மை.

பேசிப் பேசி எதுவும் கிடைத்ததில்லை. அடி, உதை, கொலை, கொள்ளை, நிலப்பறிப்பு என்பவற்றைத் தவிர என்ற, கசப்பான அனுபவம்தான் இவ்வியக்கங்கள் உருவாகி வளர்ந்த காரணம் என்பது தமிழ் மக்கள் மறந்து போய்விட்ட ஒன்றல்ல.

எனவே தீர்வுப் பொதியின் பின் ஓடித்திரியும் இயக்கங்களிடம் பின்வரும் கேள்விகளை நொந்து வாடும் தமிழ் மக்கள் சார்பாகக் கேட்கிறேன்.

1. நீங்கள் பேச்சுவார்த்தைகளில் இறங்கிய பின்னர் ஒன்பது வருடங்கள் போய்விட்டன. ஒழுங்காக நடத்தக்கூடிய கிராமசபை அதிகாரமாவது இரந்து பெற்றுத் தந்தீர்களா?

2. இப்படியே பேசிப் பேசி மேலும் வருடங்கள் ஓடும் போது இனிவரும் இளையதலைமுறை, நீங்கள் அன்று கூட்டணியை நோக்கிக் கூறியதையே உங்களை நோக்கிக் கூற முற்பட்டால் என்ன செய்யப்போகின்றீர்கள். அந்த இளைய தலைமுறையை புலி என முத்திரை குத்தி அரச துணையுடன் அழிக்கப் போகின்றீர்களா?

3. தனித் தமிழ் ஈழம் தான் ஒரே தீர்வு என தமிழ் மக்கள் ஏகோபித்த கருத்தை 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெளிப்படுத்தினர். அதன் பின்னர் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களித்த ஒரு தேர்தலும் இன்று வரை நடைபெறவில்லை. எனவே 77 மக்கள் ஆணையின் அரசியல் வலு இன்றும் மறைந்திடவில்லை. நீங்கள் இன்று கடைபிடித்தொழுகும் ஜனநாயக வழிமூலமே அவர்கள் தம் தீர்மானத்தை வெளிப்படுத்தினார்கள். இந்நிலையில் எந்த அரசியற் - தார்மீக அடித்தளத்திலிருந்து நீங்கள் அவர்களிடம் பேசுகிறீர்கள்?

4. எந்த அரசியற் - தார்மீக அடித்தளத்திலிருந்து நீங்கள் இன்று அவர்களிடம் ஐ.தே.கவையும், பொ.ஜ.ஐ.முன்னணி அரசையும் பரிந்துரைக்கின்றீர்கள்?

5. 77 பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் செய்த காரியம் முட்டாள்தனமான காரியம் என நீங்கள் உள்ளூரக் கருதுவதால்தான் தீர்வுப் பொதிவிடயமாக ஐ.தே.கவும், பொ.ஜ.ஐ.முவும் நயமாகப் பேசிவைக்கும் பூவிற்கெல்லாம் பவ்வியமாகக் காதை நீட்டுகிறீர்களா?

7. அங்ஙனமாயின் ''தமிழ் மக்களே நீங்கள் முட்டாள் என நாம் நினைக்கின்றோம்'' எனக்கூறிட ஏன் நீங்கள் இனியாவது முன்வரக்கூடாது?

டீசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரே அரசில் இரு மலையக அமைச்சர்கள்: இருந்தும் கதி இதுதான்!

— தோட்டக்காட்டான்.



175 ஆண்டுகளுக்கு மேல் இந்த நாட்டில் அடிமை வாழ்க்கை வாழ்ந்துவரும் மலையக மக்கள் இந்நாட்டின் ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்படாமையும் அவர்களின் உரிமைகள் அடிபபடை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இன்னமும் வாழ்ந்து கொண்டுள்ளார்கள். இப்படியான நிலையில் இவர்களுடைய ஊ.சே. நிதி பறிபோகும் நிலையும் அண்மித்துக்கொண்டு வருகிறது.

இந்த நாட்டில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து இவர்கள் வந்து குடியேறி 175 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இன்னும் இவர்கள் அடிமைப்பிடியிலிருந்து விடுவிககப்படவில்லை. இந்த சூழ்நிலையிலேதான் 1948ம் ஆண்டு இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. கிடைத்து ஆறுமாதத்தில் இந்த மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர் என்ற முத்திரைகுத்தப்பட்டது. இதற்கு முன்பு மலையகம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பத்துப்பேர் இருந்தார்கள்.

இதனைப் பொறுக்கமுடியாத சில இனவாதிகளால் இவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இந்தப் பரிதாப காரணத்தால் தங்களின் பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்ப இந்த மக்களுக்கு தகுதியில்லாமல் போய் விட்டது. அதன் பின்பு நீண்ட நாட்களாக நாடற்றவர்களாகவே வாழ்ந்து வந்த இம்மக களுக்கு 1988ம் ஆண்டு வாக்குரிமை வழங்கி இந்நாட்டு பிரசைகளாக ஏற்றுக் கொண்டார்கள். இதுவும் வர்த்தமானி பிரகடனம் செய்யாமல் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. இந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி இப்போது எமது மக்களின் பிரதிநிதிகளாக ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது செயல்பட்டு வருகிறார்கள். இதில் ஒரு முழு மந்திரியும், ஒரு அரை மந்திரியும் இருக்கின்றார்கள். இந்த அரை மந்திரிக்கும் முழு மந்திரிக்குமிடையில் புரிந்துணர்வு இல்லை. இந்த மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. தொண்டமானின் யோசனையை ஏற்றுக்கொள்வதா? இல்லை சந்திரசேகரனின் யோசனையை ஏற்றுக்கொள்வதா? என மக்களுக்குள் ஓர் குழப்ப நிலை தற்போது உருவாகியிருக்கிறது. இதை சற்று விளக்கமாக சொல்வதென்றால் இவர்கள் இருவரின் கொள்கையிலும் வெவ்வேறான கருத்துக்களைக் காணக்கூடியதாகவுள்ளது. உதாரணம்: இந்திய வம்சாவளியினரா, இல்லை மலையக மக்களா என்ற வாதம்.

ஒருவர் சொல்கிறார் இந்திய வம்சாவளியினர் என்று, மற்றவர் சொல்கிறார் மலையக மக்கள் என்று. இவை இரண்டிற்கும் என்ன வேற்றுமையுண்டு? ஏன் எம்மை இப்படி இனம் காட்டிக்கொள்ளவேண்டும் என மக்களுக்கு விளக்கம் சொல்லத்தேவையில்லை. கல்வி அறிவு குறைந்த இந்த மக்களுக்கு விளக்கம் கொடுப்பது இவர்களின் கடமையல்லவா! இதைவிடுத்து இந்த விடயத்தில் இவர்களுக்குள் ஏன் பிடிவாதம்.

மற்றது தொண்டமான் சொல்கிறார் மலையக மக்கள் வாழும் வீடுகளும் சூழவுள்ள இடங்களும் அவர்களுக்கே சொந்தமாக வேண்டுமென. சந்திரசேகரன் சொல்கிறார்; இம்முறை அவ்வளவாக திருப்தியில்லை. 175 ஆண்டுகள் பழமை வாய்ந்த லயக்காம்பராக்களை உடைத்து விட்டு புதிய நவீன முறையில் வீடுகள் கட்டிக்கொடுப்தோடு தோட்டப்புறங்களை கிராம மயமாக்கப்படல் வேண்டும் என இவை இரண்டுக்குமிடையில் எவ்வளவு வித்தியாசம் உண்டு. இந்த இரண்டு திட்டங்களுக்கும் இடையில் "நியாயமான கருத்துக்களை இப்படிச் சொல்லலாம். தொண்டமானின் யோசனை எமது சக்தியின் பயனால் அரசாங்கத்தை நெருக்குவோமேயானால் ஒரே நாளில் ஒரே நிமிடத்தில் ஒரே அரசாங்கத்தினூடாக இது சட்டமாகிவிடும். இதன் பின்பு இந்த மக்கள் தங்களுடைய இடங்களில் தங்களின் விருப்பத்தில் வீடுகட்டிக்கொள்ளலாம். பிரச்சினைக்கு ஒரு நாளில் ஒரே அரசாங்கத்திலேயே தீர்வுகண்டுவிடலாம். பிரச்சினையை நீண்ட நாட்களுக்கு இழுத்துக்கொண்டால் மாறிவரும் அரசாங்கங்கள் வேறுபட்ட கருத்துக்களை கொண்டு திட்டத்தை செயல் படுத்தாமல் காலம் தாழ்த்துவதன் மூலம் பிரச்சினைக்கு முடிவு வராது என்பது தொண்டமானின் வாதம். சந்திரசேகரனின் யோசனை இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய சமூகங்களைப் போலவே மலைய மக்களும் உரிமைகளுடன் நாகரீகமாக கிராமமயத்தில் வாழவேண்டும். காலத்திற்கு ஏற்றால் போல நாகரீகமான வீடுகளில் வாழவேண்டும் என்பது சந்திரசேகரனின் யோசனை. இந்த யோசனை நடைமுறைக்கு சாத்தியமற்றது. இத்திட்டம் செயல்பட்டுக்கொண்டு வருமுன் அரசாங்கம் மாறும். பின்னர் புதிய அரசு பதவியேற்றவுடன் பழைய அரசின் திட்டங்களை செயல்படுத்தும் என்பதற்கு என்ன உத்தரவாதம். அதோடு இத்திட்டத்தின் மூலம் இந்த மக்களின் ஊ.சே. நிதியத்திற்கு வேட்டு வைப்பதும் இந்த மக்களை மீண்டும் அடிமை நிலைக்கு தள்ளிடவே செய்யும். வீடுகட்டவென கொடுக்கவிருக்கும் 20,000 ரூபா வங்கிக் கடன் இவர்களின் ஊ.சே.நி. இருந்தே கொடுக்கப்படவுள்ளதாக அறிகிறோம். இதற்கு வட்டியும் செலுத்த வேண்டும். ஆகவே இந்தத்திட்டம் எமது சமூகத்திற்கு பொருத்தமற்றது.

ஆகவே தொண்டமானின் திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி சந்திரசேகரனும் இத்திட்டத்தை ஏற்று செயல்பட முன்வருவதன் மூலம் இது சாத்தியமாகும். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருடம் கடந்து விட்டது. இன்னும் எமது பிரதி அமைச்சர் சந்திரசேகரனிடம் திட்டமோ அதைப்பற்றிய பேச்சோ இல்லை. ஆகவே இரு அமைச்சர்களும் ஒரே அரசாங்கத்தில் இருக்கின்றார்கள். ஒரே அரசின் கொள்கைக்கு கட்டுப்பட்டவர்கள் என்றால் ஏன் தன் சமூகத்தின் நலனில் இவர்களிடத்தில் புரிந்துணர்வு இல்லை. ஆகவே கட்சிப் பேதங்களை மறந்து சமூக நலனை மேம்படுத்த இருவரும் இணைந்து இச்சமூகத்தின் எதிர்கால வாழ்க்கைக்கு வழி காட்டவேண்டிய பொறுப்பும் கடமையும் இவ்விரண்டு கட்சிகளுக்கும் தலைவர்களுக்குமே உண்டு.

## இந்திய கடவுச்சீட்டுப் பெற்றோருக்கான விசேட அடையாள அட்டை: இன ஒதுக்கலின் இன்னொரு பரிமாணம்?

— பீனிக்ஸ் —

ஹட்டனில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமே தோட்ட நிர்வாகங்கள் அடையாள அட்டைகள் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தோட்டத்தில் வேலை செய்யாத ஏனைய அனைவருக்கும் கிராம சேவகர்களூடாகவே அடையாள அட்டை வழங்கப்படவேண்டுமெனவும், கூறியிருப்பதோடு இந்திய கடவுச்சீட்டுப் பெற்றுள்ளவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களையும், தோட்டத் துரைமாரிடம் விநியோகித்துள்ளார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இப்புதிய நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் கடந்த பெப்.24 சனிக்கிழமை ஹட்டனில் நடைபெற்றுள்ளது.

இ.தொ.கா. தூதுக்குழுவுடனான அரசாங்கத்தின் உயர்மட்ட சந்திப்பில் இந்திய கடவுச்சீட்டு பெற்றிருப்போரை நாடுகடத்தும் முனைப்புடனான ஆலோசனைகள் முன்மொழியப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இச்சந்தர்ப்பத்தின் பின்னரே இந்தியக்கடவுச்சீட்டு பெற்றோருக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான ஒரு திட்டம் ஐ.தே.கவின் அந்திமகால ஜனாதிபதி டிங்கிரி பண்டார விஜேதுங்கவினால் முன்மொழியப்பட்ட தென்பதுவும் இதனை தொண்டமான் உட்பட மலையக தலைமைகள் வன்மையாக எதிர்த்தன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டால், இதன் அரசியல் தார்ப்பரியம் நிச்சயமாக இன்னொரு நாடுகடத்தும் படலத்தை துவக்கி வைக்கப் போவதற்குமான இனஒதுக்கல் கொள்கைகளை முன்னெடுக்கவுமான எத்தனம் என்பது புலப்படும்.

தோட்டத்துறையின் பொருளாதார, சமூக நெருக்கடிகளின் நேரடி விளைவுகளை தவிர்த்து விட முனையும் அரசாங்கம் நாடுகடத்தல் என்ற பழைய தூக்கு மேடையை புதிதாக அலங்கரிக்க முயல்வது அப்பட்டமாகத் தெரிகின்றது.

அடையாள அட்டை வழங்கும் நடைமுறையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள விதிமுறைப்படி தோட்டத் தொழிலாளர் அல்லாதவர்களுக்கு தோட்ட நிர்வாகம் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கக் கூடாது என்பதாகும். அப்படியானால், எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளர் அல்லாத தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகள் தோட்டத்தில் வசிக்கவும், நடமாடவும் முடியாத நிலை தோன்றலாம். தோட்டக் குடியிருப்புகளில் தொழிலாளர் அல்லாத அவர் தம் உறவினர், பிள்ளைகள், வயோதிபர் தங்குவதற்கான உரிமை மறுக்கப்படலாம். அப்படியானால் புதிய நடைமுறையின் நோக்கம் சந்தேகமின்றி இன்னொரு போர் முனையை நாட்டில் திறப்பது தானா?

கிராம சேவகரூடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டுமானால் மலையக தமிழ் மக்களுக்கு கிட்டத்தட்ட 1000 தமிழ் கிராம சேவகர் தேவை. அவர்களை நியமனம் செய்ய சிங்கள அரசாங்கம் தயாராக இருக்கின்றதா? மலையக தமிழ் மக்கள் மிகச் செறிவுடன் வாழும் நுவரெலியா மாவட்டத்திலேயே இரண்டு (2) தமிழ் கிராம சேவகர்கள் தான் இருக்கின்றனர்.

இந்த லட்சணத்தில் சிங்களம் மட்டுமே தெரிந்த சிங்கள பௌத்த வெறிகொண்டுள்ள சிங்கள கிராம சேவகர்கள் மலையக மக்களுக்கு எப்படி நீதியான சேவையாற்ற முடியும்?

400/= பெறுமதியான மாணவர் மதிய உணவு கூப்பன்களுக்கு 250/= கமிசன் பெறும் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் நிரப்பவும், உறுதிப்படுத்தவும் 100/= - 1000/= வரை இலஞ்சம் வாங்கியும் ஜனசக்தி சமுர்த்தி திட்டங்களில் புறக்கணித்தும், வதிவிட உறுதிக் கடிதங்களுக்கு கமிசன் வாங்கியும், வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பங்களை விற்பனை செய்தும் அரசாங்கத்தின் செங்கோண்மையின் மகிமையை மலையக தொழிலாளரிடம் எடுத்தியம்புகின்ற கிராமசேவகர்கள், அரச ஊழியர்கள், தோட்டத் தொழிலாளர்கள் அவர் தம் பிள்ளைகள், தங்கிவாழ்வோர் குறித்து கொண்டுள்ள விசமத்தனமான, பார்வையில் இருந்து மீண்டெழப் போகின்றார்களா?

மலையக தமிழின மக்களை பெருந்துயரில் ஆழ்த்தவுள்ள மிகக் கொடிய அடக்கு முறையின் இன ஒதுக்கலின் வடிவமாக செய்யப்படும். "கடவுச்சீட்டு பெற்றோருக்கான விசேட அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த அவசியமானவை வீதியில் இறங்க மலையகத்தின் அரசியல் சக்திகள் தயாராக வேண்டும். எங்களது மக்களை இன்னொரு தடவை நாடு கடத்த முயலும் அரசியல் மோசடியை அம்பலப்படுத்த சகல புரட்சிகர சக்திகளும் முன்வர வேண்டும்.

மலையக இளைஞருக்கு மலையகத்தின் தோட்டங்களில் வதியும் சகல மக்களுக்கும் தோட்ட நிர்வாகம் மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அடையாள அட்டைகளை பேதப்படுத்தும் அப்பட்டமான இனவொதுக்களை எதிர்கொண்டு. போராடத் தயாராவது சகலரதும் இன்றைய அரசியல் கடமைகளில் ஒன்றென எடுத்துரைப்பது அவசியமானது.

## இப்படியும் ஒரு சூறையாடல்

— எலிப்படையூரான் —

தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த வாழ்க்கைத்தரமும், கல்வித்தரமும், குறைந்த சம்பள மட்டமும் அவர்களை என்றென்றைக்குமான அடிமைகளாக வைத்திருப்பதற்கான காரணிகளாக அமைகின்றன. தோட்டத்துறையின் ஆரம்பகாலத்திலிருந்து இன்றுவரையான காலப்பகுதியில் தொழிலாளர்கள் தலைநிமிர முடியாத கடன் பொறியில் சிக்கவைப்பதில் நிர்வாகங்கங்களும், அரசாங்கமும் வெற்றி பெற்றிருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்களின் மாதாந்த வேலைநாட்கள் குறைக்கப்பட்டு, வேலைப்பளு இரட்டிப்பாக்கப்பட்டு அவர்களது சமூக நலன் ஒதுக்கீடுகள் வெட்டப்பட்டு இந் நூற்றாண்டின் அநாகரிகமிக்கதொரு அடக்குமுறையின் கீழ் வைக்கப்படுவதற்கு கம்பனி நிர்வாகமும் காரணமாகியுள்ளது.

இந்நிலையில் மாதாந்த சம்பளத்தில் தீபாவளி முற்பணம். மின்சார இணைப்பிற்கான அறவீடுகள், எனப் பல்வேறு அறவீடுகளின் பின்னர் கையில் மிஞ்சுகின்ற சிலநூறுரூபாய்களை மட்டுமே கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு முடியாத நிலையில் குடும்பத்தில் நிலவும் மங்கல, அமங்கல நிகழ்வுகளான திருமணம், பூப்புனித நீராட்டல், பிறந்த நாள், மரணம், நோய்வாய்ப்படல் போன்ற தேவைகளுக்காக கடன் பட்டும் தமது குடும்பத்தில் எஞ்சியுள்ள ஏதாவது பெறுமதிமிக்க சொத்துக்களை ஈடுவைத்தும் பணம் தேட வேண்டிய நிலையில் அல்லல் படுகின்றார்கள்.

இந்நிலையில் தோட்டதொழிலாளர்களை கிராமிய வங்கிகளோ, சேமிப்பு சங்கங்களோ, சுயகடன் திட்டங்களோ எட்டாத போது தொழிலாளர்கள் தாமகவே தமது அந்திமகால மரணகிரிகைக்கென தம் உழைப்பில் இருந்து மாதம் ஒரு தொகையை "மரண நிதியம்" என்ற பெயரில் சேமித்து இருக்கிறார்கள். இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் தொழிலாளர்களின் மரணத்தின் போது அவரது ஈமக்கிரியைக்களுக்கென வழங்கப்படுகின்றது.

இவ்வாறு பொகவந்தலாவ லட்சுமித் தோட்டதொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட நிதியம் ஐந்து பிரிவுகளிலும் இருக்கிறது. இதன் மூலம் சுமார் 2 இலட்சத்து 50,000 ரூபாய் தோட்டநிர்வாகத்தின் பராமறிப்பில் எவ்விதமான வட்டிக்கொடுப்பவோ இலாபப் பங்கோ இன்றி இருக்கிறது. இப்பணத்தைக் கொண்டு தோட்ட நிர்வாகம் தமது நடைமுறை செலவுகளை கையாண்டு வருவதாக தெரிகின்றது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட லட்சுமித் தோட்ட எலிப்படை கீழ்ப்பிரிவு தெழிலாளர்களின் நிதியத்திலிருந்து இதுவரை ஒரு இலட்சத்துக்கு மேல் மரண கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எலிப்படை கீழ்ப்பிரிவு மரண நிதிக்குழுவும், தோட்டக்கமிட்டியும் சேர்ந்து 27-02-93ல் மேற்கொண்ட தீர்மானம் ஒன்றின்படி (தீர்மான இலக்கம் 5) 25,000 ரூபாவை உடனடியாக வங்கிக்கணக்கொன்றில் வைப்பிடுமாறு கோரியது. ஆனால் ஏனைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் தோட்டநிர்வாகம் மூன்று வருடங்களாக இப்பணத்தை வங்கியில் வைப்பிலிட மறுத்து வருகிறது.

மடுல்சீமை பயிர் செய்கை கம்பனியின் நிர்வாகத்தின் கீழ் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் 2500 பேர் 1994ம் ஆண்டு இது தொடர்பாக 12நாள் வேலைநிறுத்தம் செய்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் இதுநாள்வரை நிர்வாகம் இது குறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதே போல் இத்தோட்டத்திற்கு மின்சாரம் வழங்கவென மாதம் நூற்றிரண்டு ரூபா சம்பளப்பணத்தில் அறவிடப்படுகிறது. வீடுகளுக்கு பொருத்தப்பட்ட மின் உபகரணங்களோ மிகவும் தரம் குறைந்தவை. ஐந்து வருடங்களாகியும் இன்னமும் மின்சாரம் கிடைத்தபாடில்லலை. இவர்கள் மரணச் செலவுக்கு எனச் சேர்த்ததைக் கூட சூறையாடும் கயவர்கள் யாரோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பௌத்த கலாசாரத்திற்கும் படுகொலைக்கும் என்ன உறவு?

பேரா.கார்லோ பொன்சேகா

நன்றி: தி ஐலண்ட்

மிதவாதத் தமிழர்கள் மௌனமாயிருப்பதன் மூலம் ஈழ இலட்சியத்துக்காக புலிகள் ஈவிரக்கமற்ற முறையில் உறுதியுடன் தொடர்ந்து போராடுவதை ஊக்குவிக்கின்றார்கள் என்று சில சிங்கள தேசியவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அத்தகைய தேசியவாதிகளுக்குள்தான் சில வருடங்களுக்கு முன்னர் ஜே. வி. பியின் மிருகத்தனமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தியவர்களும் ஜே.வி.பி.யைத் தீவிரமாக ஊக்குவித்தவர்களும் அடங்குகின்றனர். அவர்களில் ஒருவர் இன்னும் சற்று மிகைப்படுத்தி இலங்கையின் எதிர்காலத்தை ஜே.வி.பி.யுடன் இணைத்து ''ஜே.வி.பி.யின் முடிவு இந்நாட்டின் முடிவாக அமையும் என்று சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் சோவியத் மருத்துவக் கல்லூரி ஒன்றிலிருந்து மனரீதியாகப் பாதிக்கப்பட்டு ஓடி வந்தவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஜே.வி.பி.மீதான ஆதரவு ஒரு வகையான வழிபாடுதான். குறித்த மருத்துவக் கல்லூரிக்கான அனுமதியையும் கூட ரோகண விஜேவீர அரசியல் செல்வாக்காலேயே பெற்றார். இக்கருத்தை நான் வெளிப்படையாகவே தெரிவித்ததால் ஜே.வி.பியின் வேண்டப்படாதவர் பட்டியலில் இடம் பெற்றேன். இதன்காரணமாக இக்கொலை வெறி தேசியவாதிகளிடமிருந்து தப்புவதற்காக 1988ல் நான் இந்நாட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தது. இப்பேற்பட்ட சொந்த அனுபவத்திலிருந்து கொலைப் பயமுறுத்தலின் கீழ் ஒருவர் எவ்வாறு இருப்பார் என்பதை நான் அறிவேன். மேலும் நான் புலிகளை ''உலகின் மிக உச்சமான கொலைகாரப்பயங்கரவாதிகள்'' என்று கூறத்தயங்கியதில்லை. 1990ம் ஆண்டு ''யுனைட்டட் நேசன்ஸ் யூனிவேர்சிற்றி''யினால் வெளியிடப்பட்ட புத்தகமொன்றில் புலிகளைப்பற்றி நான் பின்வருமாறு கூறியுள்ளேன்.

''தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற கெரில்லாக்கள் அதே வேளையில் தங்களது ஈழக்கனவுடன் உடன்படாது இருக்கத்துணிந்த தமிழர்களின் மனித உரிமைகளை மிகக்குரூரமான முறையில் மீறியுள்ளனர். ஐக்கிய இலங்கைக்குள்ளேயே குறிக்கப்பட்ட அளவான மாநில சுயாட்சியை ஏற்றுக்கொண்டு இப்பிரச்சினையைத் தீர்க்க முயன்ற தமிழர்களைக் கொன்றுள்ளனர். புலிகளின் இந்நடவடிக்கையானது அவர்களது தலைமையின் சில உளவியல் நோய்க்கூறுகளின் விளைவு அல்லவெனில், இந்நடவடிக்கையானது மனித உரிமைகள் சம்பந்தமான கோட்பாட்டு நடைமுறைக் கருத்தாக்கங்கள் துளியளவேனும் இன்மையின் விளைவாக இருக்கவேண்டும். (Towards a peaceful Sri Lanka Page 77)

ஒழுங்கமைக்கப்பட்ட சிங்களக்காடையர் குழுக்களினால் 1956, 1977, 1981, 1983 போன்ற ஆண்டுகளில் தமிழர்கள் தாக்கப்பட்டனர்; கொல்லப்பட்டனர்; உயிரோடு எரிக்கப்பட்டனர்; இழிவுபடுத்தப் பட்டனர்; அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இறுதியாக தமிழ்ப்புலிகள் தோன்றினார்கள். அன்றிலிருந்து சிங்களவர்களும் தமிழர்களும் போர்க்களத்தில்.

இந்தப் போரில் புலிகள் சிங்களவர்களைக் கொன்றதைக்கூட நான் நியாயமானதாகவே கருதுகிறேன். தமிழ்மக்கள் எக்கொடுமைகளைப் பெற்றார்களோ அக்கொடுமைகளையே புலிகள் சிங்களவர்களுக்குக் கொடுத்தார்கள். சுதந்திரத்தின் பின்னர் தமிழர்களுக்கெதிரான வன்முறை, தரப்படுத்தல், அழிவு என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தமிழர்கள் அனுபவித்த சலுகைகளை தொடர்ந்து பேணுவதற்காக புலிகள் மிகக் குரூரமாக போரிடவேண்டியிருந்தது ஆச்சரியப்படக்கூடியதல்ல. என்னுடைய அறிவுக்கு வரலாற்றிலுள்ள எந்த சமூகக்குழுவும் தன்னுடைய அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஒரு சண்டையையும் எதிர்கொள்ளாமல் வெறுமனே விட்டுக்கொடுக்கவில்லை. தன்னலமற்ற இரக்கம் விதிவிலக்கான தனிநபர்களுக்கு மட்டுமே அத்தியாவசியமான ஒரு குணாம்சம். சமூகக் குழுக்களுக்குரிய குணாம்சம் அல்ல. புலிகள் சிங்களவர்களைக் கொன்றது என்னை அதிர்ச்சியடைய வைக்கவில்லை. அவர்கள் தமிழர்களையே ஈவிரக்கமின்றி கொன்றது தான் என்னை அதிர்ச்சியடைய வைக்கிறது.

என்னுடைய அன்புக்குரிய மாணவி ராஜினி திராணகம, கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், ஈ.பீ.ஆர். எல்.எப். தலைவர் பத்மநாபா, புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், டெலோ தலைவர் சிறி சபாரத்தினம் புலிகளின் கருத்துக்களுடன் முற்றாக முரண்பட்ட சுந்தரம், புலிகளின் வீரர் மாத்தையா முதலியவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். கருத்து வேறுபாடுகளை இல்லாதொழிப்பதற்கான முறையாக ஜே.வி.பிக்கும் புலிகளுக்கும் ''கொலை' 'யே இருந்துள்ளது. சுருங்கக் கூறின் இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். ஜே.வி.பி. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக வன்முறையைப் பயன்படுத்த் தெற்கில் முயன்றது. புலிகள் வடக்கில் அவ்வாறு முயன்று பெருமளவுக்கு வெற்றி பீட்டியும் உள்ளனர்.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது ஜே.வி.பியை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்குவித்தவர்களுக்கு புலிகளைக் கண்டிக்க எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது. அவ்வாறு அவர்கள் கண்டிப்பவர்களாய் இருப்பார்களாயின் அது ஜே.வி.பி. என்றால் 'எங்கட பெடியளையும்' புலிகள் என்றால் 'அவங்கட பெடியளையும்' உள்ளடக்கியிருக்கிறது என்ற வகையிலேயே இருக்கும். இவ்வகையான நியாயமற்ற தர்க்கரீதியில் பார்க்கும் போது 'எங்கட பெடியளால்' செய்யப்படுபவை வீரத்தனமாயும் அவங்கட பெடியளால்' செய்யப்படுபவை காட்டுமிராண்டித்தனமாகவும் தெரிகிறது. நடைமுறையில் யோசிக்கின்ற பொழுது எல்லா இனப்பிரச்சினைகளும் இவ்வாறுதான் இருக்கின்றன. நம்மவர்களும் பிறத்தியார்களும் ஒருவரையொருவர் கொன்றும் அழிவுகளை ஏற்படுத்தியும் இருதரப்பினருக்குமான வளங்களைக் குறைவடையச் செய்கின்றனர்.

அண்மையில் நான் ஒரு தீவிர சிங்கள தேசியவாதியைச் சந்தித்தேன். இலங்கையின் தமிழ், இந்து சமூகம் தம்மை அதிகாரம் செலுத்துவதற்கு உயர்தரத்துடன் தனது கல்வியை முறித்துக்கொண்ட பிரபாகரனுக்கும் அவரது இயக்கத்திற்கும் அனுமதித்துள்ளனரே என்று அவர் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

ஏன் உண்மையிலேயே மிதவாதத் தமிழர்கள் தங்களது மௌனத்தினூடாக சாதுரியமாக விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை ஊக்குவிக்கிறார்கள்? அதற்கு ஒரு காரணம். அண்மைக்காலம் வரைக்கும் அவர்களுக்கு ஒரு மாற்று நம்பிக்கையான அமைப்புக்கூட இருந்ததில்லை. ஆனால் புலிகளின் வரண்ட அமைப்பானது ஒரு மாற்று அரச நடவடிக்கைகளை நிலவச்செய்துள்ளது. வடக்கில் உள்ள தமிழர்கள் புலிகளது சட்டங்களுக்கும் சிங்கள இராணுவத்தினது சட்டங்களுக்குமிடையே தங்களது தெரிவைச் செய்ய வேண்டியுள்ளது. நானும் ஒரு தமிழனாயிருந்து இவ்விதமான இரண்டிலும் ஒரு தெரிவை செய்ய வேண்டி ஏற்படின்

—▷ 13

# தமிழ் மக்களுக்கு புலிகளைத்தவிர வேறு வழியில்லையா?

-கலாநிதி சிறிதரன்
மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்)

சிங்கள அரசிலிருந்து தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்கிற ஒரு யதார்த்தத்திலேயே தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இவ் உணர்வு நீண்ட கால அனுபவத்தின் பின் ஏற்பட்டதாகும். சிங்கள அரசு, தமக்கு எதிரி என்ற உணர்வு தமிழ் மக்களிடம் பிரதானமாக உள்ளது.

ஆனால், யதார்த்தம் என்பது எந்நாளும் ஒரே விதமாக இருக்கும் என்று கூறமுடியாது. அது எந்நேரமும் மாறிக்கொண்டிருக்கக் கூடியது. அதே நேரம் எந்த வித மாற்றமும் ஏற்படாதவாறும் இருக்கலாம்.

புலிகளின் அரசியல் தங்கி இருப்பது இந்த யதார்த்தத்திலாகும். இன்னொரு முறையில் வேறு விதமாகக் கூறுவதாயின் சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசினால் இந்நாட்டு தமிழ் மக்கள் சமமானவர்களாக மதிக்கப்படாமையாகும்.

இந்த யதார்த்தத்தை அவ்வாறு பேண முயலுவதுதான் புலிகளின் அரசியல். ஏனெனில் இது தான் புலிகளின் அரசியல் அடிப்படை. இவ் அடிப்படையில் தர்க்கம் புரியும் போது, சிங்கள, தமிழ் ஈரினங்களுக்கு இரு அரசுகள் தேவை என்ற கருத்து தோன்றுகின்றது.

அரசியல் தீர்வின் மூலம் மேற்கூறப்பட்ட யதார்த்தத்தை மாற்ற முடியும் என்பதை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். இதனால், நிகழ்கால பிரச்சினைக்கு அவர்களின் ஒரே தீர்வு ஈழமாகும். இன்று தமிழ் அரசியலில் பிரதான காரணி அதுவாகும்.

### புலிகளுக்கு சவால் விட முடியாதா?

நிகழ்கால அரசியல் யதார்த்தத்தை உணராது புலிகளை சவாலுக்கு அழைக்க முடியாது. பிற தமிழ் அரசியல் கட்சிகளும் இவ்வாறான முயற்சியை மேற்கொள்ளமாட்டாது. உண்மையில் புலிகளின் அரசியல் கோட்பாட்டுக்கு புறம்பாக புதிய கோட்பாட்டை உருவாக்க அவர்களால் முடியாதுள்ளது.

மறுபக்கத்தில் புலிகள் சிங்கள, தமிழ் அரசியலை வேறுபடுத்தும் நோக்கிலேயே செயற்படுகிறார்கள்.

சர்வதேச தளத்தில் அரசியல் தோல்வியை சந்தித்து இருக்கும் புலிகள், மீண்டும் வெற்றியடைய இருக்கும் ஒரே வழி யதார்த்தத்தை மாற்றாதிருப்பதும், குழப்பத்தை உண்டு பண்ணுவதும் ஆகும்.

புலிகளின் பிரதான அரசியல், யுத்தம். யுத்தம் என்பது, தீய சக்தியாக தொழிற்படுவதாகும். புலிகளின் தீய இயல்பு, சிங்கள அரசை மிகவும் பயமுறுத்தல்களுக்கு உள்ளாக்குகின்றது. இச்செயலினால், சிங்கள, தமிழ் மக்களிடையே நம்பகமற்ற தன்மை ஏற்படுகிறது. இன்று புலிகளின் பிரதான குறிக்கோள் மக்கள் மனதில் கிலியை ஏற்படுத்துவதாகும். அரசாங்கத்தின் அரசியல் தீர்வில் எதிர்பார்ப்பு வைத்திருக்கும் மக்கள் கூட இந்நிலை ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளனர்.

### தமிழ் விரோத கலவரம் மீண்டும்....

எதிர்காலத்தில் நாம் எதிர்பார்க்கக் கூடியது என்னவெனில், தமிழ் கலவரம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் புலிகள் செயற்படுவார்கள் என்பதையே. ஏனெனில், அது அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய கார்ணியாக அமையும். அது நடைபெற முடியாதது அல்ல. அரசுக்குள்ளும், அதிகார மட்டத்திலும், இக்கலவரத்துக்கான அடிப்படை இன்னும் காணப்படவே செய்கின்றது. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ளல் வேண்டும். இது ஒரே விதமாக ஏற்படக் கூடியதும் அல்ல.

இப்பொழுது, அந்தநிலை தோன்றியுள்ளது என நான் கூற வரவில்லை. சிங்கள - தமிழ் மக்களிடையே இடைவெளி அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

சமாதானத்துக்கான யுத்தம், இப்பொழுது தோல்வி அடைந்துள்ளது என எண்ணக் கூடாது. முக்கியமானது தமிழர்களையும், புலிகளையும் விளங்கிக் கொள்ளக் கூடிய மனோபாவத்தை சிங்களவர்களிடம் ஏற்படுத்துவதாகும்.

துரதிருஷ்டவசமாக, தொடர்பூடகவியலாளர்கள் இதைச் செய்ய மறுத்து வருகின்றார்கள். தமிழர்களும், புலிகளும் வேறு என பிரசாரப்படுத்துவதை விடுத்து இவர்கள், புலிகளும், தமிழர்களும் ஒன்றே எனப்பிரசாரப்படுத்துகின்றனர். இதனால் அரசியல் தீர்வுக்கான சூழல் உருவாக்கம் தடைப்படுகின்றது. நிகழ்கால நிலைமை நல்லதல்ல. ஆனால், நிலைமையை நன்மையாக்குவதற்கான அவகாசம் இன்னுமுள்ளது.

புலிகள், நகர வாழ்க்கையை சீர்குலைக்க எண்ணுகின்றனராயின், அதற்கான வழிமுறையை அரசு ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது. அதற்கு இரண்டு வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். ஒன்று பாதுகாப்பை பலப்படுத்துவது, இரண்டு புலிகளின் இயல்பின்படி இவ்வாறான தாக்குதல்களை தவிர்க்க இயலாது என்பதை உணர்ந்து கொண்டு அதிகப்படியான களேபரத்திற்குள்ளானால் புலிகளின் வலையில் சிக்க நேரிடும் என்பதை தெளிவுறுத்தல் வேண்டும். புலிகளின் தாக்குதலை விலக்க முடியாது. அதே வேளை சிறிய விடயங்களுக்கெல்லாம் பயம் கொண்டு, அவர்களின் பொறியில் சிக்காதிருப்பதனை மக்களிடம் வலியுறுத்தல்.

இன்றைய நிலையில் அத்தியாவசியமான காரணியாகவிருப்பது புலிகளின் தந்திரோபாயங்களை, சிங்களவர்களின் மத்தியில் விளங்கப்படுத்துவதாகும்.

தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டிருப்பது நல்லதொரு நடவடிக்கையே. அதேபோல் அது முன்வைக்க எடுக்கப்பட்ட காலம் போன்றே விடயங்களும் விமர்சனத்துக்குரியவை என்பதும் உண்மையே. அதுபோன்றுதான் இந்த தீர்வுப்பொதி பற்றிய கலந்துரையாடல்கள் மாத்திரம் தற்போது மேலெழுந்திருக்கும் அரசியல் நிலைமைகளுக்கு மாற்றீடாகி விடமுடியுமா என்பதும் கேள்விக்குரியதே. நாங்கள் வாழ்வது 84-85 போன்ற காலமாக இருந்தால் மேற்படி முறையிலேயே பிரச்சினைக்கு தீர்வுகண்டு விடமுடியும். ஆனால் இன்றைய நிலைமை அதைவிட மோசமானது. சிங்கள சமூகம் மட்டுமல்லாது தமிழ்ச் சமூகமும் கூட பீதி, சந்தேகம் நிறைந்த யுத்த சூழலுக்குள் அகப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையை கடக்குமளவிற்கு தற்போதைய தீர்வுப்பொதி விவாதத்துக்குள்ளாகவில்லை.

### அரசாங்கம் சிங்களவர்களை மட்டுமா கவனிக்கின்றது?

நான் கெட்ட மனிதனல்ல. ஆனால் புலிகளையும், தெற்கு அரசியலையும் நோக்கும் போது கெட்ட எண்ணங்களே தோன்றுகின்றன.

அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளின் போது, சிங்கள மக்களின் பீதியை கவனத்தில் எடுக்கின்றது.

எல்லைக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு தன்னியக்க ஆயுதங்களை அரசு வழங்கியுள்ளது. கொழும்பு பாடசாலைகள் அமைந்திருக்கும் வீதிகள் மூடப்படுகின்றன. இன்னும் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களைப் போன்ற பீதி உணர்வு இருக்கவே செய்கின்றது. அரசாங்கம் எனில், அனைத்து சமூக மக்களினது பீதி உணர்வுக்கும் மதிப்பு செலுத்த வேண்டும். ஆனால், இன்று அவ்வாறான நிலைமை இல்லை. அதற்கு காரணம் நீண்டகாலத்தில் இருந்தே இனவாதத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கும் அரச இயந்திரமாகும். அதனால், தனியே தீர்வுப் பொதியினால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இக்காரணத்தை வேறுவிதமாகவும் நோக்கலாம். என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும், லட்சக்கணக்கான தமிழர்கள் தெற்கில் வசித்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள். இதன்மூலம் அவர்களுக்கு தெற்கில் வசிப்பது நம்பிக்கைத் தன்மையை ஏற்படுத்துகின்றது எனக் கூறலாம். இவ் அடிப்படையில் அரசாங்கம் பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். இன்றைய தேவையும் கூட அதுவே. இதன்மூலம் தமிழர்கள் மத்தியில் ஒரு விசுவாசத்தன்மை ஏற்படும். அவ்வாறில்லாவிடின் தமிழ் மக்கள் மத்தியில் தலைமையாக இருப்பது புலிகள் மாத்திரமே.

### பொறியில் கொழும்பு தமிழ்க் கட்சிகள்

கொழும்பில் இருக்கும் தமிழ்க் கட்சிகள், மேற்கூறியதன் மூலம் பொறியில் சிக்கிவிடும். தமிழர்களுக்காக அரசியலை மேற்கொள்ள வேண்டிய தமிழ்க்கட்சிகளுக்கு கூட அவ்வாறான சந்தர்ப்பம் இல்லாத போது, புலிகளின் இனவாத அரசியலில் இருந்து மீள முடியாத நிலை ஏற்படும்.

### புலிகள் பிரச்சினையின் ஒரு பகுதியினர்:

இலங்கை அரசியலில் நான் காணும் பிரதான பிரச்சினை இதுவாகும். அது போலவே, புலிகள் பிரச்சினையின் தீர்வு அல்ல என்பதையும் நாம் அறிவோம். இதனால் தான் முன்னோக்கிச் செல்லும் அவசியம் ஏற்படுகின்றது. தற்காலிக செயல்கள் மூலம் வரலாற்றை மீளமைக்கமுடியாது. இன்று யாருமே பண்டாரநாயக்கா அவர்கள், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தது சரி எனக் கூற மாட்டார்கள். அவர் கையொப்பமிட்டதே வரலாறு ஆகியது. அதுபோலவே எந்தக் குறை நிறைகள் இருந்தாலும் தீர்வுப் பொதியின் வருகைக்கு கர்த்தாவாக வரலாற்றில் சந்திரிகா இடம் பெறுவார்.

இன்று புதியதும், விசாலமானதுமான ஆரம்பம் அவசியம். ஆனால், புலிகள் அதை தடுக்க முயற்சிகள் மேற்கொள்வர். இம்முயற்சிகளை தடுக்கும் கடமை அரசாங்கத்திடமே உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிளிவெட்டி - கு

# நெஞ்சில்

நீங்கள் சாப்பிடுவதற்காக கடைக்குள் நுழைகிறீர்கள். நீண்ட தூரப்பிரயாணம் உங்களுக்கு மிகுந்த களைப்பையும் பசியையும் ஏற்படுத்தியிருக்கிறது. கூடவே ஹபறணைக்கும் திருமலைக்குமிடையே உள்ள ஐந்தோ ஆறு, சோதனைச் சாவடிகளில் உங்கள் அடையாள அட்டை கேட்டு, நீங்கள் தமிழர் என்று கண்டு பிடித்தபின் உங்கள் பிரயாணப் பைகளை குடைந்து, உங்கள் பிரயாணத்தைப் பற்றி விசாரித்தது உங்களை எரிச்சலடையச் செய்திருக்கும். ஏற்கெனவே அரச



யார் பொறுப்பு?

கட்டுப்பாட்டிலில்லாத வன்னிப் பிரதேசத்துக்குப் போக முயன்ற எழுபதுக்கு மேற்பட்ட பத்திரிகையாளர்களை படையினர் திருப்பியனுப்பியது உங்களுக்கு ஞாபகமிருப்பதால், எந்த விசாரணையின் போதும் நீங்கள் உண்மையைச் சொல்லியிருக்கமாட்டீர்கள். நீங்கள் கிளிவெட்டி - குமாரபுரத்தில் பெப். 11ம் திகதி மாலை நடாத்திய வெறியாட்டத்தை நேரில் பார்வையிட்டு அறிக்கையிடப் போகிறீர்கள் என்ற உண்மையைச் சொல்லியிருந்தால் அவர்கள் உங்களைத் திருப்பிக் கொழும்புக்கே அனுப்பி வைத்திருப்பார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

''பொய்மையும் வாய்மையும் உடத்து புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்''

அந்தக் கடையிலிருந்த மிகப் பழைய கால மின்விசிறி திருமலையின் வெம்மையைத் தணிக்கப் போதுமானதாயில்லை. வெகுதூரத்திலிருந்து வரும் கடலின் இடைவிடாத முணுமுணுப்பு அந்தச் சாப்பாட்டுக்கடையின் ரேடியோ அலறலின் இரண்டு பாடல்களுக்கிடையேயான நிசப்தத்தில் உங்களுக்குக் கேட்கிறது.

சாப்பாடு முடிய மீளவும் வானில் ஏறிக் கொள்கிறீர்கள். திருமலை நகருக்குள் இருந்த சோதனைச் சாவடிகளிலும் அதே கேள்விகள். உங்களிடமிருந்து தயாரிக்கப்பட்ட பொய்கள் உதிர்கின்றன. எல்லாவற்றையும் கடந்து திருமலை போதனா வைத்தியசாலை வாசலில் இறங்குகிறீர்கள். . நீங்கள் பார்வையிட வேண்டிய வார்ட் எங்கேயிருக்கிறது என்று விசாரிக்கிறீர்கள்? அவர்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறார்கள். நீண்ட வராந்தாவினூடு சென்று வலப்பக்கம் திரும்பி அந்த வார்ட்டை அடைகிறீர்கள். கடற்கரையோடு அது அமைந்திருந்த



தாலோ அல்லது துப்புரவுப்பணியில் ஈடுபடும் ஊழியர்களாலோ அல்லது இரண்டினாலுமோ பொதுவாக இவ்வாறான வைத்தியசாலைகளுக்கிருக்கும் துர்நாற்றத்தை அது கொண்டிருக்கவில்லை.

வைத்தியசாலை வாட்டுக்களுக்கேயுரிய நிசப்தம். அதை அவ்வப்போது குலைக்குமாப்போல் எழுகிற முனகல்; துயரத்தையும் வேதனையும் கலந்து உங்களில் படியவிடுகிறது.

நீங்கள் உங்களுக்கு நேரெதிரே உள்ள கட்டிலை அணுகுகிறீர்கள். கட்டிலில் ஏறத்தாழப் பத்து வயதுள்ள சிறுவன் படுத்திருக்கிறான். அருகில் ஒருபெண்மணி. அவனது தாயாக இருக்கக் கூடும். கடந்த சில இரவுகளை அவள் தூங்காது கழித்திருக்க வேண்டும். அவளது கண்களில் தெரிந்த அயற்சி அதனை உங்களுக்கு புலப்படுத்தி விடுகிறது. அவளைப் பார்த்து நீங்கள் கேட்கிறீர்கள்; இச்சிறுவனின் அம்மாவா நீங்கள் என்று. அவள் ஓமென்று மெல்லியதாகத் தலையசைக்கிறாள். உங்கள் மகனுக்கு என்ன நடந்தது? என்கிற உங்களது கேள்விக்குப் பதிலாக அச்சிறுவனின் கழுத்து வரை மூடப்பட்டிருந்த போர்வையை மெல்லமாக எடுத்து விடுகிறாள். அச்சிறுவனுடைய உடலில் உடைகளில்லை. பதிலாக பிளாஸ்டர்களே அவனுடலை மறைத்திருக்கின்றன. மார்பிற்குச் சற்றுக் கீழிருந்து அடிவயிறுவரை பிளாஸ்டர்களே போடப்பட்டிருந்தன. சிறுநீர் கழிப்பதற்கு மட்டும் அவனது ஆண்குறியேயளவான மெல்லிய ரியூப் அதனுடன் பொருத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் அந்தத் தாயைப் பார்த்து 'என்ன நடந்தது' என்று கேட்கிறீர்கள். அவருடைய வாயிலிருந்து வார்த்தைகளுக்குப் பதில் கண்களிலிருந்து நீர் சொட்டுகிறது. அவள் மகனைப் பார்க்கிறாள்.

அந்தப் பத்துவயதுச் சிறுவனின் உதடுகள் அசைவதை நீங்கள் கவனிக்கிறீர்கள். நீங்கள் குனிந்து உங்கள் காதைக் கொடுக்கிறீர்கள். உங்களது ஒலிப்பதிவுக் கருவியால் கூடப் பதிவு செய்ய முடியாத மிக மெல்லிய குரலில் அவன் சொல்கிறான்; ''நானும் பக்கத்து வீட்டு அக்காவும் கிளிவெட்டிக்கு ரியூசனுக்கு போகேக்கை தான் ஆமிக்காரங்கள் வெடிவைச்சவங்கள். வெடிச்சத்தத்தைக் கேட்டிட்டு நாங்கள் பக்கத்திலுள்ள கடைக்குள் ஓடினோம். அந்த அக்காவைப் பிடித்துக்கொண்டு போய் சுட்டுப் போட்டுத்தான் பிறகு வந்து எனக்கும் வெடிவச்சவங்கள்....''

மகன் பேச முடியாமல் சிரமப்படுவதைக் கண்ட தாய் தொடர்கிறார். ''இவரும் சூட்டை வாங்கிக்கொண்டு அந்தப் பிள்ளைக்குப் பக்கத்திலைதான் அழுது கொண்டு போய்க் கிடந்திருக்கிறார் இரவிரவாக. அடுத்தநாள் காலை ரோட்டால் போனவரை கூப்பிட்டிருக்கிறார். அவர்தான் இவரைத் தூக்கி வந்து தந்தது;'' என்கிறார் தாயார்.

சுட்டவர்கள் என்ன உடுப்புப் போட்டிருந்தார்கள் என்று நீங்கள் அச்சிறுவனிடம் கேட்கிறீர்கள். 'ஆமிக்காரர் போடுகிற உடுப்புத் தான்' என்பது அவனது பதிலாக வந்து விழுகிறது. இதற்கு மேல் கேள்வி கேட்டு அந்தத் தாயையும் மகனையும் கஷ்டப்படுத்த நீங்கள் விரும்பவில்லை.

அச்சிறுவனுடைய கட்டிலுக்கு நேரெதிரான கட்டிலில் நடுத்தர வயதான ஒருவர் இடது காலில் சூட்டுக்காயம் போலும், பன்டேஜ் போட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. வலி தெரியாமலிருக்க மாத்திரை ஏதும் கொடுத்திருப்பார்கள் போலும், அவர் தூங்கிக் கொண்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

அடுத்த கட்டிலில் ஒரு கிழவி. அவருடைய தோள் பட்டையிலிருந்து பன்டேஜ் சுற்றப்பட்டிருக்கிறது. ஒருக்களித்துப் படுத்திருக்கிறார்.... வேதனையில் கண்களை மூடியிருக்கிறாளோ? அல்லது அந்த நடுத்தர வயதுக்காரரைப் போல மாத்திரைகளால ஏற்பட்ட தூக்கமோ எதுவோ உங்களுக்கு அவரை எழுப்ப மனம் வரவில்லை.

சற்றுத் தள்ளி இரண்டு கட்டில்கள். தந்தையார் ஒரு குழந்தையைத் தூக்கி வைத்திருந்தார். அக்குழந்தையின் இடது காலில் துப்பாக்கிக் காயம் ஏற்பட்டிருக்க வேண்டும். நீங்கள் கட்டிலுடன் தொங்கவிடப்பட்டிருந்த அட்டையைப் புரட்டுகிறீர்கள். கணபதிப்பிள்ளை நிருஷன் வயது 6 என்கிறது அந்த அட்டை. அருகிலுள்ள கட்டிலின் அட்டையையும் பார்க்கிறீர்கள். கணபதிப்பிள்ளை குகதாசன் வயது 13 என்கிறது அது. இவரின் இரு குழந்தைகளுக்கும் காயம் பட்டிருக்கிறது என எண்ணிக் கொண்டு நீங்கள் கேட்கிறீர்கள். 'உங்களது இரு குழந்தைகளுக்கும் காயமா?' அவர் சொல்கிறார் ''இல்லை மூன்று குழந்தைகளுக்கும், நீங்கள் மூன்றாவது கட்டிலில் அக்குழந்தையைத் தேடுகிறீர்கள். அதை உணர்ந்து கொண்ட அவர் 'மகள் மேல் வாட்டில் இருக்கிறாள்' என்று சொல்கிறார்.

நீங்கள் மேல்மாடியிலுள்ள அந்த வார்ட்டிற்குச் செல்கிறீர்கள். காயப்பட்டு இங்கு அனுமதிக்கப்பட்ட 29 பேரும் இந்த இரு வார்ட்டிலுமாகத் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் 9ம் ஆண்டு படிக்கும் கணபதிப்பிள்ளை குமுதினி என்ற அவரது மகளை தேடிக் கண்டுபிடிக்கிறீர்கள். உங்களுடைய இரண்டு தம்பிகள் தானே கீழுள்ள வார்ட்டில் இருக்கிறார்கள் என்று உங்கள் கேள்விகளுக்கு அவர் ஓமென்று தலையாட்டுகிறார். அவரது இடது கையைச் சுற்றி முழுமையாகப் பன்டேஜ் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் கேட்கிறீர்கள் 'என்ன நடந்தது உங்களுக்கு?'

அவர் சற்று ஒற்றைக் கையால் எம்பி சுவரோடு சாய்ந்தபடி சொல்கிறார்.'' நானும் தம்பிகளும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். அம்மாவும் அப்பாவும் வேலைக்குப் போயிருந்தார்கள். இருந்தாற் போல் வெடிச்சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ ஓலமிட்டுக் கத்துவதும் கேட்டது. வரவரச் சூட்டுச் சத்தம் கிட்டவாகக் கேட்டது. நான் தம்பியையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குள் ஓடிப்போனேன். பயத்தினால் நாங்கள் முன் கதவை பூட்டப்போகவில்லை. திடீரென எங்கள் வீட்டுக்கு இரண்டு ஆமிக்காரர்கள் வந்தார்கள். நானும் சேர்ந்து பயத்தினால் கத்தினோம். ஏதோ சிங்களத்தில் முரட்டுத்தனமாகச் சொன்னார்கள். கையில் வைத்திருந்த கோடாரியை தம்பியை நோக்கி வீசினான் ஒரு ஆமிக்காரன். நான் அதனைத் தடுக்கக் கையை நீட்டினேன். வெட்டு என்கையில் விழுந்தது. அடுத்த முறையும், பிறகும், பிறகும் கையில் வெட்டு விழுந்தது. தம்பிகளும் காயப்பட்டார்கள். வெட்டிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். தம்பிகளோ வலியால் துடித்தார்கள். எனக்கே என்ன செய்வதென்று தெரியவில்லை. அழுவதைத் தவிர. அவர்கள் போய் கனநேரத்திற்குப் பிறகு பக்கத்து வீட்டார் எங்களைவந்து கூட்டிச்சென்றார்கள்.

இராணுவத்தினர் வெட்டியிருக்கிறார்கள் என்பதில் உங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. சுட்டார்களா? அல்லது வெட்டினார்களா? என்று நீங்கள் திருப்பிக் கேட்கிறீர்கள். 'கோடரியால் வெட்டினார்கள்', என்று திருத்தமாகச் சொல்கிறாள் குமுதினி. நீங்கள் அதிர்ச்சி அடைகிறீர்கள். உங்களால் நம்பமுடியாவிட்டாலும் கண்ணுக்கு முன்னால் சாட்சியாக வெட்டுக்காயம்பட்ட கையுடன் இச்சிறுபெண்.

இந்தச் சம்பவங்களைக் கேள்வியுற்ற பிறகு இராணுவத்தினரால் சூறையாடப்பட்ட குமாரபுரம் கிராமத்தைப் பார்க்க வேண்டுமென்று மேலும் உந்தப்படுகிறீர்கள். மறுநாள் காலை நீங்கள் கிளிவெட்டிக்குப் புறப்படுகிறீர்கள். நீங்கள் வானில் செல்வதானால் திருமலையிலிருந்து கந்தளாய் சென்று சேருவில ஊடாக செல்வதைத் தவிர வேறுவழியில்லை.

திருமலை நகர எல்லையைக் கடந்தவுடனேயே நீங்கள் படையினரால் மறிக்கப்படுகிறீர்கள். உங்கள் அடையாள அட்டைகளும் பிரயாணப்பைகளும் மீளவும் துருவப்படுகின்றன. போகுமிடம் குறித்து கேட்கப்படுகிறது. ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உங்களது பதில் அவர்களுக்குத் திருப்திதராத போதும் உங்களைத் தடுப்பதற்கும் போதுமான காரணங்களும் அவர்களிடம் இல்லாததால் உங்களைப் போக அனுமதித்தார்கள். கந்தளாய்க்குப் போவதற்கிடையில் பல முறை இதை நீங்கள் அனுபவித்து விடுகிறீர்கள்.

உங்களது வாகனம் கந்தளாயிலிருந்து சேருவில செல்லும் பாதையில் இறங்குகிறது. சில மைல் தூரம் சென்றபின் தார் போட்ட வீதியை உங்களால் காணமுடியவில்லை. குன்றும் குழியுமான வெறும் கிறவல் பாதை. அப்பாதையில் உங்கள் வாகனத்தால் ஊர்ந்து ஊர்ந்து தான் செல்ல முடிகிறது. பாதைக்கு இருமருங்கும் பற்றைக் காடுகள். தண்ணீர் தேங்கியுள்ள மடு ஒன்று தெரிகிறது. மடுவுக்கு அருகிலுள்ள சிறிய மரங்களில் வெவ்வேறு விதமான இதுநாள் வரை நீங்கள் கண்டிராத அழகிய பறவைகளைக் காண்கிறீர்கள். அந்த அழகு உங்களைக் கொள்ளை கொண்ட மறுகணமே பயங்கர விஷப்பாம்புகளும் இங்கு உள்ளனதானே என்றெழுகிற எண்ணத்தை உங்களால் தவிர்க்க இயலவில்லை.

உங்களுக்கெதிராக இராணுவ தடையரண் ஒன்று போடப்பட்டிருக்கிறதென்றால் அருகில் ஒரு சிங்களக் குடியேற்றக் கிராமம் உள்ளதென்று- இவ்வாறான பல கிராமங்களைத் தாண்டிய பிறகு உங்களால் ஊகிக்கமுடிகிறது. அக்கிராமங்களைப் பாதுகாப்பதற்கு இராணுவத்தினர், பொலிஸார், ஊர்காவல் படையினர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இக்குக்கிராமங்களை அண்டிய பகுதிகளில் இளைஞர்கள் முதுகில் துப்பாக்கியுடன் கிரிக்கெட் மட்டையைக் கொண்டு போவதைப்போல் சைக்கிளில் வலம் வருவதையும் நீங்கள் அவதானிக்கிறீர்கள். ஆனால் சாதாரண சேர்ட் அல்லது ரீ சேர்ட்டும் காற்சட்டையும் அணிந்திருப்பதால் அவர்கள் இராணுவத்தினரா அல்லது ஊர்காவல் படையினரா என்று உங்களால் கண்டுபிடிக்க முடியாது போகும். இரண்டாயிரம் ஆண்டில் சகலருக்கும் இருப்பிடம் என்று ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் போய் இரண்டாயிரம் ஆண்டில் சகலருக்கும் ஆயுதம் என்கிற திட்டத்தைத் தான் புதிய அரசு செயற்படுத்துகிறதோ என்று உங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது.

எதிரே ஒரு காப்பரண் வருகிறது. உங்களது வாகனம் நிறுத்தப்படுகிறது. தடையரணிலிருந்து ஒரு இராணுவத்தான் வருகிறான். அவனுடைய முகத்தில் இன்னமும் மீசை கூட அரும்பவில்லை. அவன் அணிந்திருந்த கரும்பச்சை உடை அவனுக்கு சுமையாகக் கனக்கிறது போலும். நிச்சயமாக அவனுக்கு 18 வயதுக்குக் கீழ் தான் என ஊகித்துக் கொள்கிறீர்கள். அவன் உங்களின் அடையாள அட்டையைப் பரிசோதிக்கிறான். நீங்கள் எங்கே போகிறீர்கள் எனக் கேட்கிறான். தன்னுடைய விசாரணைகள் முடிந்ததும் உங்களைப் போக அனுமதிக்கிறான். உங்களது வாகனம் புறப்பட்டு காப்பரணைத் தாண்டுகின்ற சமயத்தில் எதிரே வந்த ஊர்காவல் படையினன் ஒருவன் உங்கள் வாகனத்தை மறிக்கிறான். உங்கள் வாகனத்தை பின்னோக்கிச் செலுத்துமாறு கூறுகின்றான். உங்கள் வாகனம் பின்னோக்கிச் சென்று காப்பரணின் ஆரம்ப இடத்துக்கருகில் நிற்கிறது.

அந்த ஊர்காவல் படையினன் விசாரணைகளை ஆரம்பிக்கிறான். அதே பழைய கேள்விகள். உங்களது பிரயாணப்பையைத் திறந்து காட்டுகிறீர்கள். பிரயாணப்பையைத் துழாவி நீங்கள் கமெராவுக்குப் பாவிப்பதற்கென கொண்டு வந்த இரண்டு பற்றறிகளை எடுத்து அருகில் நின்ற இராணுவத்தானுக்கு காட்டுகிறான். கமெராவைக் கண்ட இராணுவத்தான் அதனைக் கொடுத்து விடு என்கிறான்

'எங்கே போகிறீர்கள்?'

'மூதூருக்கு' - வாகனத்தின் முன் ஆசனத்தில் உள்ள உங்கள் சிங்கள நண்பர் சொல்கிறார்.

உங்களுடன் தமிழர்களும் உள்ளனரா? அது அவன்.

'ஓம்' என்கிறார் மீளவும் இவர்.

''அப்படியானால் உங்கள் அடையாள அட்டைகளை பார்வையிட வேண்டும். இறங்குங்கள்.'' அவனுடைய குரல் அதிகாரத்துவமாக ஒலிக்கிறது.

நீங்கள் இறங்குகிறீர்கள்.

உங்கள் சிங்கள நண்பரிடம் அவன் கேட்கிறான். ''ஏன் தமிழர்களை அழைத்துச் செல்கிறீர்கள்?''

அவனது இந்தக் கேள்விக்கு உங்கள் யாரிடமும் பதில் இருந்திருக்காது;

ஏன் அழைத்துச் செல்லக்கூடாது என்ற பதில் கேள்வியைத் தவிர,

அக்கேள்வி கேட்கப்பட முடியாதது என உங்களுக்கும், உங்கள் நண்பருக்கும் தெரியும்.

உங்கள் நண்பர் சொல்கிறார். ''அவர்களும் எங்கள் குழுவில் இருக்கிறார்கள்''

இந்தப் பதில் திருப்தியைத் தரவில்லை. என்றாலும் உங்களைப் போக அனுமதிக்கிறான். நீங்கள் பயணத்தை ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் தாண்டியது 'சோமபுர' என்கிறது சிறிய கடையொன்றின் பெயர்ப் பலகை.

நீங்கள் கிளிவெட்டியை அண்மித்துவிட்ட



தாக உங்கள் வாகனச் சாரதி சொல்கிறார். நீங்கள் வந்த பாதை எதிரே முடிவடைகிறது. அப்பாதை இரண்டாகப் பிரிந்து வலதுபக்கம் கிளிவெட்டிப் பக்கமாகவும், மறுபக்கம் மூதூர் பக்கமாகவும் செல்கிறது. நீங்கள் வலது பக்கமாகத் திரும்பி கிளிவெட்டியை அடைகிறீர்கள்.

கிளிவெட்டி - மூதூர் பிரதான வீதி கிளிவெட்டிக்கு அருகில் இருக்கிறது குமாரபுரம் என்ற இச்சிறிய கிராமம். 1977இல் நடந்த இனப்படுகொலையின் போது மலையகத்திலிருந்து தப்பித்து வந்த மக்கள் இங்கு குடியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதனை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள். பெருமளவானவர்கள் கூலித் தொழிலாளர்களாகவே உள்ளனர். உங்களை அழைத்துச் சென்றவர்கள் தெருவோரமாக இருந்த முதலாவது வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறார்கள்.

அழைத்துச் சென்றவர் அந்த வீட்டுக்காரரான கோவிந்தன் தங்கவேலை (42) காட்டுகிறார். வீட்டின் மூலையில் ஒரு சாக்குக் குவி

யல் மேல் அவர் உறைந்

அவருடன் உரையாடலை

பது என்பது உங்களுக்கு

கிறது. அங்கு நின்ற இ

பாக்கிச் சூட்டினால் அ

கம்பிகளையும், எதிரே சீ

சன்னங்கள் பதித்த ஓட்

கிறார். நீங்கள் அந்த

திரும்பி ''ஜன்னல் ஊட

என்று கேட்கிறீர்கள். அ

நடந்ததை சொல்ல ஆர

''மாலை ஐந்து ஐந்தரை

கட்டைப் பக்கம் இருந்து

சத்தங்கள் கேட்டன. இ

கொக்கு சுடுவது வழக்

நாங்கள் முதலில் நின

தொடர்ந்த துப்பாக்கிச்

களும் அப்படியல்ல

தெருவில் போய்க்

அயல் வீட்டுக்காரரும்

வீட்டுகுள் ஓடி வந்த

னைந்துபேர் எங்கள்

வைப்பூட்டிவிட்டு இர

ளும் நாங்கள் படுத்

நேரத்தில் இரண்டு இ

கிகளுடன் வெளியே

ஊடாகக் கண்டோம்

'தெமளுங் ஒக்கொ

தமிழர்களையும்

வெறிபிடித்தவர்கள்

எல்லோரையும் வெ

னார்கள். நாங்கள்

ணுவத்தினன் ஜன்ன

ஆரம்பித்தான். நா

என்று கத்தினோம்.

லாம் முடிந்து விட்ட

ஒட்டிக்கொண்டிருந்

(தங்கவேல் கலா

குண்டு பட்டது. எ

டது. நாங்கள் தக

டின் பின்பக்கமாக

குள் இருந்தோமு

குள் இருந்த பலரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



...ருக்கிறார்.
...ஆரம்பிப்
...மாக இருக்
...ஒருவர் துப்
... ஜன்னல்
...துப்பாக்கிச்
...யும் காட்டு
...ரர் பக்கம்
...ட்டார்கள்''
...ன்று விட்டு
...ர்;
...க்கும். 59ம்
...கிச் சூட்டுச்
...தாரணமாக
...ப்படித்தான்
... ஆனால்
...ழுந்த ஓலங்
...ணர்த்தின.
...ந்தோரும்,
...ல் எங்கள்
...த்தாழ பதி
...ர். முன்கத
...களுக்குள்

ஞன் இறந்து விட்டான்.'' என்று கதையை நிறுத்துகிறார் அவர்.

''தலையில் வெடிபட்ட உங்கள் மகள் திருமலை ஆஸ்பத்திரியிலா?'' நீங்கள் கேட்கிறீர்கள்.

அவர் சொல்கிறார்; ''இல்லை, சுட்டத்தில தலை சிதறிவிட்டது. பிறகேன் ஆஸ்பத்திரிக்கு?'' குரலில் விரக்தி தொனிக்க அவர் கேட்கிறார்.

கணபதிப்பிள்ளை சிவனேசன் - 21 என்ற இளைஞன் சொல்கிறார்; ''சுட்டவர்கள் இருவரையும் எனக்கு நன்றாகத் தெரியும். கிளிவெட்டி செக் பொயின்றில் நான் பலமுறை அவர்களைக் கண்டிருக்கிறேன். இராணுவச் சீருடை அணிந்திருந்தார்கள். அவர்கள்''.

இந்த வீட்டிற்கு பின்னால் உள்ள இன்னொரு வீட்டிற்கு அவர்கள் உங்களை அழைத்துச் செல்கிறார்கள். ஒரு சிறிய அறை. கட்டி முடிக்கப்படாத முன்விறாந்தை. அந்த வீட்டிலிருந்த பெண்மணி (பாக்கியராஜா பார்வதி - 28) சொல்கிறார். 'இந்த வாசலில் நின்றுதான் சுட்டவர்கள்' என்று அறை வாசலைக் காட்டுகிறார். கழட்டி வைக்கப்பட்டிருந்த தகசுடப்பட்ட ஒருவர் கதவோரமாய் விழுந்து கிடந்ததால் கதவு திறபடவில்லை. எனவே திரும்பவும் சுட்டார்கள். எல்லாம் முடிந்து பார்த்தபோது வீட்டிலிருந்த பதினைந்து பேரில் 7பேர் கொல்லப்பட்டு விட்டனர் என்கிறார் அவர்.

இந்த ஒரே வீட்டில் மட்டும் ஏழுபேர் கொல்லப்பட்ட தகவல் உங்களை அதிர்ச்சியடைய வைக்கிறது. கொல்லப்பட்டவர்கள் யார் யாரென நீங்கள் விசாரிக்கிறீர்கள். துரையப்பாவின் கடைசி மகள் (பாக்கியராசா வள்ளிப்பிள்ளை - 25), அவரது பேத்தி பாக்கியராசா வசந்தினி - 05), மருமகள் (அழகுதுரை பரமேஸ்வரி - 30), பரமேஸ்வரியின் இரண்டு பிள்ளைகள் (சசிகுமார் - 14, ஷர்மி - 03) காலில் சூடுபட்டு திருமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை நீங்கள் ஏற்கெனவே அறிவீர்கள். அவர்களோடு பாக்கியம் சுப்பிரமணியம் - 40, அமிர்தலிங்கம் ரஜனிகாந்தினி - 10, சிவபாக்கியம் பிரசாந்தன் - 06, குட்டி - 16 என்போரும் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல் உங்களுக்குக் கிடைக்கிறது.




ளங்கையில் ஒரு மண்டையோட்டுச் சிறு துண்டைக காட்டுகிறார் உங்களுக்கு. நெஞ்சம் ஒரு கணம் அடைத்து விட்டாற் போல் தோன்றுகிறது உங்களுக்கு. மெல்ல உங்களைச் சுதாகரித்துக் கொள்கிறீர்கள். சுட்டவர்களை உங்களுக்குத் தெரியுமா என்று மருதாயி என்ற அந்தப் பெண்மணியிடம் கேட்கிறீர்கள். தங்கவேல் மருதாயி சொல்கிறார்; நல்லாத் தெரியும். எப்போதும் இந்த வழியால் போய்வருபவர்கள். எங்களிடம் தண்ணீர் வாங்கிக் குடிப்பார்கள். எனது கணவனார் ஓடாவி வேலை செய்பவர். அதனால் அவரைக் கூட்டிச் செல்ல அடிக்கடி இங்கு வருபவர்கள். சுடவந்த இருவரில் ஒருவருக்குப் பெயர் கபில. கபிலவுக்கு வலது பக்க கன்னத்தில் ஒரு வெட்டுக்காயம் உண்டு. கறுத்த நிறம். மற்றவரை கோப்ரல் என்றுதான் அழைப்பார்கள். பொதுநிறம். இது நடக்கும் போது ஐந்து ஐந்தரை மணிதான் இருக்கும். எனவே தெளிவாக அவரை அடையாளம் காணமுடிந்தது. எங்களை வந்து சந்தித்த எல்லோரிடமும் நாங்கள் இதனைத் தான் சொல்லியிருக்கிறோம். நீங்கள் விசாரணை வைத்து எங்கு வந்து அடையாளம் காட்டுமாறு கேட்டாலும் நான் காட்டத் தயார் என்று உங்களுக்குச் சொல்லுகிறார் மருதாயி. நான் மட்டுமல்ல கிட்டத்தட்ட முக்கால்வாசிப்பேர் அடையாளம் காட்டத் தயாராக இருக்கிறார்கள் என்கிறார் அவர்.

நீங்கள் அங்கிருந்தவர்களை விசாரித்ததில் சொக்கலிங்கம் ஸ்டீபன் - 51, வி.கிருஷ்ராஜா - 27, கவிமணிதேவி - 22 ஆகியோரும் கூட அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

அந்தக் கிராமத்திலிருந்து பெரும்பாலான வீடுகளுக்குச் சென்று வருகிறீர்கள். உங்களோடு வந்த அக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தர்மலக்ஷ்மியின் - 16, கதை தெரியுமா? என்று உங்களைக் கேட்கிறார். நீங்கள் தெரியாது என்கிறீர்கள். அவர் உங்களை தெருவோரமாக உள்ள பழைய பால்பண்ணைக் கட்டிடத்துக்கு அழைத்துச் செல்கிறார். அது முன்னர் பால் சேகரிக்கும் நிலையமாகச் செயற்பட்டதாக அவர் சொல்கிறார். இப்போது அது இடிந்து பற்றை வளர்ந்து புல் மண்டிப் போயுள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். அவர் அந்த இடிந்த கட்டிடத்துள் நிலத்தில் புற்கள் மீது இரத்தம் படிந்து காய்ந்து கறுத்துக் கிடப்பதைக் காட்டுகிறார்.

தர்மலக்ஷ்மிக்கு என்ன நடந்தது என்று நீங்கள் கேட்கிறீர்கள். மீளவும் ஒரு துயரம் தோய்ந்த கதை ஆரம்பிக்கிறது. ஜேசுதாசன் லட்சுமி - 30, சொல்கிறார்; தர்மலக்ஷ்மி அயற்கிராமமான 58ம் கட்டையைச் சேர்ந்தவர். கிளிவெட்டிக்கு அவரது உறவினர் வீட்டுக்கு வந்து விட்டு திரும்பவும் 58ம் கட்டைக்குப் போய்க் கொண்டிருந்தார். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதும் தெருவில் வந்து கொண்டிருந்தவர்கள் தெருவோரமாக இருந்த வீடுகளுக்குள்ளும், கடைகளுக்குள்ளும் நுழைந்ததைப் போல தர்மலக்ஷ்மியும் தெருவோரமாக இருந்த சிறிய கடைக்குள் நுழைந்து கொண்டார். சூட்டுச் சத்தம் கேட்டதும் கடைக்கு அனுப்பிய எனது பிள்ளைகளைத் தேடி நானும் கடைக்கு வந்தேன். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் அண்மித்ததால் எங்களால் திரும்பி வீட்டுக்குப் போகமுடியவில்லை. கடைக்காரர் கடையின் வெளிக்கதவை மூடிவிடுகிறார். எல்லோரும் பீதியுடன் இருந்தனர்.

நாங்கள் இருந்த கடைக்கருகாமையில் சூட்டுச் சத்தம் கேட்டது. கடையருகே வந்த இராணுவத்தினர் கதவைத் திறக்குமாறு கூறுகின்றனர். கதவு திறக்கப்படாததால் சரமாரியாகக் கடையை நோக்கிச் சுடுகின்றனர். ஒரே புகையாகவும், ஓலமாகவும் இருக்கின்றது. கதவைப் பிடுங்கி விட்டு உள்ளே வந்த அவர்கள் சுதாகரன் - 12, என்ற சிறுவனைச் சுட்டார்கள். பிறகு என்னைப் பிடித்து இழுத்தனர். நான் அவர்களிடம் இருந்து தப்புவதற்காக எனது இருபிள்ளைகளையும் இரண்டு புறமாகத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டேன். அங்கிருந்த மற்றையோரை வெளியே ஓடுமாறு அடித்துக் கலைத்தார்கள். கடைக்குள் இருட்டாக இருந்தபடியால் அங்கிருந்த பாய் ஒன்றைக் கொளுத்தி அந்த வெளிச்சத்தில் தேடினார்கள். இதன் போது தான் கடை மேசைக்குக் கீழ் பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த தர்மலக்ஷ்மி என்ற அப்பிள்ளையைக் கண்டார்கள். ஒருவன் கையில் பிடித்திருந்த துவக்கை தோளில் கொழுவி விட்டு அந்தப் பிள்ளையைப் பிடித்து இழுத்தான். அவனுக்கு உதவியாக மற்றவன் மற்றப்பக்கத்தில் பிடித்து இழுத்தான். அந்தப் பிள்ளை கதறக் கதற பால் பண்ணைப் பக்கமாக அவர்கள் இழுத்துச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால் இன்னும் சில இராணுவத்தினரும் அந்தப் பக்கமாகச் சென்றார்கள். எல்லாம் முடிந்து மறுநாள் காலையில் நாங்கள் வந்து பார்த்த போது பிள்ளையின் உடலில் ஒரு துண்டு துணிகூட இல்லை. தலையில் சூட்டுக் காயம் இருந்தது. இரத்தம் வடிந்து நிலத்தில் உறைந்திருந்தது.



பால் சேகரிப்பு நிலையம்

இதன் பிறகு நீங்கள் கேட்கும் திராணியை இழந்து விடுகிறீர்கள். உங்களது இரத்தம் உறைந்து போய் விட்டதைப் போல உணர்கிறீர்கள்.

பின்னர் கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட புதைகுழியைப் பார்வையிடுகிறீர்கள்.

உங்களுக்கு அருகில் கிராமசேவையாளர் (எஸ். இராசலிங்கம்) நிற்கிறார் அவர் சொல்கிறார்; இதுதான் இங்கு முதற்தடவையல்ல. 85இலும் இவ்வாறான ஒரு படுகொலை நடந்தது. பிறகு 90இல் ஆண்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டனர். இப்போது இது.

உங்களுடன் வந்த நண்பர் கேட்கிறார்; ''சூட்டுச் சத்தம் கேட்டவுடன் மக்களைக் காப்பாற்ற அருகிலுள்ள நான்கு இராணுவ முகாம்களிலிருந்தும் எவருமே வரவில்லையா? பொலிஸார் கூட வரவில்லையா?''

கிராமத்தவர்கள் வியப்போடு கேட்கிறார்கள்; ''இராணுவத்தினரா? பொலிஸாரே மறுநாள் ஒன்பது மணிக்கு மேலேதான் வந்தார்கள். வந்தவர்கள் நடந்ததைக் கேட்டு எழுதினார்கள் அவ்வளவுதான்''

'தமிழிலா?- இது உங்கள் நண்பரின் கேள்வி.

''இல்லை, சிங்களத்தில் தான் எழுதினார்கள்.

''அதை உங்களிடத்தில் வாசித்துக் காட்டி விட்டுத்தானே கையெழுத்துப் போடக் கேட்டார்கள்?'' - உங்கள் நண்பரின் அடுத்த கேள்வி இது.

அவர்கள் சொல்கிறார்கள்; ''நாங்கள் சொல்லச் சொல்ல எழுதினார்கள். பிறகு கையெழுத்துப் போடச் சொன்னார்கள். போட்டோம்''.

''நீங்கள் சொல்லாததை எழுதிவிட்டு அல்லது சொன்னதை திரித்து எழுதிவிட்டு உங்களிடம் கையெழுத்து வாங்கியிருக்க மாட்டார்களா?'' என்ற உங்களது நண்பரின் கேள்விக்கு ''அப்படியும் செய்வார்களா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறார்கள்.

அயற் கிராமத்தில் புலிகளால் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கலாக ஒரு கிராமமே சூறையாடப்பட்டிருக்கிறது. மொத்தமாக 52 வீடுகளே இருக்கிறது இக்கிராமத்தில் - குடும்பங்கள் 73. ஒரு சில வீடுகளைத் தவிர அனைத்துமே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருக்கின்றன. மொத்தமாக 25 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். (13பேர் ஆண்கள் 12பேர் பெண்கள்.) 33 பேர் காயமடைந்திருக்கிறார்கள் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறாள். இது இக்கிராமத்துக்கு முதல் முறையல்ல.

இவ்வளவையும் நீங்கள் கேட்ட, பார்த்த பிறகு இது தொடர்பாக கேள்விகள் எழுவதை உங்களால் தவிர்க்க முடியவில்லை.

* குமுதினிப் படகு கொக்கட்டிச் சோலை, மைலந்தனை - இவைசில உதாரணங்கள் மட்டுமே- குமாரபுரம் போன்ற தமிழ் மக்கள் மீது இராணுவத்தால் நடாத்தப்படும் தொடர் படுகொலைகளை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்தவே முடியாதா?

* ஏற்கெனவே நடைபெற்ற இவ்வாறான படுகொலைகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிசன்களுக்கு என்ன நடந்தது?

* இந்த விசாரணைக் கமிசன்களால் இவ்வாறான படுகொலைகளைத் தவிர்ப்பதற்கு வழி காண இயலவில்லையா? அவ்வாறானால் இக்கமிசன்கள் வெறும் கண்துடைப்பா?

* எம்பிலிப்பிட்டியவில் தமது சொந்த மக்கள் மீதே படுகொலை நடாத்திய இராணுவ அதிகாரிகளுக்கு பொ.ஜ.ஐ.மு. அரசால் தேசியப் பொக்கிசங்களாகக் கருதப்பட்டு பதக்கமும் பதவியுயர்வும் அளிக்கப்படும் போது தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இத் தாக்குதல் கணக்கில் கொள்ளப்படுமா?

* ஐ.தே.க அரசாங்கமென்றாலென்ன, பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கம் என்றாலென்ன தமிழ் மக்களின் நிலை பாதுகாப்பற்றது தானா?

* அப்படியானால் பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கம் கூறும் இன சமத்துவம் இப்படித் தான் இருக்குமா?

யாழ்ப்பாணத்திலிருந்து பொதுமக்கள் வெளியேறாமல் இருந்திருந்தால் அல்லது அரசாங்கம் சொல்கிறபடி புலிகளால் வெளியேற்றப்படாது போனால் அம்மக்களை அரசாங்கத்தால் பாதுகாத்திருக்க முடியுமா என்ற கேள்வி இதற்குப் பிறகு வலுவடைகிற


# ...புரம்:
# ...றைந்த நிஜம் !

...ம். சிறிது
...ர் துப்பாக்
... ஜன்னல்
...ங்களத்தில்
... (எல்லாத்
...) என்று
...தினார்கள்.
...மாறு கத்தி
...ல் போக
... ஒரு இரா
...ள்ளே சுட
...வேண்டாம்
...ற்குள் எல்
...ன்னுடன்
... மகளின்
... தலையில்
... சூடு பட்
...தால் வீட்
... அறைக்
...ள். அதற்
...ரு இளை

ரக் கதவில் சல்லடையாய் ஓட்டை விழுந்திருந்ததைக் காண்பித்தார். பதினைந்து பேருக்குக் கிட்ட வீட்டுக்குள் இருந்தோம். மூன்று பேர் மட்டுமே ஆண்கள் என்கிறார் அவர்.

அதே வீட்டிலிருந்த (தியாகராஜா துரையம்மா - 65) ''என்னுடைய மூன்று பேரப்பிள்ளைகளும் இந்த மூலையில் தான் இருந்தார்கள் என்று அந்த அறையின் மூலையைக் காட்டுகிறார். அவர்கள் முதலில் இந்த வாசலில் வந்து நின்று சுட்டார்கள். பிறகு ஜன்னல் பக்கமாக வந்து ஜன்னலைத் தெண்டிவிட்டு அதனூடாகவும் சுட்டார்கள். நெருப்புப் பொறிகள் பறந்தது மாதிரி இருந்தது. ஒரே புகை மண்டலம். இருள், எதுவுமே புலப்படவில்லை. எனது கடைசி மகள் விழுந்து கிடந்தாள். ஒரே இரத்தம். பேரப்பிள்ளைகள் பயத்தினால் கத்தினார்கள்; நாங்களும் தான். கத்திய சத்தத்தைக் கேட்டுத் திரும்பவும் வந்த அவர்கள் கதவைத்திறக்கச் சொல்லிக் கத்தினார்கள். நாங்கள் திறக்கவில்லை. கதவுக்குக் காலால் உதைத்தார்கள். ஏற்கெனவே

இதற்குப் பிறகு தங்கவேல் மருதாயி - 57, என்பவரது வீட்டிற்கு நீங்கள் செல்கிறீர்கள் தன்னுடைய துயரங்களை யாரிடமாவது கொட்டி ஆறுதல் பெறக்காத்திருந்தவர் போல் அவர் சொல்லவாரம்பிக்கிறார். ''அவர்கள் இதாலை தான் வந்தவர்கள்'' என்று வந்த திசையைக் காட்டுகிறார். அவர்கள் வருவது தெரிந்ததும் நாங்கள் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குள் போய் விட்டோம். அவர்கள் வாசலுக்கு வந்து துவக்கை நீட்ட 'ஐயா சுடாதீங்க, நாங்க ஏழை'' என்று நான் கையெடுத்துக் கும்பிட்டேன். ஆனால் அவர்கள் அதையெங்கே கேட்டார்கள். சுட்டார்கள். சுட்டதில் எனது கணவரின் தந்தையார் (கிட்டிணன் கோவிந்தன் - 72) இறந்து விட்டார். அவரோடு ஸ்ரிபன் பத்மா என்ற பிள்ளையும் இறந்து விட்டது. தசைத் துண்டங்கள் தெறித்து இரத்தக் கறைபடிந்த தகரத்தைக் காட்டுகிறார். பத்மா என்ற அந்தப் பிள்ளையின் தலை சிதறிப் போய்விட்டதாகக் கூறிய அவர் உள்



கோடரி வெட்டுக் காயத்துடன் குமுதினி

கட்டுரை: அசுபதன்
படங்கள்: சி.செ.ராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை பாராளு மன்ற அரசியலில் பெண்கள் என்ற இத்தொடரின் இறுதிப் பகுதி பிரசுரமாகிறது. இது தொடர்பான அபிப் பிராயங்களை எதிர்பார்க்கிறோம். (ஆ-ர்)

**என். சரவணன்**

# விடுதலையை நோக்கி....

இலங்கையில் கடந்த காலங்களில் அரசியறகட்சிகள் எதுவுமே பெண்கள் பிரச்சினைகளை ஒரு அரசியல் போராட்டமாக அல்லது கோஷமாகக்கூட முன்னெடுத்ததில்லை. தேர்தல் காலங்களில் கூட தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களது நலன் தொடர்பான எதுவும் 1977ஆம் ஆண்டு வரை சேர்க்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

1975ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினர் சர்வதேச மாதர் ஆண்டாக பிரகடனப்படுத்திய போது உலகில் பல நாடுகளில் பெண்கள் அமைப்புகளின் போராட்டங்கள் காரணமாக பெண்கள் நலன்களில் லேசான பார்வையைச் செலுத்தியிருந்தன.

கியுபாவில் அவ்வாண்டில் பெண்களை ஒடுக்குவதில் பிரதான பங்கு வகிக்கின்ற குடும்ப அமைப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் என்ற நோக்கத்தில், கியுப ஆண்கள் தமது மனைவியருக்கு வீட்டுப்பணிகளில் உதவிபுரிய வேண்டுமெனக் கோரும் ''குடும்ப ஒழுங்குக் கோவை'' யொன்றை சர்வதேச மாதர் ஆண்டான 1975இல் சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8ம் திகதியன்று அமுலுக்கு கொண்டுவந்தது.

உலகம் முழுவதும் 1975 - 1985 வரையான காலப்பகுதியை ***'பெண்கள் தசாப்தம்'*** ஆக பிரகடனப்படுத்தியது.

இந்த சர்வதேச பெண்கள் ஆண்டில் ஏற்பட்ட 'பெண்கள் நலன்' தொடர்பான பங்களிப்பின் முக்கியதத்துவத்தை உணர்ந்த அரசியற் கட்சிகள் பெண்கள் விடயங்களை அரசியலில் பிரயோகிக்க முயன்றதன் விளைவே 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி தம்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்கள் நலன் தொடர்பான ஏற்பாட்டையும் சேர்த்துக் கொண்டது. அன்று தொடக்கம் அரசியற் கட்சிகள் குறிப்பாக தேசியக் கட்சிகள் பெண்கள் விடயங்களை அரசியலில் தொட்டு வருகின்றன. இது வரை பெண்கள் பிரச்சினைகளை எந்த அரசியற் கட்சிகளும் மைய அரசியற் கோஷமாக முன்னெடுத்ததில்லை.

இதே வேளை பெண்களுக்கு எதிரான அரசியலும் தொடர்ந்து இருந்து வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. விஞ்ஞாபனங்களில் அவை சேர்க்கப்படாவிட்டாலும் அரசியல் பிழைப்பு வாதத்திற்காக அவ்வாறான பெண்கள் எதிர்ப்பு பிரச்சாரங்கள் அல்லது பெண்கள் தொடர்பான பிழையான கருத்துக்களை கொண்டிருந்திருக்கின்றனர்.

இறுதியாக நடந்த (1994ஆம் ஆண்டு) 10 வது பொதுத்தேர்தலின் போது சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய எனும் கட்சி 'லங்காதீப' (4-8-1994) பத்திரிகையில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

**''..... தொழில் புரியும் அனைத்து பெண்களையும் வீட்டிலிருக்கச் செய்வோம். அதன் மூலம் அத்தொழில்களை ஆண்களுக்குப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் ஆண்களின் வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்ப்போம்.....''**

இதன் மூலம் அக்கட்சியின் பெண்கள் தொடர்பான நிலைப்பாடானது பெண்கள் மனைக்கு உரியவள் (மனைவி) அவளுக்கு சமூக உற்பத்தியில் ஈடுபடும் சுதந்திரம் இல்லை. ஆணுக்கு மட்டுமே அவ்வுரிமை உண்டு. ஆண்களது பிரச்சினைக்குத் தீர்வு பெண்களை அடிமைப்படுத்துவதே எனத் தெளிவுறுத்துகிறது.

அதே தேர்தலின் போது பொதுஜன முன்னணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில், போட்டியிட்ட நீல்ரூபசிங்க 'சரிநிகருக்கு (11-08-94) அளித்திருந்த பேட்டியில்..

**''....பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை விட அடுப்படி வேலைகளில் ஈடுபடுவதே நல்லது''** என குறிப்பிட்டிருந்தார். இவர் போட்டியிட்ட அதே பொ.ஜ.மு. வை தலைமை தாங்கி நடத்தியவர் பெண்ணே (சந்திரிகா). அதே போல் தற்போது இவர் அரசாங்கத்தின் உறுப்பினர். அரசாங்கத்தின் தலைவர் பெண். இப்படியாக இலங்கையில் வர்க்க நலன்சார்ந்த அரசியல் கட்டமைப்பின் வெளிப்பாடு இப்படி ாகத் தான் இருக்கிறது. இப்படியாகத்தான் இருக்கும். பெண்கள்; அரசியலில் தங்களை முழுமையாக ஈடுபடுத்த முடியாத அளவிற்கு சமூக அமைப்பு அமைந்துள்ளது. அவர்களது முழு நேரமும் குடும்பத்திற்கான உழைப்பில் செலவிட நேரிட்டுள்ளது. ஆண்களின் ஆதிக்கம் பெண்கள் ...ரியேறி சமூக உற்பத்தியில் - அரசியலில் ...க ஆண்களைப் போல் பங்குபற்ற ...செய்கிறது.

...க மரபோ, பெண்க ...ய்ப்பு, வாக்கு ...க்கொள்

தான் பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கியது. இன்றும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாத ஏராளமான நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, மத்தியகிழக்கு, தென் அமெரிக்க கண்டம் போன்ற இடங்களில் காண முடிகிறது. இதைத்தான் லெனின் இப்படிக் குறிப்பிடுகிறார்.

***''முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பற்றி அலங்காரமான சொற்றொடர்களும் கம்பீரமான வார்த்தைகளும் மிதமிஞ்சிய வாக்குறுதிகளும், ஆர்ப்பாட்டமாக ஒலிக்கும் கோலங்களும் அடங்கிய ஜனநாயகமாகும். ஆனால் உண்மையில் பெண்களுக்கு சுதந்திரமும் சமத்துவமும்.... இல்லாதிருப்பதை,இவை மூடி மறைக்கின்றன''.(நூல் திரட்டு -தொகுதி-39).***

## இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் (இறுதிப்பகுதி)

பெண்களுக்கு சமஅந்தஸ்து அரசியலில் வழங்குவதாகக் கூறும் முதாளித்துவ ஜனநாயக அமைப்பு முறையால் அரசியல் கட்டமைப்பில் பெண்களுக்கு சரிபாதிப் பிரதிநிதித்துவம் வழங்கமுடியாதது ஏன்? குடித்தொகையில் பாதியினராக விளங்கும் பெண்களுக்கு ஆட்சியில் சமபிரதிநிதித்துவம் வழங்காதது ஏன்? சோஷலிச நாடுகள் என கூறப்படும் நாடுகளில் கூட இப்படி சம வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. ஆனால், முதலாளித்துவ நாடுகளை விட பெண்கள் நலன் தொடர்பாக அதிகளவு அக்கறை செலுத்தப்பட்டிருக்கிறது.

அண்மைய யுனெஸ்கோ அறிக்கையொன்றின் படி 1993இல் உலகில் நாட்டுத்தலைவர்களாக ஆறுபெண்கள் மட்டுமே இருந்தார்கள். 1989 இல் உலகில் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 12%த்தினர் பெண்கள். ஆனால், 1994 இல் இது 10% மாக குறைந்தது. இலங்கையில் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 5% த்தினர் பெண்கள். உலகில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பதை அறிவீர்களா?

ஐ. நா. சபையின் நிரந்தர உறுப்பினர்கள் 184பேரில் 8பேர் மட்டுமே பெண்கள். அபிடிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் 3ம் உலக நாடுகளிலேயே பாராளுமன்ற அரசியலில் பெண்கள் அதிகமாக ஈடுபாடு காட்டுகின்றனர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 12% வீதம் இருக்கும் போது, கைத்தொழில் நாடுகளில் 9% மட்டுமே உள்ளனர்.

***''ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே வாக்குரிமை உள்ளது எனச் சமன் படுத்துவதானது முதலாளிக்கும் தொழிலாளிக்கும், சொத்துள்ளவனுக்கும் பாட்டாளிக்கும், எசமானுக்கும் அடிமைக்கும், சமனான வாக்குரிமை உண்டு என சமன்படுத்துவதை ஒக்கும்''*** இவ்வாறு செ. கணேசலிங்கன் தனது 'பெண்ணடிமைதீர' எனும் நூலில் குறிப்படுகிறார்.

ஆண்களே தேர்தலில் முன்நிற்கின்றனர்; பெண்களும் அவர்களுக்கே தமது வாக்கை அளிக்க நேரிடுகிறது. ஆட்சியில் பாதிப்பங்கைப் பெற முடிந்தால் சட்டவாக்கம், நிர்வாகம், நீதித்துறைகளிலும் பெண்கள் பங்கு பெற இலகுவாகும். காலப்போக்கில் சமூக உற்பத்தியில் சமபங்கை பெற வாய்ப்பாகும்.

### பெண்ணி னத்தின் கருங்காலிகள்

உண்மையில் பாராளுமன்ற அமைச்சரவை, நிர்வாகம், நீதித்துறை என்பவை சிலருக்கு மட்டும் வாய்ப்பளித்துவிட்டு அவர்களை உதாரணமாகக் காட்டிப் பெண்களை ஆணாதிக்கவாதிகள் மிகவும் விவேகமாக ஏமாற்றி வருகிறார்கள். வாய்ப்புப் பெற்ற பெண்களும் ஏனைய ஒடுக்கப்பட்ட பெண்களின் சமத்துவத்திற்குப் போராடுவதை விட்டு விட்டுப் பெண்ணிணத்தின் கருங்காலிகளாகி ஆண்களின் ஆதிக்கத்தில் நீதி வழங்கப்பட்டுவிடும் என ஒத்தூதிக் கொண்டிருப்பதே இன்றைய பெண் சமூகத்தின் பரிதாப நிலையாகும்.

இன்று கூட நவீன முறையில் முதலாளித்துவ நவ காலனித்துவ ஆக்கிரமிப்பின் மூலம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதற்கூடாக புது வடிவம் பெற்றுள்ள பெண்ணொடுக்கு முறையுமானது அரச யந்திரத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்ற போதும் அதனை பெண் பிரதிநிதிகள் தட்டிக்கேட்காமல் இருப்பதுமல்லாமல் அவற்றிற்கு ஆதரவு வழங்கும் போக்கே நடைமுறையில் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ''பெண்கள் சாசனம்'' இன்று அதிக பெண்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்தும் பெண்ணொருவர் ஆட்சித்தலைவராக இருந்தும்கூட அப் ''பெண்கள் சாசனத்திற்கு'' சட்ட அந்தஸ்து வழங்கப்படவில்லை. இலங்கையில் இயங்குகின்ற எத்தனையோ பெண்கள் அமைப்பு இப்பெண்கள் சாசனத்தை சட்டரீதியில் செல்லுபடியாக்கும்படி இன்னமும் போராடித்தான் வருகிறார்கள். சுரண்டலே பிரதான நோக்கமாகக் கொண்ட இந்த சமூக அமைப்பின் பாதுகாவலனாகவே இந்த அரசியல் கட்டமைப்பு உள்ளது. இந்த சமுதாய அமைப்பு நிலைப்பதற்காகவே குடும்ப அமைப்பு, பெண்ணொடுக்குமுறை என்பன உறுதியாக நிலைநிறுத்தப்படுகின்றன. எனவே இவ்வெடுகோளின் படி இத்தகைய சமூக கட்டமைப்பு உடைத்தெறியப்படாமல் முதலாளித்துவ அரசால் என்றும் விடிவு கிடையாது.

பெண்களுக்கு தேவைப்படும் அரசியல் அதிகார சமபிரதிநிதித்துவம் கோரிய கோஷம் பெண்களாலேயே முன்னெடுக்கப்படல் வேண்டும்.

இன்று சாதி ஒடுக்குமுறை, இனஒடுக்குமுறை, நிறஒடுக்குமுறை, காலனித்துவ ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறைகளால் இருபாலாருமே ஒடுக்கப்படுகின்ற போதும் அவற்றிற்கு எதிரான போராட்டங்களை பெரும் பாலும் ஆண்களே முன்னெடுக்கிறார்கள். இப்போராட்டங்களில் ஈடுபடும் ஆணாதிக்க கருத்தியலால் உள்வாங்கப்பட்டவர்கள், பெண்களின் மீதான தனித்துவமான ஒடுக்குமுறையையும், அவற்றிற்கெதிரான போராட்டத்தின் அவசியத்தையும் இனங்கான தவறிவிட்டனர்.

எப்படி ஒரு இனம் குறிப்பிட்ட இனமாக இருக்கின்ற காரணத்தினாலேயே ஒடுக்கப்படுகின்றதோ அதே போன்றுதான் பெண்ணினம் பெண்பாலாக இருக்கின்ற காரணத்தினாலேயே ஒடுக்கு முறைக்குள்ளாகின்றதையே காண்கிறோம்.

'சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம்' எனப் பேசும் முதலாளியம் எத்தனையோ இடங்களில் பெண்களைப் பிரித்தே வைத்திருக்கிறது. ஆண்-பெண்களுக்கு வெவ்வேறு கல்வி நிலையங்கள், ஆடைத்தொழிற்சாலைகள், தாதி வேலைகள், விமானப் பணிபெண்கள், பாலர் பாடசாலை ஆசிரியை, விளம்பரப் பதுமைகள் போன்ற இன்னோரன்ன வேலைகளைக் குறிப்பிடலாம். தொழில்களில் மிக மட்டமானவற்றைப் பெண்களுக்கு ஒதுக்கி விட்டு உயர்ரக வேலைகளை ஆண்களுக்கு ஒதுக்கி வைத்துள்ளது.

### விடுதலையை நோக்கி

இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு முறை நிச்சயமாக பெண்களுக்கு எந்த விடுதலையையும் பெற்றுத்தரப்போவதில்லை என்பதை அறிந்தோம்.

புரட்சிகர அரசியலுணர்வே பெண்களுக்கும், விடுதலைதர வல்லது. பெண்கள் கற்க வேண்டியது சமையற்கலையையல்ல. புரட்சிகர அரசியற் கல்வியே. பாடசாலைப் புத்தகங்களில் கூட அடிப்படையான பெண்ணியக்கருத்துக்களை கொண்ட பாடவிதானங்கள் உள்ளடக்கப்படுவதோடு, ஆண்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட கதாபாத்திரங்கள் அமைந்த அம்சங்களும் மாற்றங்களுக்குள்ளாக்கப்படல் முன்நிபந்தனையாகின்றது. ஏனெனில் ஆணாதிக்க கருத்தியல் உருவாக்கத்தில் பாடவிதானங்களும் அதிக பங்களிப்பு செலுத்துகின்றன..

பெண்களைப் பகடைக்காயாக சந்தர்ப்பவாத ரீதியில், தேர்தல்களில் பயன்படுத்தப்பட்டுவருவதை இல்லாது செய்ய பெண்களே பெண்களது பிரச்சினை தொடர்பான கோரிக்கைகளுக்கு தலைமை கொடுக்க வேண்டும்.

இந்த ஆணாதிக்கத்தால் ஆக்கப்பட்ட அரசையும், வர்க்க சமுதாயத்தையும் இன்றுவரை உடைத்தெறிய முடியவில்லை. பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கத்தாலும் புரட்சிகர அரசியலாலுமே இது சாத்தியமாகும். அதன் பின்னரே பெண்ணினத்தின் அரசியல் விடுதலையும் சரியான முறையில் ஆரம்பமாகும்.

## விடுதலைப்பாதையில் சில மைல் கற்கள்

### சர்வதேச ரீதியில்

1691:- அமெரிக்கா: மஸாசூஸெட் ராஜ்யத்தில் பெண்களுக்கு வாக்குரிமை இருந்தது. இதனை அவர்கள் பின்னர் 1780ல் இழந்தனர்.

1792:- அமெரிக்கா: பெண்களுக்கும், கறுப்பர்களுக்கும் சமத்துவ உரிமைகோரி''சமத்துவ உரிமைகள் சங்கத்தை'' லுக்கியர் மொற் என்பவர் தாபித்தார்.

1859:- ரஷ்யா: சென் பீற்றர்ஸ்போர்க்கில் ''பெண்கள் விடுதலை இயக்கம்'' ஆரம்பிக்கப்பட்டது.

1862:- சுவீடன்: மாநாகர சபைத் தேர்தலில் பெண்களுககு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1868:- பிரிட்டன்: தேசிய பெண்கள் வாக்குரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

1888:- ஐரோப்பாவினதும், வட அமெரிக்காவினதும் பெண்கள் சங்கங்கள் வாஷிங்டனில் ஒன்று கூடி சர்வதேச பெண்கள் சபையைத் தாபித்தது.

1893:- பெண்களுக்கு நியூசிலாந்தில் வாக்குரிமை அளிக்கப்பட்டது.

1909:- பிரான்ஸ்: சோஷலிஸப் பிரதிநிதி ரெனே விவியானி கொண்டு வந்த ஒரு பிரேரணை மூலம் பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை பற்றி பிரெஞ்சுப் பாராளுமன்றம் முதற் தடவை விவாதித்தது.

1909:- நோர்வே: மாநாகர சபைத் தேர்தல்களில் பெண்கள் வாக்களிக்க ஆரம்பித்தார்கள்.

1906:- பின்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1910:- டென்மார்க்: மார்ச் 22 'சர்வதேச பெண்கள் தினமாக' நினைவுகூறுமாறு சோஷலிசப் பெண்களின் இரண்டாவது உலகப் பேரவைக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது.

1913:- நோர்வே: பெண்களுக்கும் சமவாக்குரிமை வழங்கப்பட்டது.

1917:- நெதர்லாந்து: ரஷ்யா ஆகிய நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1918:- பிரித்தானியாவில் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது. 1928இல் இது 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு என மாற்றப்பட்டது.

1919:- ஜெர்மனி, செக்கோஸ்லவேக்கியாவிலும் பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

1920:- அமெரிக்கா: பெண்கள் வாக்களிப்பதற்கு சகல ராஜ்யங்களிலும் உரிமை வழங்கப்பட்டது.

1925:- ஜப்பானிய பாராளுமன்றம் மார்ச் 30ம் திகதி நிறைவேற்றிய 'சர்வஜன வாக்குரிமைச் சட்டத்'தில் பெண்கள் நீக்கப்பட்டனர்.இது ஜப்பானிய பெண்கள் விடுதலை இயக்கத்தை வீறு கொள்ளச் செய்தது.

1925:- இந்தியா: இந்தியப் பெண்கள் விடுதலை இயக்கத்தின் பலம் வாய்ந்த பாதுகாவலர்களில் ஒருவரான கவி சரோஜினி நாயுடு அம்மையார் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1928:- பிரித்தானியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1928:- ஈகுவடோர்: பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

1932:- ஸ்பெயின்: குடியரசு அரசியலமைப்புச் சட்டம் பெண்களுக்கும் வாக்குரிமை அளித்தது.

1936:- பிரான்ஸ்: பெண்களுக்கு வாக்குரிமை இல்லாத போதிலும் நோபல் பரிசு பெற்ற பௌதிகவியல் அறிஞர் ஐரின் ஜூலியட் மேரி அம்மையார் உட்பட மூன்று பெண்கள் லியோன் புருமின் மக்கள் முன்னணி அரசில் நுழைந்து கொண்டனர்.

1945:- இத்தாலியும், பிரான்ஸும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது.

1946:- பாரகுவே, லத்தீன் அமெரிக்கா பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது.

1964:- பாகிஸ்தான்: முதன் முறையாக ஒரு பெண் (செல்வி பாத்திமா ஜின்னா) பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.

1971:- சுவிட்சர்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமையளிக்கப்பட்டது.

1975:- ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மகளிர் ஆண்டாக பிரகடனம்.

1975:- கியுபா: கியுபா ஆண்கள் தமது மனைவியருக்கு வீட்டுப்பணிகளில் உதவிபுரிய வேண்டுமெனக்கோரும் ''குடும்ப ஒழுங்குக் கோவை'' யொன்று மார்ச் 8ம் திகதியான சர்வதேச பெண்கள் தினத்தன்று அமுலுக்கு கொண்டு வந்தது.

### இலங்கையில்

1927:- பெண்கள் வாக்குரிமை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

1928:- கிராமிய பெண்களின் முதலாவது பெண்கள் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1929:- இலங்கையில் முதன் முதலில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டபோது பெண்களும் வாக்குரிமைப் பெற்றனர்.

1931:- எட்லின் மொலமூரே இலங்கை பாராளுமன்றத்தின் முதல் பெண் உறுப்பினராக தெரிவு.

1932:- நேசம் சரவணமுத்து முதலாவது (தமிழ் பெண்) பராளுமன்ற உறுப்பினராக தெரிவு.

1936:- நேசம் சரவணமுத்து இலங்கையில் முதலாவது தடவையாக பொதுத்தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பெண்ணானர்.

1956:- இலங்கையின் முதல் பெண் அமைச்சராக (தென்னிந்தியாவிலேயே முதல் பெண் அமைச்சராக) விமலா விஜயவர்தன நியமனம்.

1960:- முதற் தடவையாக பொதுத் தேர்தலொன்றின் போது தேர்தலுக்கான கட்சியின் ஒழுங்குகளை பெண்ணொருவர் தலைமைதாங்கி செய்தார். (ஸ்ரீ.ல.சு.கவுக்கு - சிறிமாவோ பண்டாரநாயக்க)

1960:- இலங்கையின் முதற் பெண் பிரதமராகவும், உலகிலேயே முதற் பெண் பிரதமராகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவுசெய்யப்பட்டார்.

1964:- இலங்கையின் முதலாவது பெண் பிரதியமைச்சராக விவியன் குணவர்தன நியமனம். இலங்கையில் அதிக தேர்தலிகளில் போட்டியிட்ட வேட்பாளரும் இவரே.

1965:- சிறிமாவோ பண்டாரநாயக்கா முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவராக சிறிமா நியமனம்.

1976:- 86 நாடுகளைக் கொண்ட கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதமர் அடுத்து மூன்றாண்டுகளுக்கான தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார். (தெரிவு செய்யப்பட்டவர் சிறிமாவோ பண்டாரநாயக்க)

1993:- இலங்கையில் - மாகாண சபைக்கு சந்திரிகா குமாரணதுங்க முதல் பெண் முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டார்.

1994:- இலங்கையில் பொதுத்தேர்தலில் இதுவரைகாலம் எவரும் பெற்றிராத அளவுக்கு அதிகப்படியான வாக்குகளை சந்திரிகா பெற்றார். இவர் 4,64,588 வாக்குகளைப் பெற்றார்.

1994:- இலங்கையின் முதல் ஜனாதிபதியாக சந்திரிகா குமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் எவரும் பெற்றிராத அதிகப்படியான வாக்கு வீதாசாரத்தை (62.29) சந்திரிகா பெற்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



17.25க்குரிய புகையிரதங்கள் வருவதும், போவதுமாயிருந்தன. அடைபட்டிருந்த பயணிகள் வெளியே சிதற, காத்திருந்தவர்கள் முண்டியடித்து இருக்கை பிடித்தனர். எங்கும் இரைச்சல். ஆரவாரம். ஒலிபெருக்கிகள் வழமையான அறிவிப்புகளை தப்பாமல் ஒப்புவித்துக்கொண்டிருந்தன.


மார்கழி மாதக் குளிரிலிருந்து தப்புவதற்காய் அநேகமாய் எல்லோரும் தலையிலிருந்து கால்வரை தடிப்பாய் போர்த்தியிருந்தார்கள். மூக்குச் சீறுவதும், இருமுவதும் சிம்பனியாயிருந்தது.

புகையிரத நிலையத்தின் பின்பக்கவாசல். இருளைத் தடுத்து ஒளி விளக்குகள் யுத்தம் புரிந்து கொண்டிருந்தன. கொஞ்சத் தடிப்பாய் மழை தூறிக்கொண்டிருந்தது. வாகனங்கள் மிக எச்சரிக்கையாய் பயணித்தன.

மழைக்காய் வாசலில் ஒதுங்கியிருந்தவர்களில் கிளவ்டியாவுடன் நின்றவர்கள் மிக வித்தியாசமாய் இருந்தார்கள். கண்கள் சொருகி ஒரு விதமாய்... காற்றில் மிதப்பதுபோல அசைந்து கொண்டிருந்தார்கள். ஒரு சில கைகளில் வைன் போத்தல் புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்... நிறைய அமுக்காயிருந்தார்கள். இரண்டொருவர் தரையில் சரிந்து மடிந்திருந்தனர்.

இவர்களிலிருந்து நீண்ட இடைவெளிவிட்டு கனவான்கள், கனவாள்கள் தள்ளி நின்றார்கள். தெருவில் கிடக்கும் நாய்ப் பீயைப் பார்ப்பதைப்போல் இவர்களையிட்டு அருவருத்துக் கொண்டிருந்தார்கள்.

கிளவ்டியா இன்னும் அரைச் சொர்க்கத்தில் இருந்தாள். அதை முழுமையாக்குவதே அவளது அப்போதைய இலட்சியம். ஆனால் கையில் ஒரு பெனிக்கும் இல்லை. காசில்லாமல் யாரும் சொர்க்கம் தரமாட்டார்கள். வியாபாரம் என்றால் கறார்தான். யாரிடம் காசு கேட்பது? சுற்றியிருக்கும் கூட்டாளிகளின் பொருளாதாரம் கவலைக்கிடம்தான். இப்போது உடனடியாக சொர்க்கம் வேண்டும். அதற்கு காசு



வேண்டும்.

இப்படியான நேரங்களில்தான் தனித்திருக்கும் உணர்வு கிளவ்டியாவைப் பாதிக்கிறது. என்றும் அவளுடன் ஒன்றாயிருந்த அந்திரயாஸ் - ஹசிஸ்ஸை அவளுக்கு அறிமுகப்படுத்தியவன் நான்கு மாதங்களுக்கு முன்புதான் புகையிரத நிலைய மலசலகூடத்திலிருந்து சொர்க்கத்திற்குப் போய் திரும்பி வரவேயில்லை. அவளுக்கிருந்த ஒரே துணை, நண்பன், சுற்றம் எல்லாம்....

அன்றிலிருந்து கிளவ்டியாவின் ஹஸிஸ் பாவனை அதிகரித்துவிட்டது. தனித்துவிட்டோம் என்பதிலிருந்து தப்புவது மட்டுமே அத்தியாவசியத் தேவையாயிருந்தது. அடிக்கடி இந்த உலகத்தைவிட்டுப் போய் வந்தாள்.

இப்போது மீண்டும் தனிமை பற்றிய கவலை. கூடாது. யாருமேயில்லையா? கூடாது. இந்த யோசனைகள் ஆபத்தானவை. திரும்பவும் மறக்க வேண்டும். பறக்கவேண்டும். சொர்க்கம் வேண்டும். காசுவேண்டும். காசு வேண்டும். தயவு செய்து...

ஏதோ ஒரு புகையிரதம் வந்து நிற்க பலர் இறங்கி, பின் வாசலுக்கு வந்தார்கள். அவர்களிடம் நெருங்கிய கிளவ்டியா ''சில்லறை தருகிறீர்களா? என்று கை நீட்டிக் கெஞ்சினாள்.

பலர் காதிலும், கண்ணிலும் விழுந்தவில்லை. ஒன்றிரண்டு ஆண்கள் அவளைக் காமமாய்ப் பார்த்துப் போனார்கள்.

கிளவ்டியாவுக்குப் பதினேழு வயதுதான். முகத்தில் குழந்தைத்தனம் நிறைய இருந்தது. உடம்பு வாளிப்பானது. தொலைக்காட்சித் தொடர்களில் வந்து போகக்கூடிய அழகு.

இருபது நிமிடமாய் கைநீட்டியதில் பத்துப் பெனிக்தான் விழுந்திருந்தது. இதற்கு ஒரு துணிக்கை கூட வாங்க முடியாது. கிளவ்டியா கவலையானாள்.

இப்போது பசித்தது. தலையிடித்தது. சோர்வு. உடம்பு இயற்கையாயிருந்ததில் எல்லாவிதமான உபாதைகளும் உயிர் பெற்றன.

இல்லை. தாங்கவே முடியாது. அது வேண்டும்.

கிளவ்டியா மிகவும் பிரயத்தனம் செய்து தன்னை நிதானப்படுத்தலானாள். அவசர தேவை ஹஸிஸ். எவ்வளவு விரைவிலோ அவ்வளவுக்கு. காலம் கடப்பதற்கு முன்.

மறுபடியும் குறுக்கே நின்று வருவோர் போவோரிடம் ''தயவு செய்து சில்லறை தருகிறீர்களா?''

'அசிங்கங்கள்'

'ஜேர்மனிக்கே அவமானம்'

'வரிசையில் நிற்க வைத்துச் சுட்டுத்தள்ள வேண்டும்'

காசுக்குப் பதிலாய் கண்ணியமான சொற்கள்தான் தாராளமாய் விழுந்தன.

பொலிஸ் வான் ஒன்று சத்தமில்லாமல் வாசலில் வந்து நின்றது. கசங்காத உடைகளுடன் ஆயுதபாணிகளாய் மூன்று பொலிஸ்காரர் இறங்கி நேரே சொர்க்க வாசிகளிடம் வந்தார்கள். எந்தவித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல், விளக்கமும் கொடுக்காமல், அரை மயக்கத்திலிருந்த அவர்களைத் தாறுமாறாய் இழுத்து சோதனை செய்தார்கள். தங்கள், சடங்குகள் முடிந்ததும் அவர்கள் அனைவரையும் அந்த இடத்தைவிட்டு தொலைந்து போகும்படியும், அவர்கள் அங்கிருப்பது ஏனையோருக்கு இடைஞ்சலாயிருப்பதாகவும் விரட்டினார்கள்.

ஒரு பொலிஸ் கிளவ்டியாவிடம் வந்தது.

''உனக்கு ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன்''

''நான் ஒன்றும் செய்யவில்லையே''

''பார்க்கத் தெரிகிறது''

கிளவ்டியா நீட்டிக்கொண்டிருந்த கையை மடக்கி, கொஞ்சம் தள்ளிப்போனாள். பொலிஸ்காரனும் விடாமல் வந்தான். ''நீ இப்போதும் புகையிரத நிலையக் கட்டிடத்திற்குள்தான் நிற்கிறாய்''

''நான் ஒன்றும் செய்யவில்லையே''

''நான் உன்னிடம் எந்த விளக்கமும் கேட்கவில்லையே. இந்த இடத்தை விட்டு முதலில் வெளியே போ''

''வெளியே மழை தூறுகிறது''

''அது என்னுடைய பிரச்சினையல்ல. வெளியே போ''

கிளவ்டியா பரிதாபமாய் கெஞ்சினாள். பொலிஸ்காரன் இதெல்லாம் புளித்துப்போய் அசைவற்றிருந்தான். 'போ'

கிளவ்டியாவுக்கும் இது பழக்கமானதுதான். ஒருநாளிலேயே பலமுறை விரட்டப்பட்டிருக்கிறாள். தானாகப் போகாவிட்டால் எப்படியும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவான் என நன்கு தெரிந்ததால் தள்ளாடியபடியே வெளியே போனாள். அவளுடைய கிழிந்த ஜக்கற்றையும் சில நாட்களுக்கு முன் யாரோ திருடியிருந்தார்கள். நடுங்கினாள். மழை இப்போது இன்னும் தடித்திருந்தது. குளிர் விறைத்திருந்தது.

'இந்தக் குப்பைகளை அகற்றுவதே எமது தொழிலாய் போயிற்று' திட்டியபடி பொலிஸ்காரர்கள் வானில் ஏறி மறைந்தார்கள்.

கிளவ்டியா ஈரமாகி உடை உடம்புடன் ஒட்டிக்கொண்டிருந்ததால் அங்கிருந்த ஒன்றிரண்டு பேர் அவளை அக்கறையுடன் பார்த்தார்கள். அந்த மங்கல் வெளிச்சத்திலும் அளவெடுத்தார்கள். இலவசக்காட்சி.

கிளவ்டியா தளர்ந்து கொண்டிருந்தாள். இனித் தாக்குப்பிடிக்க முடியாதெனத் திட்டவட்டமாய் தெரிந்தது. எந்த நேரத்திலும் மயக்கம் போட்டு விழலாம். அந்த நிலை வரக் கூடாது, கொஞ்சத் தூள் கிடைத்தாலே போதும். தப்பிவிடலாம். சொர்க்கம் போய்விடலாம். ஹசிஸ்... ஹசிஸ்...

நீண்ட காலத்தின்பின் வீட்டுக்காரர்கள் ஞாபகத்தில் வந்தார்கள்.

அம்மா திடீரென அறிமுகப்படுத்திய புதுச் சிநேகிதன். அம்மா இல்லாத நேரங்களில் அவன் தன்னுடன் படுக்க கிளவ்டியாவை வற்புறுத்தியது. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவள் உடம்பில் அவன் தொட்டு விளையாடியது. துன்பம் தாங்கமுடியாமல் ஒரு நாள் அம்மாவிடம் சொல்லியழுதது. தங்களைப் பிரிக்கவே இந்தச் சதி என்று சிநேகிதன் சொன்னதையே அம்மாவும் நம்பியது. அவர்களிடமிருந்து தப்புவதற்காய் வீட்டை விட்டு தெருவுக்கு வந்தது. அந்திரியாசுடன் சந்தோசமாயிருந்தது. அவனும் போன பின் முற்றாய் தனித்தது. இன்றுவரை தன்னை அம்மா தேடி வராதது...

மங்கலான நினைவுகளை உடைத்துக்கொண்டு ஒரு கார் வந்து அவள் முன்னாள் திடுமென்று நின்றது. வாட்டசாட்டமாய் ஒரு இளைஞன் சாரதிப்பக்கமிருந்து கதவைத்திறந்து கொண்டு வந்தான்.

இப்போது அந்த இடத்தில் சனநடமாட்டமில்லை. கிளவ்டியாவின் தோழமைகள் ஆக்காங்கே சிதறியிருந்தார்கள்.

அவன் கிளவ்டியாவுக்கு அண்மையாக வந்தான். ''ஐம்பது மார்க்'' என்று காதில் கிசுகிசுத்தான்.

கிளவ்டியாவுக்குப் புரிந்தது. அவனைக் கவனித்துப் பார்த்தாள். ஓரளவு பரிச்சயமான முகம். கை நீட்டிச் சில்லறை கேட்டுக்கொண்டிருக்கையில் அடிக்கடி தாண்டிச் சென்ற முகம். அஞ்சு பெனிக் கூடப் போட்டதாய் ஞாபகமில்லை. வெளிச்சத்தில் இரக்கம் கொள்ளாதவன் இப்போது இருளில் பேரம் பேசுகிறான்.

கிளவ்டியாவுக்கு ஆத்திரம் வந்தது. வெறுப்பு வந்தது. அசிங்கமாயிருந்தது. ஆனால் வென்றதென்னவோ தூள் தான்.

மௌனமாய் போய் காரின் பின் இருக்கையில் அமர்ந்தாள். கார் போய்க்கொண்டிருக்கையில் அவன் எதுவும் கதைக்கவில்லை. இடையில் கிளவ்டியா சந்தேகம் வந்து ''குறைக்க மாட்டாய் தானே?'' என்று கேட்டாள். அவன் இல்லை என்று மட்டும் சொன்னான்.

கிளவ்டியாவுக்கு சந்தோசம் வந்தது. அம்பது மார்க்கில் ஹஸிஸ் வாங்கியது போக, மிகுதிக்கு நல்ல சாப்பாடு வாங்கலாம். ஆசையாய் சாப்பிட்டு நீண்ட நாளாயிற்று. கோலா குடிக்கலாம். இனிப்பு வாங்கலாம்.

கட்டிடங்கள் எதுவுமேயில்லாத, சுற்றிலும் மரங்களடர்ந்த பகுதியில் கார் வந்து நின்றது.

அவன் இறங்கி பின் இருக்கைக்கு வந்து கதவைச் சாத்தினான். கிளவ்டியாவை இருக்கையில் கிடத்தி, உடைகளைக் களைந்தான். தன்னையும் திறந்தான்.

கிளவ்டியா திணற, திமிற, கத்தக் கத்த... மிகவும் வக்கிரமாய் அனுபவித்தான்.

பசி, சோர்வு, வலி, ஆத்திரம்... எல்லாமாய் சேர்ந்து கிளவ்டியா துடித்து...துவண்டு...

முடிந்துபோய் அவன் திரும்ப உடையணிந்தான். அவளையும் அவசரப்படுத்தினான். கிளவ்டியா நோவைச் சகித்துப் பல்லைக் கடித்தாள்.

அவன் வெளியே இறங்கி, கார் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு ''சீக்கிரம் இறங்கு'' என்றான்.

கிளவ்டியா இறங்காமல் ''பணம்'' என்று கை நீட்டினாள். நீட்டிய கையைப் பிடித்து, முழுப்பலத்துடன் இழுத்து, வெளியே தள்ளினான் அவன்.

தடுமாறியபடியே, மழையில் சேறாகிப்போன தரையில்முகம் குப்புற விழுந்தாள் கிளவ்டியா. கண்ணீர் சேறுடன் கலந்தது.

அவன் நிதானமாய் தனது தலைமயிரைச் சரிசெய்தபடி சாரதி ஆசனத்தில் அமர்ந்து காரைத் தயார்படுத்தினான்.

கிளவ்டியா எழும்ப முயற்சித்தவாறே ''பொலிஸில் பிடித்துக்கொடுப்பேன்'' என்றாள். ஏமாற்றப்பட்ட ஆத்திரம் ஏகமாய் பொங்கியது. பலியாக்கப்பட்டதில் உடம்பெல்லாம் கூசியது.

அவன் சிரித்தான். ''சட்டப்படி பதிவு செய்யாமல் விபச்சாரம் செய்தது உனது குற்றம். நீ புகையிரத நிலையத்தில் நின்று பிச்சையெடுப்பது பொலிசுக்குத் தெரியும். நீ ஹசிஸ் புகைப்பதும் அவர்களுக்குத் தெரியும். நீண்டநாட்களாக எல்லாம் அவதானித்திருக்கிறேன். சட்டம், பொலிஸ் எல்லாவற்றிற்கும் நாங்கள் தான் வரி கட்டுகிறோம். அவர்கள் எங்களுக்கேதான். உன்னைப்போலத் தெருப் பொறுக்கிகளுக்கல்ல'' அவன் கார் கண்ணாடிகளை மேலே ஏற்றினான்.

''தயவுசெய்து இருபது மார்க்காதல் தரமாட்டாயா...''

கார் போய்விட்டது.


கிளவ்டியா அழுதபடி சேற்றில் கிடந்தாள். கோபத்தையெல்லாம் சேற்றில் காட்டினாள்.

நான்கு நாள் கழித்து புகையிரத நிலையப் பின் வாசலில் கை நீட்டிச் சில்லறை கேட்டுக்கொண்டிருந்தவர்களை கையுறை அணிந்திருந்த பொலிஸ் இழுத்து வெளியே தள்ளிக் கொண்டிருந்தது.

கொட்டும் பனியில், பாதையில் கிடந்த கழிவுகளின் மீது விழுத்தப்பட்டவர்களில் கிளவ்டியாவும் கிடந்தாள். அவளைக் கடந்து பென்சும், பி. எம். வேக்களும் போய்க்கொண்டிருந்தன.

பார்த்திபன்

29.12.95




எண்ணிடமுடியாத ஒரு பலத்த ஜாதி
என் தேசத்தின் மேல் வருகிறது
அதன் பற்கள் சிங்கத்தின் பற்கள்
துஸ்ட சிங்கத்தின் கடைவாய் பற்கள்அதற்கு உண்டு

வயல் வெளி பாழாயிற்று.
பூமி துக்கங் கொண்டாடுகிறது,
சந்தோசம் மனு புத்திரரை விட்டு ஒழிந்து போயிற்று.

பச்சைப் புழு விட்டதை
*நீலப் புறா தின்றது.*

*நாயக்க குமாரத்தியே!*
நீ அந்தகாரத்துள் பிரவேசித்தாய்.
நீ இனி ராஜ்யங்களின் நாயகி என்று
அழைக்கப்படுவதில்லை.
வெறுங்கால்களும் அம்மணத் தொடையுமாய்
ஆறுகளைக் கடந்து போ!
உன் நிர்வாணம் வெளிப்படும்
*பரிநிர்வாணமும்.*

*(என் இருதயமும் பரிசுத்த சொற்களும்*
*அவனை நோக்கி திரும்புகின்றன.)*

நீ கடினம் உள்ளவன் என்றும்
உன் பிடரி நரம்பு இரும்பு என்றும்
அறிந்திருக்கின்றேன்.
நான்தான் ! என்னைத்தவிர ஒருவருமில்லை
என்றுன் இருதயத்தில் எண்ணினாய்.

உன் சகோதரனுடைய ரத்தத்தின் சத்தம்
பூமியில் இருந்து கூறுகிறது !
இன்று என்னை இந்த தேசத்தில் இருந்து
துரத்தி விடுகிறீர்
நான் உமது சமூகத்திற்கு விலகி மறைந்து
பூமியில் நிலையற்று அலைகிற பிசாசாக இருப்பேன்.
*காட்டிக் கொடுப்பேன்."*

*அவன் சிறுமைப்பட்டு*
*போனவர்களில் ஒருவனானான்.*

ஆனாலும்
நீ உன் ஸ்தம்பன வித்தைகளையும்
உன் திரளான சூனியங்களையும்
அனுசரித்து நில் !
*இன்னும் !!*

நீ உன் சிறு வயது முதல் எவர்களுடன்
பொருதி வந்தாயோ !
அவர்களும் அப்படியே இருப்பார்கள்.

நான் உன்னிடம் கேட்பதெல்லாம்.

ஜனத்தை கூட்டு
சபையை பரிசுத்தப்படுத்து.
*என்பதைத்தான்.*

*நீயோ*
*தற்கொலை செய்ய சிறுவர்களை*
*அனுப்பிக் கொண்டிருக்கிறாய்.*

*மக்களோ !*
*எப்பொழுது*
சமாதானம் ஒரு நதியைப் போலவும்
நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலவும்
*இருக்கும் எனக் கேட்கிறார்கள்.*

பரிசுத்த வேதாகமத்தில் இருந்து
நஞ்சுண்டகண்டன் தொகுத்தது.
*( தடித்த எழுததில் உள்ள சொற்கள்*
*மட்டும் நஞ்சுண்ட கண்டனுடையவை )*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கருக்கலைப்பு தெரிவு யாருக்கு?

குமுதினி சாமுவேல்

எமக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இன்னொரு பிள்ளையை வளர்த்தெடுப்பது கடினம்.

* எனக்கு மத்திய கிழக்கு நாட்டில் தொழில் வாய்ப்பு ஒன்று கிடைத்தபோதும் நான் கருவுற்றதனால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

* என் கணவருக்கு ஒழுங்கான வேலையின்மையாலும், அவர் ஓர் குடிகாரராக இருப்பதனாலும், மீண்டும் ஓர் கருவை சுமப்பதற்கு நான் தயங்குகிறேன்.
* எனது கணவர் என்னை எந்நாளும் அடிக்கின்றார். அவருக்கு ஒழுங்கான தொழில் இல்லை. நான் தற்போது எனக்கு உதவி செய்த நபரோடு வாழ்கிறேன். தற்போது நான் கர்ப்பம் அடைந்துள்ளேன்.
* என்னுடைய கணவருக்கு இன்னொரு குழந்தை தேவையில்லையாம். அதனால் நான் கர்ப்பம் அடைந்துள்ளதை எதிர்க்கின்றார்.
* என்னுடைய வாழ்க்கை சீரழிந்துவிட்டது. இக்குழந்தையின் பொறுப்புக்களை சுமப்பது எனக்கு கடினம்.

நின்றுபோன மாதவிடாயை மீண்டும் ஏற்படுத்துதல் எனக்கூறப்படும் Menstrual Regu-ltion ஐ ஏற்படுத்தும் 5 நிமிடச் செயலுக்காக 50 பெண்கள் அந்த அறைக்குள் அமர்ந்திருந்தனர். அனுபவம் நிறைந்த உறுப்பினர்களைக் கொண்ட அந்த சுகாதார நிலையத்தின் கட்டணம் ரூ.650 மட்டுமே. இதன் செயற்பாடுகள் தொடர்பாக அதிகாரிகள் சத்தமின்றி இருப்பது இரகசியமல்ல. இந்த நிலையத்திற்கு வரும் பெண்கள் கருக்கலைப்பு செய்வதை மறக்கவோ, அவ்விடயங்களை புறக்கணிக்கவோ, அவர்களால் முடியாது. கருக்கலைப்பை மேற்கொள்வது என்பது ஒரு பெண்ணால் ஆழமாக சிந்தித்து எடுக்கப்பட்ட ஓர் முடிவாகும்.

நாம் தெரிந்து கொண்டளவுக்கு இந்நிலையத்தில் கருக்கலைப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரம் 5 நிமிடங்களாகும். கர்ப்பம் அடைந்த முதல் மூன்று மாதங்களுககுள மேற்கொள்ளப்படும் கருக்கலைப்புக்களில், மயக்கமருந்துகளோ, வேதனை அகற்றும் மருந்துகளோ பாவிக்கப்படுவதில்லை.

ஆனால், இங்கு அவர்கள் தாம் அடைந்த வேதனையைப்பற்றி எவ்வளவு தான் கதைத்தாலும் 1/2 மணித்தியாலத்துக்குள் அவற்றை எல்லாம் மறந்து வெளியேறி விடுகின்றனர்.

இந்நிலையத்தில் வேலை செய்யும் சுகாதார ஊழியர்கள், இங்கு வரும் பெண்களை அன்பாக கவனித்துக் கொள்கின்றார்கள் எனக் கூறப்படுகின்றது. கருக்கலைப்புக்குப் பின் உதிரப்போக்கு, உடல் வலி என்பன ஏற்பட்டால், இந்நிலையத்திற்கு மீண்டும் சமூகமளிக்கும் படியும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அச்சிகிச்சைகள் யாவும் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கருக்கலைப்புச் செய்த இரண்டு கிழமைகளுக்குப் பின்னர், மீண்டும் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றது.

குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாகவும் இங்கு விளக்கமளிக்கப்படுகின்றது. இந்நிலையத்தின் பிரதான சேவை குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாவது என்றாலும், ஒரு கிழமையில் 500 பெண்கள் மட்டில் இங்கு கருக்கலைப்புச் செய்து கொள்கின்றார்கள். பெரும்பாலும் வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள், நண்பர்கள் போன்றவர்களின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இந்நிலையங்கள் தெரியவருகின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பைத் தவிர்ந்த வேறு பிரதேசங்களில் இருந்து வந்தவர்களாவர். 20-30 வயதிற்குட்பட்ட விவாகமான குறைந்த வருமானம் பெறும், சிங்கள,தமிழ் யுவதிகள் இங்கு சிகிச்சை பெற்றுக் கொள்கின்றனர். ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கப் பெண்கள், கூடியளவு பணத்தைக் கொடுத்து, சகல வசதிகள் கொண்ட சுகாதார நிலையங்களில் கருக்கலைப்பைச் செய்து கொள்கின்றனர். ஏழைப்பெண்கள், தெருவில் கருக்கலைப்புச் செய்யும் வஞ்சக வைத்தியர்களிடம் அகப்பட்டுக் கொள்கின்றனர்.

இலங்கையில் கருக்கலைப்பு, சட்டத்திற்கு முரணானது. ஒரு பெண்ணின் உயிருக்கு ஆபத்தெனில் மட்டுமே சுகாதாரக் காரணங்களுக்காக அவளுக்கு கருக்கலைப்பு மேற்கொள்ள சட்டம் சம்மதம் அளிக்கின்றது பாலியல் வல்லுறவுக்கு ஆளான ஒரு பெண் கருவுற்றால் அதைக் கலைப்பதற்கு சட்ட நிலை தற்காலத்தில் இல்லை.

அதைத் தவிர, தேவையற்ற சந்தர்ப்பத்தில் குழந்தையைப் பெற்றெடுப்பது, பெண்களுக்கு உடல், உளரீதியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது கூட சமூகத்தில் கணக்கிலெடுக்கப்படுவதில்லை.

தேவையற்ற கர்ப்பத்தின் காரணமாக, சமூகம் அவளை விலக்கி வைக்கின்றது; தூற்றுகின்றது; கண்டிக்கின்றது. இதனால், எத்தனையோ பெண்கள் தற்கொலை செய்து கொள்வதையும் காணமுடிகிறது.

தற்கொலை முயற்சி தொடர்பான சட்ட நடவடிக்கை இருந்தாலும், அது இன்னுமொரு மாஜிஸ்ட்ரேட் அறிக்கையாகவும், பத்திரிகைகளுக்கு ஓர் சுவையான கதையாகவும் மட்டுமே அமைந்து விடுகின்றது. இதைத்தவிர இவ்வாறான தற்கொலைகளுக்கு அடிப்படையாக அமையும் சமூகக்காரணிகள் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

பெரும்பாலான மருத்துவர்களினதும், சட்ட வல்லுநர்களினதும், அபிப்பிராயம் என்னவெனில், இதற்கு சரியான தீர்வு கர்ப்பம் அடைவது தொடர்பான விளக்கத்தை பெண்களுக்கு பெற்றுக்கொடுப்பது என்பதாகும்.

தேவையற்ற கர்ப்பம், பொறுப்பற்ற ஓர் சமூகச் செயலாகும். இதனால், குழந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்ணைச் சென்றடைகினறது. அவளுக்கு இருக்கும் கஷ்டமானநிலை; தான் கர்ப்பமடைவதா இல்லையா என்று தீர்மானம் எடுப்பதாகும்.

அதைத்தவிர கவனத்திற்குரிய முக்கிய காரணமென்னவெனின், கருக்கலைப்பு எப்பொழுதுமே முக்கியமான அத்தியாவசியமான சேவையாகும் என்பதாகும். உதாரணத்திற்கு நெதர்லாந்தைக் கூறலாம். அங்கு கருக்கலைப்புக்கு சட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. நெதர்லாந்தில், பாலியல் கல்வி, குடும்பக்கட்டுப்பாடு பற்றிய அறிவுறுத்தல்கள் உயர்வாக இருப்பதால், உலகத்திலேயே கருக்கலைப்பு குறைவாக நடைபெறும் நாடாக இது பெயர் பெறுகின்றது.

ஆனால், அங்கும் கருக்கலைப்புகள் நடைபெறுகின்றன. காரணம்; பிறப்புக் கட்டுப்பாட்டின் இறுதித் தடையாகவாவது கருக்கலைப்பு அமைகின்றது என்பதனாலாகும்.

அதற்கான காரணம்:

1. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தத் தெரியாமை.
2. கணவன் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை (பயன்படுத்தாது) பாவிக்க விரும்பாது, கர்ப்பம் அடைந்த பெண்ணை அவற்றைப் பயன்படுத்துமாறு நிர்ப்பந்தித்தல்.
3. பெண் ஆணுக்கு கீழ்ப்பட்டவளாதலால, அவளால் பாலியலுறவில் இருந்து விடுபடவோ அல்லது நிறுத்தவோ முடியாதிருத்தல்.
4. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பங்களில் அதிகளவு அறிந்திராத முறைகளைத் தேர்ந்தெடுத்தலே வழமையாக நடைபெறுகின்றது.

கருக்கலைப்பு செய்வது தடை செய்யப்படக் காரணம் கலைப்பினால் ஏற்படும் எதிர்பாராத திடீர் பின்விளைவுகளாகும். கருக்கலைப்புச் செய்யும் தகைமை இல்லாதவர்கள் கூட கருக்கலைப்புச் செய்வதனால், சிசு மரணம், தாய் மரணம் என்பன அதிகரித்துச் செல்கின்றன.

கருக்கலைப்பு சட்டமாக்கப்பட்ட நாடுகளில், இதற்கான பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு கருக்கலைப்பு மேற்கொள்வதனால், வேதனையடைதல், உதிரப்போக்கு ஏற்படல், வேறு நோய்கள் ஏற்படல் போன்றன குறைந்துள்ளன.

கருவுறாமல் இருப்பதற்கு தெளிவுறுதல், விளக்கங்களை தரவுகளை தேர்ந்தெடுக்கும் உரிமை உளவியல் விளக்கங்கள் என்பன கிடைக்கச் செய்தல் வேண்டும். கருக்கலைப்புக்கு சட்ட அந்தஸ்து கொடுப்பது தொடர்பாக மேலும் பேசப்படவேண்டும்.

இது தொடர்பாக நாம் கலந்தாலோசிக்க வேண்டும். கருக்கலைப்பு பற்றி பெண்களுக்கு இருக்கின்ற பயத்தை இல்லாமல் செய்தல் அவர்களின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் தண்டனைகள் அல்லது, வைத்தியசாலையில் சுகாதார ஊழியர்களின் சேவை தொடர்பான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பொதுவாக சமூகம் விவாகமாகாத பெண்களே கருக்கலைப்புச் செய்து கொள்கின்றார்கள் என நினைக்கிறது. ஆனால், அவ்வாறான பெண்கள் இருப்பது குறைந்தளவிலாகும். விவாகமாகியும் கருவுறுவது தேவையற்ற பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

கருவுறுவது குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது என்பவை வயதெல்லையற்ற ஒரு விடயமாகும். இதன் மூலம் தெரிவது, கர்ப்பம் அடைதல் எண்ணிக்கை அதிகம் என்பதாகும். பிள்ளைகள் பிறப்பில் சிறு இடைவெளி, இரட்டைப் பிள்ளைகள் பிறப்பு, குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றாமை அல்லது பின்பற்ற முடியாமை போன்றவை இதற்கு உதாரணமாகும்.

குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வது மற்றும் கருக்கலைப்பு செய்வது தொடர்பாக சரியான அறிவூட்டலையும் கருணையான பராமரிப்பையும் சகல பெண்களுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு பிரயோகம் தொடர்பாக அதிக கவனம் எடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை பயன்படுத்த இலகுவானவை, மலிவானவை என்பதை பாலுறவில் ஈடுபடும் அனைவருக்கும் தெளிவுறுத்தல் அவசியம். எப்படியாயினும், கவனமும், சட்டம் தொடர்பான சேவைகளும் தேவைப்படுவது கருவுறுதலை தடுக்கவாகும்.

1992ல் உலக சுகாதார நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட (International Planed Parenthood Federation) எனும் அறிக்கையின படி ''உலகத்தில் ஒவ்வொரு வருடமும் கர்ப்பிணிகள் ஐந்து லட்சம் பேர் வரை இறக்கின்றனர் என்றும், இதில் 1/4, 1/3 வரையான இறப்பு கவனமற்ற கருக்கலைப்பினால் சம்பவித்தது'' என்றும் இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது.

கருக்கலைப்பு வேகத்தைக் குறைக்க வேண்டுமெனில், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. ''கருக்கலைப்பு சட்டத்திற்கு முரணானது'' எனப்படுவதனாலேயே கருக்கலைப்பு வீதம் அதிகரித்துச் செல்கின்றது என்றும் இவ் அறிக்கை குறிப்பிடுகின்றது. கவனமாக கருக்கலைப்பை மேற்கொள்ள வேண்டும், என்பதை சமூகத்திற்கும் பெண்களுக்கும் அறிவுறுத்தும் கடமை மக்கள் சுகாதார ஊழியர்களையும், குடும்பத் திட்ட சங்க ஊழியர்களையும் சார்ந்தது. அசாதாரண விமரிசனங்களுக்கு பெண்கள் உட்படாத வகையில் தனது கடமையைச் செய்தலும் இவர்களது பொறுப்பாகும்.

தமிழில்: ரத்னா

நன்றி: "எய" (அவள்)
96 ஜனவரி - பெப்ரவரி.

எல்லோரும் நிறையப் பேசுகிறார்கள்,
நானோ மௌனித்திருக்கிறேன்,
பழக்கப்படாத மனிதர் பலர் மத்தியில் ;
அவர்களைப் புரியமுடியாமல்.

இங்கு நான் புதியவள்; வேர்கள் இல்லாதவள்.
இந்தமண் எனது செருப்பில் மட்டும்தான் ஒட்டுகிறது
தவிர, நான் அடக்கி வளர்க்கப்பட்ட பெண்தானே!
உண்ணவும், உறங்கவும் முடிந்த என்னால்
இங்கு பேசமுடியவில்லை.

எங்கோ வெகு தொலைவில்
வீசுகின்ற எம்வீட்டுக்காற்றை நினைப்பது
அறிவீனம் என்கிறார்கள் இவர்கள்,
எனக்கும் மனிதத்திற்குமான இடைவெளி
அதிகமாகிக் கொண்டு போவதை என்னவென்று சொல்வது?

நண்பிகளும் நானும் தெருவில் நடக்கையில்
அடிக்கடி பின்னால் பார்க்கிறோம்;
அப்படியான பொழுதுகளில், சிலவேளைகளில்
ஆங்கிலம் பேசுகிறோம்.
நான் பொட்டு வைப்பதை நிறுத்திக்கொண்டேன்.

அச்சம் தரும் இரவுகளில்
அதிகம் யோசிப்பதையும்
நிறுத்திக்கொள்வேன்.


28-7-95
க.கமலினி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகளிர் சாசனம்: கண்டு கொள்ளப்படாத தவறுகள் !



**"மகளிர் சாசனத்தை அமுல் படுத்து!"**

**"பெண்களே! யுத்த அடக்கு முறைகளுக்கு எதிராக அணிதிரள்வோம்!"**

இம்முறை இலங்கையில் "சர்வதேச பெண்கள் தினத்தை நினைவுகூருகின்ற பெண்கள் அமைப்பு பல இக்கோரிக்கைகளையே முன்னணி கோஷமாக எழுப்ப தீர்மானித்திருக்கின்றன.

இவற்றில் 'மகளிர் சாசனம்' பற்றிய விவாதங்கள் கலந்துரையாடல்கள் என்பவற்றை சில பெண்கள் அமைப்புகள் நடத்தி வருகின்றன.

எனவே இன்றைய காலப்பொருத்தம் கருதி மகளிர் சாசனம் பற்றிய நடைமுறை சாத்தியங்கள் குறித்து கலந்துரையாடுவது பொருத்தமானது.

**மகளிர் சாசனத்தின் தோற்றம்:**

1975ம் ஆண்டு சர்வதேச பெண்கள் வருடத்தை உலகம் பூராவும் நினைவுகூர்ந்த போது 1975 தொடக்கம் 1985ஆம் ஆண்டு வரையான பத்தாண்டுகளை பெண்கள் தசாப்தமாகவும் ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது அதைத் தொடர்ந்து உலகம் பூராவுமுள்ள பல நாடுகள் பெண்கள் நலனில் ஓரளவு ஈடுபாடு கொண்டன.

நான்கே ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையில் மகளிருக்கெதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் உடன்படிக்கையை (Convention on the Elimination of All Discrimination Against Women) 1979 இல் அறிமுகப்படுத்தியது. ஆனாலும் வெகு சில நாடுகளே இவ்வுடன்படிக்கையில் உடனடியாக கையெழுத்திட முன்வந்தன.

இந்த CEDAW; உடன்படிக்கையானது பெண்களின் உரிமைகளைப் பேணுவதற்கான அடிப்டையான ஒன்றாகக் கருதப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் 1981ம் ஆண்டு இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இதனால் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்ட முதன்மை நாடுகளில் ஒன்றாகவே இலங்கையும் கொள்ளப்படுகிறது. இவ்வுடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்ட போதும் அரசாங்கம் பெண்கள் நலனில் அக்கறையில்லாமலேயே செயற்பட்டு வருகின்றது எனும் குற்றச்சாட்டை பெண்கள் அமைப்புகள் முன்வைத்தன. அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை (CEDAW) உடன்படிக்கையை இலங்கையில் அமுலாக்கும்படியும் இதற்கான ஒரு சுதேச சாசனம் ஒன்றை வரையும் படியும் பெண்கள் அமைப்புகள் கோரின. இதற்கான ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்தே 90களின் ஆரம்பத்தில் அரசாங்கம் மகளிர் தொடர்பான உத்தேச சாசனம் ஒன்றை அமைக்கும் பொறுப்பை மகளிர் அமைச்சிடம் ஒப்படைத்தது. மகளிர் விவகார அமைச்சு இவ் உத்தேச சாசனத்தை வரைவதற்காக பெண்கள் உரிமைகளில் அக்கறை காட்டும் முக்கிய பெண்கள் பிரமுகர் சிலரைக் கொண்ட குழுவொன்றை அமைத்தது. இக்குழுவினரால் அமைக்கப்பட்ட உத்ததேச சாசனமே 1993ம் ஆண்டு மார்ச் 3ம் திகதி பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இந்த சாசனமானது ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச பெண்கள் சாசனமாக கொள்ளப்படுகின்ற (CEDAW) வை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெண்கள் நலன்தொடர்பான விடயங்களில் ஈடுபாடுடைய பெரும்பாலான பெண்ணிலைவாதிகளின் கருத்தின்படி இச்சாசனம் மிகவும் பிரயோசனமானது. சிறந்தது. விமர்சனங்கள் திருத்த வேண்டியவைகள் எதுவுமில்லை. ஆனால் நடைமுறைச்சாத்தியம் பற்றியே கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது என்கின்றனர்.

ஆனால் அதற்கிடையில் இச்சாசனம் தொடர்பாக பல விடயங்களை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது என்பதை பலர் உணர மறுக்கின்றனர். வெகு சிலரிடமே இச்சாசனத்தின் உள்ளடக்கம் தொடர்பான விமர்சனங்கள் இருப்பதை காணமுடிகிறது. பெண்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களில் குடும்ப அமைப்பு முறையை பாதுகாக்கக்கூடிய பல அம்சங்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் பிரதான கருவிகளில் ஒன்றாக குடும்ப நிறுவனம் அடையாளம் காணப்படுகின்ற போதும் அக்குடும்ப அமைப்பு முறைக்கு தோதாகக் கூடிய அம்சங்களும் இதில் உள்ளதைக் காண முடிகிறது.

ஆண்களுக்கிருக்கின்ற பாலியல் சுதந்திரங்கள் எவற்றையும் பெண்களுக்கும் இருப்பதாக இச்சாசனம் முன்வைக்கவில்லை. புராதன தாய் வழிச் சமூகத்தை; தனிச்சொத்துரிமையை பேணுவதற்காக உடைத்து தற்போதைய தந்தை வழி சமூகத்தை நிறுவிய ஆணாதிக்கம் தமது தனிச் சொத்துரிமையை பாதுகாப்பதற்காகவே 'தகாத பாலுறவு' எனும் தடையை பெண்களுக்கு மட்டுமே போட்டது. அந்தக் கருத்தியலின் தொடர்ச்சியான இருப்பை, இன்னமும் ஆண்கள் அனுபவித்து பேணி வருவதுடன் பெண்கள் அவ்வுரிமையை பயன்படுத்தினால் 'வேசித்தனம்' என அவமானப்படுத்தி சமூகத்தால் தூற்றவும் செய்கிறது. இதே முறைமையை பெண்கள் சாசனம் பேணுகிறதா? ஆண்களுக்கு மட்டுமே இவ்வுரிமை இருப்பதாகக் கொள்கிறதா?

இந்நிலைப்பாடனது அரசாங்கம் பெண்கள் மீதான கருத்தியல் சார்ந்த ஒடுக்குமுறையை பேணுவகவே கருதமுடியும்.

இன்று பெண்ணியத்தில்; ஒருபால் உறவு சுதந்திரம் (Lesbian and Guy Relationships) என்பது இன்று பெண் விடுதலையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகவும் பேசப்பட்டு வருகிறது. கருவள கட்டுப்பாட்டை திணித்து வருவதில் வெற்றி கண்டு வந்த ஆண்களிடமிருந்து விடுதலை பெறுவதற்கும், பெண்ணின் உயிரியல் இயல்புகளை ஆண்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவதில் இருந்து விடுபடவும் ஒருபால் உறவு சுதந்திரம் பெண்ணுக்கு இருக்க வேண்மென பேசப்படுகிற அளவுக்கு இன்று தத்துவார்த்த விவாதங்கள் வளர்ச்சியுற்றிருக்கிறபோது இலங்கை மகளிர் சாசனத்தின் பாலியல் சுதந்திரத்திற்கே இடமில்லையென்றாகிவிட்டது. இது பற்றிய சர்ச்சைகளை பல பெண்ணிலைவாதிகள் எழுப்பாமல் இருப்பதுதான் ஆச்சரியத்துக்குரியது.

இந்தச் சில குறைகள் இருந்தபோதும் பெரும்பாலான உருப்படியான அம்சங்கள் நிறைந்த இந்த சாசனத்தில் அதன் சாத்தியப்பாடு குறித்த பல கேள்விகளை எழுப்பச் செய்கின்றன.

**சாத்தியப்பாடு:**

முதலாவது இது ஒரு சட்டமல்ல. அரசியலமைப்புக்கு உட்பட்ட விடயமல்ல. இது வெறும் அரசகொள்கை மாத்திரமே அதாவது அரசு கொள்கையளவில் மாத்திரமே பெண்கள் சாசனத்தில் கூறப்பட்டவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது என கொள்ளலாம்.

எனவே, இவற்றில் சொல்லப்பட்டவை மீறப்பட்டிருப்பதாக எவருக்கும் வழக்கு தொரடவே முடியாது. அதாவது ஒரு தனி நபரோ ஒரு நிறுவனமோ ஏன் அரசாங்கம் கூட பெண்கள் விடயத்தில் பாராபட்சமாக நடந்துகொள்வதையிட்டு எதுவித சட்டநடவடிக்கையும் இச்சாசனத்தைக் காட்டி எடுக்கமுடியாது. அது வெறும் அரச கொள்கைதான் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

என்வே தான் 1993ல் பாராளுமன்றத்தில் இக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டதில் இருந்து பெண்கள் அமைப்புகள் பல இச்சாசனத்திற்கு அரசியல் அந்தஸ்து வழங்கும் படி போராடி வருகின்றனர்.

ஆனாலும் இச்சானத்தின் சாத்தியப்பாடு குறித்து கண்காணிப்பதற்கான பெண்கள் தேசியக் குழு (National Committee of Women) ) எனும் அரசாங்க நிறுவனம் ஒன்றை அப்போதைய அரசாங்கம் நியமித்தது. இந்தக் குழுவுக்கூடாகவேனும் சாசனம் சட்ட அந்தஸ்து பெறும் வரையில் பெண்கள் உரிமைகளை ஓரளவு பாதுகாக்கலாம் எனப் பலர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அதுவும், கனவாக மட்டுமே காணப்பட்டது. காரணம் 15பேர் அடங்கிய இந்த தேசிய கமிட்டியால், குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை சட்டமீறல் நடவடிக்கையாகக் கொண்டு செயற்பட முடியாது. இக்கமிட்டிக்கு முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்து நேரடியாக நடவடிக்கை எடுக்கவோ, சமரச முயற்சிகளில் ஈடுபடவோ, சாட்சிகளை அழைக்கவோ அதிகாரம் இல்லை.

ஆகக் கூடிய பட்சம் பாரபட்சம் தொடர்பான முறைப்பாடுகளை பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட அதிகாரப்பிரிவுகளை வழிப்படுத்தி, அபிவிருத்தி கொள்கைகள், சட்டங்கள், நிர்வாக நடைமுறைகள் என்பன சாசன பிரமாணங்களின்படி கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று கண்காணிக்கவும் சிபாரிசுகளை செய்யவே முடியும். எனவே கண்காணிப்பு, சிபாரிசு, விதந்துரைப்பு, ஆலோசனை அளித்தல் என்பன போன்ற செயற்பாட்டுக்காப்பால் எதுவித அதிகாரமும் கமிட்டிக்கு இல்லை என்பதே உண்மை.

ஆக, ஒரு பக்கம் சட்ட அந்தஸ்து இல்லாத சாசனம். மறுபுறம் அதிகாரம் இல்லாத கமிட்டி. இந்த இரண்டையும் வைத்துக் கொண்டுதான் பெண்கள் நலனில் இந்த அரசாங்கம் ஈடுபட போகிறதென்றால் பெண்களின் பாரிய போராட்டத்திற்கான தேவையுள்ளது என்பதை உணர்தல் வேண்டும்.

ஆனால் வாய்கிழிய நெஞ்சதிர மார்தட்டிக் கொள்வோம். நாட்டின் ஜனாதிபதி பெண் என்று. பிரதமர் பெண் என்று. பாராளுமன்றத்தில் அதிகப் பெண்கள் அங்கம் வகிக்கிறார்கள் என்று. அமைச்சரவையில் அதிகப் பெண்கள் இம்முறை இருக்கிறார்கள் என்று......

இங்கையில் பெண்கள் சாசனம் வரையப்பட்டது (ஆண்தலைமையிலான) ஐதேக ஆட்சியின் போதே. பெண்கள் தேசிய கமிட்டி அமைக்கப்பட்டதும் (ஆண் தலைமையிலான) ஐதேக ஆட்சியின் போதே.

ஆனால் அன்று தொடக்கமே இவ்விரண்டையும் வலுவுள்ளதாக்கும்படி பெண்கள் போராடித்தான் வந்தார்கள். பலன் இருக்கவில்லை. சந்திரிகா ஆட்சி தலைமை ஏற்ற போது எல்லாம் தீர்ந்தது என நினைத்தனர் பெண்கள். இன்று ஒன்றரைவருடங்கள் ஆகிவிட்டன. சாசனம் வெற்றுக் கொள்கையாகவே உள்ளன. தேசிய கமிட்டி கைகட்டி பார்த்துக்கொண்டிருக்கும் ஒன்றாக மட்டுமே உள்ளது.

இன்று இச்சாசனம் தொடர்பாக பெண்கள் எழுப்பவேண்டிய முக்கியமான கோரிக்கை என்னவென்றால்,

***"அரசே!***
***சாசனத்திற்கு சட்ட அந்தஸ்து கொடு!***
***பெண்கள் தேசிய கமிட்டியை நீக்கி, பெண்கள் ஆணைக்குழுவை ஸ்தாபி!"***
***என்பதே!***

**கோமதி**

## சிரிக்க வைத்த சுந்தர்

சிரித்திரன் ஆசிரியர் திரு.சிவஞானசுந்தரம் அவர்கள் காலமான செய்தி நெஞ்சிலறைந்தாற்போல் வந்து சேர்ந்தது.

வடமராட்சியில் கரவெட்டியில் சுகயீனமுற்றிருந்த "சுந்தர்"- அவர் அப்படித்தான் அனைவராலும் அப்பொழுது அழைக்கப்பட்டார்- காலமானார்.

ஈழத்தின் பத்திரிகை உலகில் நகைச்சுவைக்கென்றே ஒரு பத்திரிகையை சொந்தமாகத் தொடங்கி அதை ஒரு வேள்வியாக நடாத்தி வந்தவர் அவர்.

படாடோபம் எதுவுமின்றி அமைதியான முறையில் நகைச்சுவை மூலமாக ஆழ்ந்த கூர்மையான சமூக விமர்சனங்களை வெளிக்கொணர்ந்தவர் அவர். அவரது சவாரித்தம்பர், Mr&Mrs டாமோடிரன்,போன்ற பாத்திரங்கள் மறக்க முடியாதவை.

மகுடியின் பதிலிலிருந்த சுருக்கமான,கூர்மையான,நகைச்சுவை மிகுந்த பதில்கள் காலத்தையும் கடந்து ரசிக்கத்தக்கவை.

சிரித்திரன் பத்திரிகையை எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் இரண்டாவது ஈழயுத்தம் தொடங்கும் வரை அவர் நடாத்தி வந்தார். சிறந்த கேலிச்சித்திரக்காரரும், ஓவியருமான அந்தப் படைப்பாளியின் மறைவு, தமிழ்ப் பத்திரிகை உலகுக்கும்,இலக்கிய உலகுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

நகைச்சுவை மட்டுமல்ல, சிறுகதைத்துறையிலும், குறுநாவல் துறையிலும் சிரித்திரன் பெரும் பங்காற்றியுள்ளதுடன் பல புதிய எழுத்தாளர்களை இலக்கியு உலகுக்கு உருவாக்கியும் தந்துள்ளது. சுந்தரின் நகைச்சுவைத் துணுக்குகளின் ஆழம் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ்ப்பத்திரிகைத் துறைக்கே புதுமை சேர்த்த ஒன்று. அவரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் சரிநிகரும் இணைந்து கொள்கிறது.

## பௌத்த...

'எங்கட பெடியன்களால்' ஆளப்படுவதையே விரும்புவேன். அவர்கள் எவ்வளவு தான் தலைக்கனம் பிடித்தவர்களாக, சர்வாதிகாரிகளாக, குரூரமானவர்களாக இருந்தாலும். அப்படிச் செய்தால் மட்டுமே எனது தாய்'மொழியிலேயே நான் தூக்கிலிடப்பட முடியும்.

புலிகள் தான் தமிழ் மக்களுடைய இழந்து போன கௌரவத்தையும், சுயமரியாதையையும் மீளப் பெற்றுக்கொடுப்பதற்காக இருக்கின்ற ஒரே வழி என்ற கருத்து மிதவாதத் தமிழர்கள் மத்தியிலும் ஆழமாக ஊன்றப்பட்டுள்ளமை நிதர்சனமானதே. நெருக்கடி நிலைமைகளின் போது கருத்துக்கள் மிக ஆழமாக மக்களின் மனதில் ஊன்றவைக்கப்படும் என்பதற்கு சான்றுகள் உண்டு. சாதாரண மக்கள் மிகக் கனமான நெருக்கடிகளைச் சந்திக்கின்ற காலங்களில் உடைபட்டுப் போக அவர்களின் மனங்களில் எவ்வாறு நம்பிக்கைகளை - அவை நல்லவையோ கூடாதவையோ, சரியோ பிழையோ - வலுவாக ஊன்ற வைக்கலாம் என்பதை வில்லியம் சார்ஜன்ட் என்ற பிரித்தானிய உளவியளாளர் 1957ல் வெளியிட்ட தன்னுடைய Battle for the Mindஎன்ற நூலில் விபரிக்கின்றார். இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

1983ம் ஆண்டு அரசினால் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்குப் பிறகு ஈழம் அத்தியவசியமானது என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கவேண்டும். தமிழர்கள் "பாரம்பரியத் தாயகம்" பற்றிய மாயைகளை கொண்டிருக்காவிட்டால் எல்லாவற்றையும் விட நேற்றுவரையும் யாழ்ப்பாணம் பாதுகாப்பான ஒரு இடமாக அவர்களுக்கு இருந்தது. அண்மையில் அது கைப்பற்றப்பட்டபின்னர் தமிழர்கள் மனமுடைந்து போய் மரணத்தைப்பற்றி கவலைப்பட்டு இருக்கவேண்டும். விஜயகுமாரதுங்க கொல்லப்பட்ட போது பாதுகாப்பின்மை பற்றிய பரபரப்பு இவ்வாறுதான் இங்கிருந்தது. அப்போது எனது சொந்த வீடே எனக்குப் பாதுகாப்பானதாக இருந்தது. ஆகவே தங்களுடைய பாதுகாப்பான இடத்தை இழந்த மக்களை என்னால் புரிய முடிகிறது. எவ்வாறு இந்து தமிழ் சமூகம் பிரபாகரனின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது என்று கேள்வியெழுப்புகிற மாதிரி எந்த ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட மக்கள் சமூகத்தையும் கேள்விக்குட்படுத்தலாம். எவ்வாறு ஜேர்மனி ஹிட்லரின் கீழும், ரஷ்யா ஸ்டாலினின் கீழும், கம்போடியா பொல்பொட்டின் கீழும் இருந்தது?

2500 ஆண்டுகால் வரலாறு உடைய பௌத்த கலாசார இலங்கை எவ்வாறு 1989ம் ஆண்டு ஒவ்வொரு ஒரு இலட்சம் பேரிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்படுகின்ற உலகிலேயே அதிக இரத்தம் சிந்திய இடமாக வந்தது?

*தமிழில் :*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டொக்டர் ஹெயிம் ஜி ஜிநோட் அவர்களது உலகப் பிரசித்தி பெற்ற குழந்தைகளின் உளவியலை புரிந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்ட 'Between Parents and Child' என்ற நூலின் முக்கிய சில அத்தியாயங்களை இப்பகுதியில் நன்றியுடன் மொழிபெயர்த்து தருகிறோம். குழந்தைகளின் உளவியலை புரிந்து கொள்ளத் தவறுகின்ற பல இளம் பெற்றோர் தமது குழந்தைகளின் உள்ளத்துள் மறைந்திருக்கும் அபூர்வங்களை காணத்தவறிவிடுகின்றனர். இதன் காரணமாக, தம்மை அறியாமலேயே குழந்தைகளின் எதிர்காலத்தையே பாழடித்து விடுகின்ற பெற்றோர்களும் உண்டு.

டொக்டர் ஹெயிமின் நூல் தமிழில் இது வரைவந்த சிறுவர் உளவியல் நூல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் நடைமுறை உதாரணங்களைக் கொண்ட காத்திரமான படைப்பாகும்.

டொக்டர் தனது முன்னுரையில் இவ்வாறு எழுதுகிறார்.

''எந்தவொரு பெற்றோரும், அதிகாலையில் விழித்தெழும் போதே, தமது குழந்தையின் அன்றைய பொழுதை மோசமாக்கிவிடும் நோக்குடன் விழித்தெழுவதில்லை. 'இன்றைக்கு எனது குழந்தையை திட்டவேண்டும்; குற்றம் குறை பிடிக்க வேண்டும், அவமானப்படுத்தவேண்டும்' என்று எந்தத் தாயும் திட்டமிடுவதில்லை. மாறாக, பெரும்பாலான தாய்மார்கள் 'இன்றைய பொழுது மிகவும் அமைதியாகவும், இனிமையாகவும் கழியவேண்டும்' என்றே எதிர்பார்க்கின்றார்கள். திட்டல், வாக்குவாதம், சண்டை எதுவுமே இன்றுஇருக்கக் கூடாது என்பதே அவர்களது காலைநேரத்து விருப்பமாக இருக்கிறது. ஆனால் இவ்வளவு நல்ல விருப்பங்கள் இருக்கும் போதே, எப்படியோ சண்டை வெடித்து விடுகிறது. மீண்டுமொருமுறை, நாம் சொல்ல விரும்பாத சொற்களை, நாமே விரும்பாத தொனியில் உச்சரிக்கின்றோம்.

எல்லாப் பெற்றோர்களும் தமது குழந்தைகள் சந்தோசமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதையே விரும்புகின்றனர். ஒருவரும் தமது குழந்தை பயந்த சுபாவமுள்ளதாக, வெட்கப்படுவதாக, யோசனை அற்றுச்செயல்படுவதாக, அருவருப்பூட்டுவதாக இருப்பதை விரும்புவதில்லை. ஆயினும், அவர்களது வளர்ச்சி படிமுறையினூடாக பெரும்பாலான குழந்தைகள் சகிக்க முடியாத பழக்கங்களைக் கொண்டவர்களாகவும், பாதுகாப்பு பற்றி உணர்வு அற்றவர்களாகவும், தம்மையோ பிறரையோ மதிக்கும் பண்பற்றவர்களாகவும் உருவாகி விடுகிறார்கள். நாம் சிறுவர்கள் அமைதியானவர்களாக இருப்பதை விரும்புகிறோம், ஆனால் அவர்களோ மோசமானவர்களாக இருக்கிறார்கள்; நாம் அவர்கள் தற்றுணிச்சல் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என விரும்புகிறோம், அவர்களோ பயந்த சுபாவமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; நாம் அவர்கள் சந்தோசமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம், அவர்களோ அப்படி இருப்பதில்லை.''

இந்த நூலின் நோக்கம், பெற்றோர்களுக்கு, குழந்தைகள் தொடர்பான தமது இலட்சியங்கள் என்ன என்பதை புரிந்து கொள்ள உதவுவதும், அந்த இலட்சியங்களை அடைய வேண்டிய ஆலோசனைகளை பரிந்துரை செய்வதும் ஆகும். பெற்றோர்கள் பல ஸ்தூலமான பிரச்சினைகளுக்கு,விடை காணப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். அவர்கள் 'குழந்தையிடம் அதிகமாக அன்பு காட்டுங்கள்', 'அவர்களின் மீது மேலும் கவனிப்பை வழங்குங்கள்' என்பன போன்ற ஆலோசனைகள் இப்பிரச்சினைக்கு போதிய பதிலை வழங்குவதில்லை.

கடந்த 15 ஆண்டுகளாக, இந்நூலின் ஆசிரியர் பெற்றோர்களுடனும் சிறுவர்களுடனும் தனிநபராகவோ, குழுக்களாகவோ, வழிகாட்டியாகவோ, உளவியலாளராகவோ, சேர்ந்து பழகியுள்ளார். அந்த அனுபவத்தின் பயன்தான் இந்த நூல். இந்நூல் ஒரு நடைமுறை வழிகாட்டி; இது பெற்றோருக்கு ஏற்படும் நாளாந்தப் பிரச்சினைகட்கும் உளவியற் சிக்கல்கட்கும் உரிய ஸ்தூலமான பதில்களை பிரேரிக்கிறது. குறிப்பிட்ட சில ஆலோசனைகளை இந்த நூல் வழங்கும் அதேவேளை சிறுவர்களுடன் வாழும் பெற்றோர்கட்கு தமது குழந்தைகளுடன் பரஸ்பர மதிப்புடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான அடிப்படைக் கோட்பாடுகளையும் தருகிறது'

இது வாசகர்கட்கு மிகவும் பயன்தரும் ஒன்றாக அமையும் என்று நம்புகிறோம்.




# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே.....1

## குழந்தைகளுடன் உரையாடுதல்

# குழந்தைகளின் கேள்விகள் புதைந்திருக்கும் அர்த்தங்கள்

அருண்

குழந்தைகளுடன் உரையாடுவது ஒரு தனிக்கலை. அதற்கு அதற்கே உரிய சட்டதிட்டங்களும், அர்த்தங்களும் உண்டு. குழந்தைகள் பெரும்பாலும் தமது உரையாடல்களின் போதும், அபிப்பிராயங்களைத் தெரிவிக்கையிலும் மிகவும் சாதுர்யமாகவே நடந்து கொள்கின்றனர். அவர்களது செய்திகள் பெரும்பாலும் பூடகமானவை; சந்கேதத் தன்மை வாயந்தவை; கவனமாக மொழி பெயர்க்கப்படவேண்டியவை.

ஆண்டி என்ற பத்துவயது குழந்தை தனது தகப்பனிடம் இவ்வாறு கேட்டான்:

'' 'ஹாலெம்' நகரில் உள்ள கைவிடப்பட்ட சிறுவர்களின் தொகை என்ன?''

ஒரு இரசாயனவியலாளரும் புத்திஜீவியுமான அந்தத் தகப்பனாருக்கு இந்தக் கேள்வி மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. சமூகப் பிரச்சினைகளில் தனது மகனுக்கு உள்ள அக்கறை அவருக்கு சந்தோசமூட்டியதில் வியப்பில்லை. அவர், மகனுக்கு அது தொடர்பாக ஒரு நீண்ட விளக்கம் ஒன்றை அளித்து விட்டு அவனைநோக்கினார். ஆனால் அவனோ, திருப்தியுற்றவனாகத் தெரியவில்லை. அதே விடயம் தொடர்பாக அவன் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தான். 'நியூயோர்க் நகரத்தில் எத்தனை குழந்தைகள்?', 'முழு அமெரிக்காவிலும் எத்தனை பேர்?', ''முழு உலகத்திலும்...?''

இறுதியில்தான் தனது மகனுடைய அக்கறை ஒன்றும் சமூகம் பற்றியதல்ல. தனிப்பட்ட ஒன்று என்று புரிந்தது தகப்பனாருக்கு. கைவிடப்பட்ட சிறுவர்கள் மீதான அனுதாபத்தின் காரணமாக அவன் அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. அவனது கேள்வி தானும் கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடுவேனோ என்ற அச்சத்திலிருந்து எழுந்தது. அவன் எதிர்பார்த்தது கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை அல்ல. தானும் ஒரு கைவிடப்பட்ட சிறுவர்களில் ஒருவனாகி விடமாட்டேன் என்பதை உறுதி செய்து கொள்வதே அவனது நோக்கமாக இருந்தது.

ப்ரூஸ், ஐந்து வயதுச் சிறுவன். அவன் முதன் முதலாக பாலர் பள்ளிக்கு போயிருந்த போது, கூட வந்திருந்த அம்மாவிடம் அங்கிருந்த சுவரில் வரையப்பட்டிருந்த ஓவியங்களைச் சுட்டிக்காட்டி இவ்வாறு கேட்டான்: 'யார் இந்த அசிங்கமான படங்களை வரைந்தது?'

தாயாருக்கு தர்மசங்கடமாகிப்போய்விட்டது. அவள் மகனை அப்படிப் பேசக்கூடாது என்று கண்டிப்பது போலப் பார்த்தபடி மெதுவாகக் கிசுகிசுத்தாள்.

'இவ்வளவு அழகான படங்களை அசிங்கம் என்று சொல்வது சரியல்ல'

ஆசிரியருக்கு அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்து விட்டது. அவர் புன்னகைத்தபடியே சொன்னார்: 'நீங்கள் இங்கே அழகான படங்களைத்தான் வரையவேண்டுமென்றில்லை. உங்களுக்கு விருப்பமான படி நீங்கள் வரையலாம்..'

ப்ரூஸின் முகத்தில் பெரிய புன்னகை ஒன்று தோன்றியது அவனுக்கு, அவனது மனதில் புதைந்திருந்த கேள்விக்குரிய பதில் இப்போது கிடைத்து விட்டது: ''ஒரு சிறுவன் அழகாக படங்களை வரையாவிட்டால் என்ன நடக்கும்?''

அடுத்ததாக ப்ரூஸ் அங்கிருந்த ஒரு உடைந்த தீயணைக்கும் இயந்திரத்தை எடுத்து நேரடியாகவே கேட்டான்:

''இதை உடைத்தது யார்?''

''இதை உடைத்தவர் எவராய் இருந்தால் தான் என்ன? இங்கு இருப்பவர்கள் எவரையும் தான் உனக்குத் தெரியாதே ஏன்தான் இப்படிக் கேட்கிறாய்?''

உண்மையில் ப்ரூஸின் நோக்கம் பெயர்களை அறிவதல்ல. அவனுடைய நோக்கமெல்லாம் விளையாட்டுப் பொருட்களை உடைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதுதான். கேள்வியைப் புரிந்துகொண்ட ஆசிரியர் சரியான பதிலை தந்தார்:

''விளையாட்டுப் பொருட்கள் விளையாடுவதற்குத்தானே? அவை சிலவேளைகளில் உடையும் இது நடக்கும்''

ப்ரூஸ் திருப்தியாக தலையாட்டினான். அவனது நேர்காணலைச் செய்யும் திறமை அவனுக்கு தேவையான தகவலைப் பெற்றுத்தந்தது.

''இந்தப் பெரியவர் (ஆசிரியர்) நல்லவர். இவர் விரைவில் கோபமடையமாட்டார். ஒரு படம் மோசமாக, அசிங்கமாக வரையப்பட்டாலோ ஒரு விளையாட்டுப் பொருள் உடைந்தாலோ அவர் கோபமடையப் போவதில்லை. நான் பயப்படவேண்டியதில்லை. இங்கே தங்குவதில் எந்தப்பயமும் இல்லை''

ப்ரூஸ் தாயாருக்கு கைகாட்டிவிட்டு தனது பாலர் பாடசாலையின் முதன் நாளை ஆரம்பிக்கத் தொடங்கினான்.

கரோல். பன்னிரண்டு வயதுச் சிறுமி. அவள் மிகவும் வேதனையடைந்தவளாக, கண்ணீர் மல்க நின்றிருந்தாள். அவளது விருப்பத்திற்குரிய மைத்துனி கோடைகால விடுமுறைக்கு தனது வீட்டுக்கு அவளை விட்டுப் போகப்போகிறாள்.

கரோல்: (கண்ணீர் மல்க): சுசி போகப்போகிறாள். நான் திரும்பவும் தனிமையில் இருக்கப்போகிறேன்.

தாய்: உனக்கு இன்னொரு சினேகிதி கிடைப்பாள்.

கரோல்: நான் சரியாக தனிச்சுப்போவேன்.

தாய்: உனக்கு அது பழகிப்போய்விடும்.

கரோல்: ஓ...அம்மா (அழுகிறாள்)

தாய்: உனக்கு பன்னிரண்டு வயதாகிவிட்டது இன்னும் ஒரு அழுகுணி பாப்பாவாக இருக்கிறாய்.

கரோல் தாயை முறைத்துப் பார்த்து விட்டு தனது அறைக்கு ஓடிப்போய், கதவை மூடிக் கொண்டாள்.

இந்தச் சம்பவம் ஒரு சந்தோசமான முடிவுக்கு வந்திருக்க முடியும். ஒரு குழந்தையின் உணர்வு மிகவும் காத்திரமான ஒன்றாக கருதப்படவேண்டும். அந்த விடயம் ஒன்றும் முக்கியத்துவம் அல்லாததாக இருப்பினும் கூட. கோடைகால விடுமுறைப்பிரிவு ஒரு தாயின் கண்ணில் அழுவதற்கு உரியதல்லாத சின்ன விடயமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தாயின் அனுதாபம் சிறிய ஒன்றாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

''நல்ல கவலையாக இருக்கிறாள் கரோல். அவளை கவலைப்படுத்துவது என்ன என்பதை நான் விளங்கிக்கொள்கிறேன்.

என்று காட்டுவதன் மூலம் அவளுக்கு என்னால் உதவ முடியும்.என்று தாய் நினைத்திருந்தால் இப்படிக் கூறியிருக்க முடியும்:

''சுசி இல்லாமல் தனிமையாக இருக்கும்''.


''உனக்கு அவளில்லா விட்டால் கவலையாக இருக்கும் என்ன?''

''ஒன்றாக இருந்த ஒருவரைப் பிரிந்து இருப்பது என்பது கஷ்டமான ஒன்றுதான்...''

''அவள் இல்லாவிட்டால் உனக்கு வீடே வெறிச்சென்று இருக்கும என்ன?''.

இத்தகைய அணுகுமுறை பெற்றோருக்கும் குழந்தைகட்கும் இடையில் அன்னியோன்யத்தை வளர்க்கும். குழந்தை தனது கவலையை புரிந்து கொள்ளப்படுவதாக உணரும் பட்சத்தில் அதன் துயரம் இல்லாது போய்விடும். ஏனென்றால் அவர்கள் விளங்கிக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களது தாய் மீதான அன்பு இதனால் ஆழமாகிறது. ஏனென்றால் அவள் விளங்கிக்கொள்கிறாள். தாயின் அனுதாபம் உணர்வுபூர்வமான முறையில் அவர்களது ஆளுமையை தட்டிக் கொடுக்கிறது.

வரும்...



நூல்:சுயம்-தமீமின் கவிதைகள்
வெளியீடு:537 ஸம்ஸம் வீதி
மருதமுனை • கல்முனை

''இது இனங்களுக்கும், மதங்களுககும் பிரிந்து சண்டையிடும் மக்களுக்குமாய்...'' எனற சமர்ப்பணத்துடன் வந்திருக்கும் இந்நூல தமீமின் இரண்டாவது நூலாகும். 'தடங்கள்' எனும் முதலாவது கவிதை நூலைத்தந்த தமீம்... ''இருந்தாற்போல எங்களில் பலருக்கு வயிறுபற்றி எரிவதுபோல, வயிற்றெரிச்சல் நிகழ்வது போல எனக்கும் இவைவரும். எழுதத்தான் வேண்டும் என்று உணர்வுகள் கேட்டுக்கொள்ளும் நான் எழுதுவேன். அதுதான் இது...'' என்கிறார்.

தனது சுயங்களை 34 கவிதைகளாக தந்திருக்கும் தமீம் உள்ளும் பின்னுமாய் இருக்கும் அவரது கலர் உருவங்களை தவிர்த்திருக்கலாம். மற்றப்படி இது விமர்சனமல்ல.

நிஸ்ஸா.




பெண் உடல் ஐதீகங்களிலிருந்து
உண்மைக்கு
வெளியீடு:பெண்கள் அபிவிருத்தி
நிறுவனம்
கண்டி

பெண் உடல் ஐதீகங்களிலிருந்து உண்மைக்கு என்ற நூலை பெண்கள் அபிவிருத்தி நிலையம் வெளியிட்டுள்ளது. இந்நூல் பெண்கள் சக்தி நிறுவனம் வெளியிட்ட சிங்கள நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

பெண்கள் உடல் தொடர்பான விளக்கவுரைகளும்,கருத்தரித்தல், மாதவிடாய் என்பனவற்றின் தெளிவான விளக்கங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. பெண்களின் உடல்கள் தொடர்பான ஐதீகங்களையும்,மூடநம்பிக்கைகளையும்,அத்தோடு இவை விஞ்ஞானபூர்வமான உண்மைத்தன்மை கொண்டவை அல்ல என்பதையும் இந்நூல் விளக்குகின்றது.

பெண்களுக்கு தம் உடல் தொடர்பான ஐதீகங்களையும்,மூடநம்பிக்கைகளையும் தகர்க்க,பெண்கள் அபிவிருத்தி நிலையத்தாரின் இம்முயற்சி,பெண் சமூகத்துக்கு பயனளிக்க கூடிய முயற்சியாகும்.

மேலதிக விளக்கங்களுக்காக விளக்கப்படங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழிபெயர்ப்பு என்ற ரீதியில் சாமத்தியச் சடங்கு தொடர்பாக தமிழர் மத்தியில் காணப்படும் பழக்கவழக்கங்கள் என்ற சிறு கட்டுரையும் இதில் அடங்கியுள்ளது

தர்ஷினி.




கிழக்குப் பல்கலைக்கழக பணியாளர் ஒன்றியத்தின் வெளியீடாக காலாண்டுக்கொருமுறை வெளிவரும் சஞ்சிகை கிழக்கொளி. இது ஒப்செட்பதிப்பில் வெளிவரத் தொடங்கிய பின், இரண்டாவது இதழ் அட்டையில் இரவியின் சூரிய தேவனின் ஓவியத்தை தாங்கி வெளிவந்துள்ளது.

முதற்பக்கத்திலே 'ஆனந்தனுக்கு அஞ்சலி' என்ற வாசுதேவனின் சிறந்த கவிதையும், அடுத்து ஆனந்தன் மொழிபெயர்த்த 'சினிமா' என்கிற சரளமான மொழியழகுடன் கூடிய அற்புதமான சிறுகதையும் 'முனைப்பு' என்கிற சிவரமணியின் கவிதையும் சஞ்சிகைக்கு வலுவூட்டுவன சிலவுள மூன்று.

இவைதவிர வேறுசில கட்டுரைகளும், கவிதைகளும், உறவு எனும் உலகங்கள் என்ற கதையின் இறுதிப்பகுதியும் இடம் பெற்றுள்ளன.

அனேக ஆக்கங்கள் (ஓவியங்கள் உட்பட) மீள் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதும், ஆக்கங்களின் தரம் பேணப்படாமையும் குறையாக துருத்திக் கொண்டு நிற்கின்றன.

வெளிச்சம் போதாதென்றே சொல்லாம்.

அகம்மத.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலிகளிடம் சில கேள்விகள்?

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து சில விமர்சனங்களை வெளியிட விரும்புகிறேன். புலிகள் இதனை ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குறியே. ஆனாலும், புலிகளின் தவறான அரசியல், தந்திரோபாயங்கள் எமது போராட்டத்தினை பாதிப்பதினை பார்த்துக் கொண்டு வாழாவிருக்க முடியாது.

இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு புலிகளை விட்டால் வேறு எவரும் இல்லை என்பது உண்மை. ஆனால் இந்த நிலையை புலிகள் திட்டமிட்டு ஏற்படுத்தி உள்ளனர். புலிகள் ஈழப்போராட்டத்தினை சரியான முறையில் முன்னெடுத்துசென்றால் அவர்களை ஏற்றுக்கொள்வதில் எந்த வித தயக்கமும் காட்டத்தேவையில்லை. அவர்களின் பழைய தவறுகளை மறப்போம். புதிய சரித்திரத்தை எழுதுவதற்காக அனைத்து தேசபக்த சக்திகளும் புலிகளுடன் இணையலாம். ஆனால் புலிகள் தமது தவறுகளை களைந்து புதிய பாதையில் முன்னேறுவார்கள் என்பது இன்னமும் சந்தேகமாகவே உள்ளது.

யாழ்நகரை இராணுவம் கைப்பற்றியதற்கான பழியை மக்கள் புலிகளின் மேல் போட்டுள்ளனர். அதுதான் உண்மையும் கூட. ஆனால் புலிகள் என்ன சொல்கிறார்கள்? எமது ஆட்பலம், ஆயுதபலம் ஆகியன போதவில்லை. அதனால் தான் தோற்க வேண்டி வந்தது என்று. இங்கு மனவருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால் 20 வருட போராட்ட அனுபவத்தினை உடைய புலிகள் இயக்கம் இன்னமும் தெளிவற்ற நிலையில் உள்ளதுதான். எப்பொழுதும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இராணுவத்தின் ஆயுத, ஆட்பலம் உயர்வாகவே இருக்கும். ஒரு அரசாங்கத்திற்கு இணையான முறையில் ஆயுத, ஆட்பலத்தினை திரட்டுவது ஒரு விடுதலை இயக்கத்தினால் முடியாத காரியம். அவ்வாறெனில் எவ்வாறு பெரிய இராணுவத்தை வெல்வது? சரியான யுத்த அரசியல் பூலோபாயமும், தந்திரோபாயமும் தான் வெற்றியை ஈட்டித்தரும். இந்திய இராணுவத்தை எவ்வாறு வென்றனர் என்பதை புலிகள் மறந்துவிட்டனர். புலிகளின் பிழையான அணுகுமுறைகள் புலிகளுக்கு தோல்வியை தேடித்தந்துள்ளது. இது புலிகளின் தோல்வியாக மட்டும் இருந்து விட்டால் இதனை மறந்து விடலாம். ஆனால் இந்தத் தோல்வி ஈழப்போராட்டத்திற்கு கிடைத்த தோல்வியாக அமைந்து விட்டது.

புலிகள் சர்வதேச சமூகம் ஈழப்போராட்டத்தின் மீது கொண்டிருந்த அனுதாப கண்ணோட்டத்தினை இல்லாதொழித்து விட்டனர். ஈழத்தின் நட்பு நாடுளை (இந்தியா) புலிகள் பகைவர்கள் ஆக்கிவிட்டனர். ஒரு விடுதலை இயக்கம் இராணுவ ரீதியாக பலத்துடன் இருக்கும் போது சர்வதேச சக்திகளின் தார்மீக ஆதரவு தேவைப்படாது விடலாம். ஆனால் அது பலம் இழக்கும் போதுதான் சர்வதேச சக்திகளின் தார்மீக ஆதரவு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வார்கள். இப்பொழுது புலிகள் அதனை உணரத்தலைப்பட்டுள்ளனர். கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரம். இன்றைய ஈழப்போராட்டத்தின் நிலை எவ்வாறு உள்ளது. பத்து அடிகள் முன்னோக்கி நடந்தோம். நூறு அடிகள் பின்னோக்கி விழுந்தோம். ஆகவே இப்பொழுது மிக மோசமான கட்டத்தினை அடைந்துள்ளோம். இதிலிருந்து எவ்வாறு மீள்வது? விரக்தியின் விளிம்பில் எதுவுமற்று நிர்கதியாக உள்ள மக்கள் புலிகளுக்கு பொருளாதார உதவியைச் செய்வார்கள் என்று எண்ணமுடியாது. புலிகள் இன்று நிதிவளங்களை தேவையற்ற முறையில் விரயமாக்குவதை நிறுத்தவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக புலிகள் அனைத்து தேசபக்தி சக்திகளை ஒரு குடையின் கீழ் கொண்டுவர முயலவேண்டும். புலிகளின் மீது எவருக்கும் தனிப்பட்ட கோபம் இருக்க முடியாது. (நேரடியாகப் பாதிக்கப்பட்ட சில நபர்களும் இருக்கலாம்) புலிகளின் மீது விமர்சனப் பார்வை கொண்டுள்ள அனைவரையும் தமது விரோதிகளாக பார்ப்பதை நிறுத்த வேண்டும். புலிகள் தம்மீது ஒரு சுயவிமர்சனம் செய்ய வேண்டும். தமது பிழைகளை மக்களின் முன் வைப்பதனால் அவர்களின் மதிப்பு குறையப் போவதில்லை. மாறாக இது புலிகள் குறித்து நம்பகத்தன்மையை அதிகரிக்கவே செய்யும். ஈழப்போராட்டத்தின் நன்மை கருதி நான் புலிகளுக்கு விதிக்கும் வேண்டுகோள் இதுவே.

''தவறுகளை களையுங்கள்''

''தேசபக்தி சக்திகளை இணையுங்கள்''

''புதிய பாதையில் முன்னேறுங்கள்''

***இ. மாறன். சிங்கப்பூர்.***

# மர்ஜூக்கின் கோபம் இது!

ஒரு பத்திரிகையாளர் என்ற நிலைப்பாட்டில் எதையுமே விமர்சிக்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு. அதில் சாதி, மதம், என்ற நிலைப்பாடு சத்தியத்திற்கு கிடையாது. எனவே ''அஷ்ரஃப்'' என்ற ஒரு தனி மனிதனுக்கு ஒவ்வொரு இதழிலும் ''முக்கியத்துவம்''(?) கொடுத்து நீங்கள் உங்கள் பெயரிலேயே விமர்சிக்கலாம். அதை விடுத்து மருதமுனை பஷீத், அபூநிதாஸ் போன்ற கற்பனைப் பெயர்களைப் பாவிப்பது தேவையற்றது. இஸ்லாமிய சமூகம் ''அஷ்ரப்'' என்ற தலைமைத்துவத்தை விட்டு ஒதுங்கி, கேட்பார் பார்ப்பாரில்லாத சமூகமாக மாறும் வரை எழுதிக்கொண்டே இருங்கள். அதன் பிறகுதான் உங்கள் பேனா அஷ்ரஃபை விட்டுத் திரும்பும் என நம்புகிறேன்.

**எம்.ஏ.எம். மர்ஜூக்**
**மருதமுனை**


**நாடகப்பிரதிப் போட்டி**

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பாரிஸ் கிளை அதன் ஸ்தாபகர் பாவலர் தெ.அ.துரையப்பா பிள்ளை அவர்களின் நினைவாக நாடகப் பிரதிப் போட்டியொன்றினை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

பக்கக் கட்டுப்பாடோ எண்ணக் கட்டுப்பாடோ வயதுக்கட்டுப்பாடோ இல்லாத இப்போட்டியில் எவரும் எந்த நாட்டிலிருந்தும் பங்குபற்றலாம்.முன்னர் மேடையேற்றப்படாத பிரசுரமாகாத படைப்புக்களாக இருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும்.

இப்போட்டிக்கான முடிவுத்திகதி 24.06.1996

போட்டியில் பங்குபற்ற விரும்பும் படைப்பாளிகள் முடிவுத்திகதிக்கு முன்னர் தங்கள் படைப்புக்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

Y.Sivalingam, 4,Allee Racine, 93270 Severan, France




# வெண்தாமரைப்பூச்சுற்றல்

ஜனநாயக கோசங்களுடனும், சமாதான வியாபாரிகளின் ஆலவட்ட ஆலாபனையுடனும் அரசேரிய அரசாங்கத்தின் பால் எனக்கு என்றும் நம்பிக்கையிருக்கவில்லை. ஏனெனில், இனவாத சூழலில் வாழ்ந்து கொண்டு சிங்கள மக்களின் நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதால் நம்பிக்கை வைக்கமுடியவில்லை.

ஆசிரிய தலையங்கத்தில் எழுதியிருந்தீர்கள். பலமுற்போக்குப்பத்திரிகைகளும் சமாதான வாதிகளும் யுத்த கோசம் எழுப்புகிறார்கள் என்று. இது புதுமையல்லவே ஏனெனில், சமாதான வாதிகள் என வேடம் போட்டவர்கள் உண்மையில் சமாதான வாதிகள் அல்லர். அவர்கள் இனவாதிகளைவிட பயங்கரமானவர்கள். அவர்கள், புலிகளின் கரங்கள் ஓங்கியிருப்பதை விரும்பவில்லை. புதிய அரசும் இனவாதத்தை ஓங்கி ஒலித்தால் புலிகள் பலம் பெறுவார்கள். எனவே இதை எப்படித்தடுப்பது? என சிந்தித்தே சமாதானக்கோசம் எழுப்பி புலிகளின் பலத்தைக் குறைக்கவும் தமிழ் மக்களின் கோரிக்கைகளைச் சிதைக்கவும் அப்படிச் செயல்பட்டவர்கள் இப்போது வெண்தாமரை மலர் ஏந்தி காதில் பூச்சுற்ற முயல்கிறார்கள். தற்போது, யாழ்நகரைக் கைப்பற்றியவுடன் யுத்தகோசம் பாடுகிறார்கள். ஆக புலிகளின் கை ஓங்கும் போது சமாதானம். இப்போது யுத்த கோசம்; இதில் என்ன புதுமை? உங்களுக்கு ஒரு வேண்டுகோள்.அதாவது அவர்களின் அலட்டலை செவ்வியாக்கி அறிமுகப்படலத்தை பெரிதாக சமாதானவாதி எனப் போட்டு எம்மைக் குழப்பியடிக்காதீர்கள்.

அது சரி, சமாதானவாத வியாபாரிகளின் பின்னால் அணிதிரண்டு கூப்பாடு போட்ட தமிழ் சமாதான வியாபார தொண்டரடிபொடிகள் எங்கே? ஏன் மூச்சு விடுகிறார்கள் இல்லை. பத்திரிகை தணிக்கையை கொண்டு வந்து ஒரு இனத்தின் மீது அட்டகாசத்தை கட்டவிழ்த்துவிட்ட அரசை எதிர்க்க எந்த வாதிகளும் முன்வரவில்லையே அது ஏன்?

இலங்கைத் திருநாட்டில் சுயமாக செயல்படும் தமிழ் ஜனநாயகவாதிகள் யாரும் இல்லையா? அதுவும் சரிதான் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய புதவிகள் மட்டுமல்ல கேவலம் ரூபவாஹினி கூட்டுதாபனத்தின் தலைமைப் பதவிக்குக் கூட ஒரு அரைத்தமிழன் அருகதையற்றவன் என்றால் எப்படி ஜனநாயக வாதியாக ஒரு தமிழன் செயல்படுவது?

ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் தனது தாச மார்க்கத்தை, பக்தி நெறியை பைத்தியத்தனமாய் வெளிப்படுத்தியிருந்த தன்மைகள் பெருஞ்சீற்றத்தையே தந்தது. முன்பைவிட தற்போதைய தலைமை இப்படி அடிவருடித்தனமாக செயல் புரிந்த, புரிந்துக்கொண்டு வரும் செயல் கண்டிக்கத்தக்கது. வாசகர்கள் ஒன்றும் மாங்காய் மடையர்கள் அல்ல. இது செய்மதிக்காலம் முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மூடிவைக்க முடியாது. பரிதாகரமாக தமது நம்பகத்தன்மையை இழந்துவிட்டது. இனியும் இழக்க ஒன்றும் இல்லை. யாரும் தினகரனை நம்புவதில்லை. புயலாக எழுதி வரும் ஒருவர் என்னமாய் துதிபாடுகிறார். வாசிப்பதற்கே சங்கடமாயுள்ளது.

அதேபோல்தான் அரச கட்டுப்பாட்டிலுள்ள வானொலி, தொலைக்காட்சிகளும் இவ்வூடகங்களின் வெளிப்பாட்டை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவதில்லை.

***கேகாலை மலர்***
***கேகாலை.***

# மாயையும் யதார்த்தமும்!

தாங்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளவற்றுடன் நோக்கும்போது, 'சரிநிகர்' மேர்ஜின் கொள்கைகளுக்கு முரணாகச் செயல் படுவதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் சமாதானத் தீர்வுப் பொதியை 'மேர்ஜ்' ஏற்றிருக்கிறது என்பதற்குரிய உண்மை நிலைகளை நான் சரிவர அறிந்திராமையால், இதுபற்றி என்னால் ஒன்றும் குறிப்பிட முடியாதுள்ளது. எனினும்; சரிநிகர் அதற்கு எதிராக இயங்கி வருகின்றது என்ற கருத்து ஏற்புடையதாயில்லை. ஏனெனில்; சமாதானத்திற்கு ஆதரவானவர்கள் அவர்கள், சிங்களவர்களோ, தமிழர்களோ அல்லது முஸ்லீம்களோ, அவர்களின் கருத்துக்களை சரிநிகர் அவ்வப்போது வெளியிட்டு சமாதானத்திற்கு ஆதரவாக நடந்து கொள்கின்றது என்பதே என் அபிப்பிராயம். அதுமட்டுமல்லாமல், சமாதானத் தீர்வு என்ற பெயரில் நடக்கும் இழுத்தடிப்புக்களையும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் நடந்து கொண்டிருக்கும் 'சம்பவங்களையும்' வன்மையாகக் கண்டித்தும் எழுதியுள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில், ஏன்..... தேர்தல் முடிவுகள் வெளியான போது கூட, தென்னிலங்கையில், இனி இனவாத[illegible] டுபடாது, சமாதானத்திற்கான காலடி எடுதது வைக்கப்பட்டு விட்டது, பேரினவாதம் செத்துவிட்டது என்றொரு மாயை, நம்பக்கூடியளவுக்கு வெளிப்பட்டது. ஆயினும், அண்மைக் காலங்களில் என்ன நடக்கின்றது? இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக்காணும் முயற்சிகள் நடந்தால்தானே, இருட்டடிப்பா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும். அங்கே நடப்பவையெல்லாம் -காலியில் நடந்த இனச் சுத்திகரிப்பு முயற்சி, கொலன்னாவைச் சம்பவத்தின் பின்னர் நடந்த இனவெறி நடவடிக்கைகள்.... இவற்றைத் தான் அறியமுடிந்தது. இருட்டடிப்புச் செய்யக்கூடிய வகையிலோ, மூடி மறைக்கக் கூடியவாறோ, தென்னிலங்கையில் எந்த வரவேற்கக் கூடிய நிகழ்வும் நடைபெறுவதாகத் தெரியவில்லையே.

இவ்விடயம் சம்பந்தமாக, நான் போதிய ளவு அறிந்திருக்காமையால், கருத்தெதனையும் தெரிவிக்க முடியவில்லை.

முடிந்த வரை, தமிழ் மக்களுக்குரிய, அரசியல் சுதந்திரம், சமத்துவம், பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி, சரிநிகர் அவ்வப்போது குறிப்பிட்டு வருகின்றது. தமிழர்களின் உணர்வை மதித்து, அவர்களுக்குச் சாதகமாக யாராவது குரல் எழுப்பினால், அவர் 'தமிழினவாதி' யாக பேரினவாதிகளால் எந்த வித தயக்கமுமின்றி முத்திரை குத்தப்படுகின்றார்கள். இந்த வகையில், சரிநிகரும் தமிழீழ வாதத்தைப் பரப்பும் வகையில் செயல்படுவதாகக் குறிப்பிட அவர்கள் ஒருபோதும் தயங்க மாட்டார்கள். எனினும், சிங்கள மக்கள் பாதிக்கப்படும் போதும், முஸ்லீம் மக்கள் இனரீதியாக துன்பத்திற்குள்ளாகும் போதும், அவற்றை வன்மையாகக் கண்டிக்க, 'சரிநிகர்' ஒருபோதும் பின்நின்றதில்லையே. இதனால், 'சரிநிகர்' தமிழின வாதத்தைப் பரப்பும் விதத்தில் செயல்படுகின்றது என்ற கருத்து அடிபட்டுப் போகின்றதல்லவா....?

வடக்குக்கு, சரிநிகர் வரக்கூடாது என்று புலிகள் தடை விதித்துள்ளதாக, முன்னர் படித்த ஞாபகம். புலிகளால், சில மாதங்களின் முனனர், திருமலையில் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டமையும், அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் புள்ளி விபரங்களுடனும் சரிநிகர் தந்திருந்தது. ஒரே இதழில், புலிகளைப் பற்றிய, சாதகமான, பாதகமான கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது. எனவே; சரிநிகர், புலிகளுக்கு சாதகமாக நடந்து கொள்ளவில்லை என்பதே என் கருத்து.

'திவயின' ஒருபக்க நியாயத்தை வலியுறுத்துவதான கருத்துக்களுக்கல்லவா முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதன் மூலம் இனவாதத்தைத் தூண்டிவிடுவது மட்டுமல்லாது, தங்கள் தொழில் இலாபத்தையுமல்லவா கருத்துடன் கவனித்து வருகின்றார்கள். (அவர்களின் துணை நிறுவனம் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டமையை சரிநிகர் முன்னர் ஆதாரபூர்வமாக வெளியிட்டதுதானே). சரிநிகர் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அதேவேளை, பேரினவாதத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிக்கின்றதே தவிர, சிங்கள மக்கள் பாதிப்புறும் வகையிலோ, அவர்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் வகையிலோ எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

சில இதழ்களில், யாழ் செய்திகள் அதிகளவில் இடம் பெறுவதால் இவ்வாறான கருத்து நிலவலாம் என்று நான் எண்ணுகின்றேன். வடக்கில், யாழ்ப்பாணத்தில் அடிபாடு நடந்து கொண்டிருக்கும் வேளையில், அங்கேயுள்ள மக்கள் அகதிகளாக சொந்த மண்ணிலே மாறிக் கொண்டிருக்கின்ற வேளையில், அந்த மக்கள் பசி பட்டினியை எதிர்நோக்கி சாவின் விளிம்பில் நிற்கும் வேளையில்..... அவர்களைப் பற்றிய செய்தியை வெளியுலகுக்கு தெரிவிப்பதுதானே நியாயம். இதைப் போல் யாழ்ப்பாணவாதம் என கருதினால், அது மனித நேயம் அற்றவர்களின் (குறுகிய நோக்கம் கொண்டவர்கள் -பிரதேச வாதத்தைத் தூண்டுபவர்கள்) கருத்தாகவே கொள்ளலாம். ஆகவே, யாழ்ப்பாண வாதத்தைக் கொண்டது என்ற கருத்தை வன்மையாகக் மறுதலிக்கின்றேன்.

*க விவேகானந்தராஜா.. தடபிருவில்.*

# தமிழ் மக்களுக்காக வேறெப்படி குரல் கொடுக்க முடியும்?

எனக்கு இப்படி கடிதங்கள் எழுதிபழக்கமில்லை. இக்கடிதமும் எழுதியிருக்கமாட்டேன். ஆனால் நீங்கள் உங்கள் இதழ் 87இல் சரிநிகரின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு எங்கள் பதில் மிகவும் அவசியம் என்று கூறி என்னை எழுத வைத்துவிட்டீர்கள்.

துயரங்களை செக்கன் தோறும் அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதென்றால் என்னைப் பொறுத்த மட்டில் சரிநிகர் செல்லும் முறைதான் சரி.

அதைவிடுத்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு வர்ணப்படங்களையும், கவர்ச்சி நடிகைகளின் படங்களையும்,சினிமாப்பகுதியையும், போட்டுக்கொண்டு அந்த தொலைக்காட்சி சேவை போட்டதை திருப்பிப் போடுகிறது என்றும், இந்தப் பெயர்ப்பலகையில் தமிழ் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், எழுதுவதன் மூலம் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும், துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எவ்வாறு குரல் கொடுக்க முடியும்? என்னைப் பொறுத்தமட்டில் சரிநிகர் மீது சுமத்தப்பட்டதாக இதழ் 87இல் தரப்பட்டிருக்கும் பத்து விமர்சனங்களும் தேவையற்றதாகும்.சரிநிகரே நீ போகும் பாதையை சற்றும் மாற்றி விடாதே.

***க.சிசுபாலன் திருமலை.***

**மேலுள்ளவை சரிநிகர் தொடர்பான அபிப்பிராயங்கள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

## தாழியுடைத்த கதை!

'வெண்ணை திரண்டு வருகையில் தாழி உடைந்தாற் போல்' என்பார்கள்.

தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகக் கோட்பாட்டுப் பிரச்சினையில் இப்போது ஏற்பட்டிருப்பது அதுதான். 'வெண்ணெய் எப்போது திரண்டு வந்தது? தயிர் இருக்க அவர்கள் சட்டியை அல்லவா கடைந்து கொண்டிருந்தார்கள். வெறுந்தாழியைக் கடைந்தால் அது உடையத்தானே செய்யும்' என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

ஆனால் சந்திரிகாவினதும் பேராசிரியர் பீரிஸ் அவர்களதும் தாழிக்குள் போட்டுக் கடையப்பட்டது தயிரோ அல்லது புளித்த மோரோ, வெண்ணை திரண்டு வருகின்றது என்று அவர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னர் தான், அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான அவர்களது அரசியல் சட்ட நகல் வரைவும் வெளியிடப்பட்டிருந்தது.

இப்போது 'தாயகக் கோட்பாட்டை அரசு ஏற்காது' என்று அறிவித்திருக்கிறார் பேராசிரியர் பீரிஸ்.

'தாயகக் கோட்பாடு' என்று அவர் எதைச் சொல்கிறாரோ தெரியவில்லை. ஆனால் அவர் நிச்சயமாக 'தமிழீழத்தை' குறிப்பிடவில்லை என்று சொல்லலாம். 'தமிழீழத்தை' அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இப்போது யாரும் அவரைக் கேட்டதாக ஞாபகம் இல்லை. பேராசிரியர் இப்படிச் சொன்னார் என்றால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோ, 'தாயகக் கோட்பாட்டை நாம் எதிர்க்கிறோம்' என்று தெரிவித்திருக்கிறார்.

ஆக இவர்கள் சொல்வதெல்லாம், வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்க முடியாது என்பது தான் என்பது இப்போது தெளிவாகிறது.

1987ல் அமுலுக்கு வந்த இலங்கை–இந்திய ஒப்பந்தப்படி வடக்கு–கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஏனைய இனத்தவர்களுடன் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசமாகும் என்று ஒரு சரத்து (1.4) சேர்க்கப்பட்டிருந்தது. (இந்திய–இலங்கை நாடுகளின் அன்றைய ஆட்சியாளர்கள், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் அது என்று நேரடியாகச் சொல்லாமல் வேண்டுமென்றே தவிர்த்திருந்தனர் என்பது இன்னொரு கதை). அந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு (பிரதானமாக) உரிய அவர்களது வரலாற்று பூர்வமான வாழ்விடமாகும். வடக்கு கிழக்கு இணைப்பை (தற்காலிகமாகவேனும்) ஒப்பந்தத்தில் செய்து அதில் கையெழுத்திட்ட 'மை' காயுமுன்பாகவே, கையெழுத்திட்ட ஜே.ஆர் மக்களுக்கு இவ்வாறு அறவித்தார்.

"வடக்கு கிழக்கு இணைப்பை ஐ.தே.கவின் தலைவர் என்ற முறையில் நான் எதிர்க்கிறேன்."

இவ்வாறான ஒரு அறிவிப்பைத் தான் இன்று அறிவித்திருக்கிறார் பேராசிரியர் பீரிசும்.

ஒருவகையில், ஜே.ஆராவது, கைச்சாத்திட்ட பின்–வெண்ணை திரட்ட பின் தான் தாழியை உடைத்தார். பீரிசோ, வெண்ணை திரழுமுன்னரே தாழியை உடைக்கிறார்.

ஆக, ஜே.ஆரை விட பீரிஸ் அவர்களுக்கு தீவிரமான 'இனப்பற்று' வந்து விட்டது போலும்!

'தாயகக் கோட்பாடு' என்ற கோரிக்கை ஒன்றும் வெற்றுத் தேர்தற் சுலோகமாக முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல. ஐம்பதுகளில் தொடங்கி வளர்ந்துவந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக திட்டமிட்ட படி தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் பறிக்கப்பட்டன. அம்பாறை சேருவில போன்ற தொகுதிகள் புதிதாக உருவாகின. பாராளுமன்றத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் அதன் காரணமாக குறைந்து போயிற்று. தமது அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் வென்றெடுக்கத் தேவையான பிரதிநிதித்துவப் பலத்தை அன்றைய தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வந்தனர். இது தவிர்க்க முடியாதபடி அவர்களை தாயகக் கோட்பாட்டை நோக்கித் தள்ளியது.

வடக்கு–கிழக்கு பாரம்பரியப் பிரதேசம் என்பது, இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் தமிழ், முஸ்லிம் மக்கள் நாட்டின் தேசிய வளங்களை அனுபவிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாக, இன ரீதியாக ஒதுக்கப்பட்டு வருவதற்கு எதிராக, மாற்றாக வைக்கப்பட்ட ஒரு கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கை மறுக்கப்படுமானால், தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படையே கணக்கெடுக்கப்படாமல் போய்விடும். இதன்பின் தீர்வுக்கான எந்த முயற்சியும் வெறுமனே பற்றைக்குக் கல்லெறிகின்ற (beating the bush) விவகாரமாகப் போய்விடும்.

ஒருவகையில், இதுவரை காலமும் இருந்த அரசாங்கங்கள் செய்ததெல்லாம் பற்றைக்குக் கல்லெறிந்ததுதான். அது தற்செயலாக அதனுள் இருந்த முயலுக்கும் பட்டுவிட்டது. முயலுக்கு கல்லெறியும் நோக்கமே இல்லாத, ஆனால் அதற்கு கல்லெறிவது போல காட்டிக் கொள்ள விரும்பிய அரசாங்கம், தவறுதலாக கல்லெறி பட்டதும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு விட்டது. இல்லை, இல்லை நாம் முயலுக்கு கல்லெறியவில்லை என்று இப்போது வெளிப்படையாகவே சொல்ல வேண்டியேற்பட்டுவிட்டது.

மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையும் காட்டும் விலாங்குத்தனமான அணுகுமுறையின் மூலமாகவே நாட்டின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியும் என்று கெசல்வத்தையில் பிறந்த பிரேமதாச முயன்றதை எள்ளி நகையாடிய பிரெஞ்சு படிப்புப் படித்த சந்திரிகாவும், பேராசிரியர் பீரிஸும், தாம் செய்வதும் அதைத்தான் என்பதையிட்டு வெட்கப்படுவார்களோ என்னவோ?

ஒருவேளை சந்திரிகா அவர்கள் கைப்பையை கக்கத்துள் வைத்துக் கொண்டு சராசரி அரசியல்வாதிகளைப் போல் தொழிற்பட தயாராகி விட்டாரோ என்னவோ.

உரையாடுவது போல வெட்கத்தையும் கக்கத்துள் வைத்துக்கொண்டு பாராளுமன்ற அரசியலை நடாத்தவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும் ஒரு மனிதனுக்கு அவசியமானவைகள் எவை என்பதை கடந்த ஒன்றரை வருட காலத்துள் அனுபவம் மூலம் அவர்கள் கற்றுத் தேறிவிட்டார்கள் போலும். பொய், கபடம், முன்னுக்குப் பின் முரணாக பேசுதல், பித்தலாட்டம், காலத்தை இழுத்தடித்தல் போன்ற அடிப்படைக் குணாம்சங்களை அவர்கள் பெற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பதற்கு, இந்தத் தாயகக் கோட்பாடு பற்றிய அறிவிப்பு சிறந்த உரைகல்லாகும்.

இந்த விடயங்கள் ஒன்றும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய விடயங்கள் அல்ல – அரசுக்கு மந்திராலோசனை சொல்லும் கூட்டணிக்கும் பிற கட்சிகட்கும் இவை அதிர்ச்சியை ஊட்டியிருப்பினும் கூட! இந்த அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதில் உண்மையான அக்கறையுடன் இருந்திருக்குமானால், தொடக்கத்திலிருந்தே அதன் நடவடிக்கைகள் மிகவும் தெளிவாக அதைக் காட்டியிருக்கும். அதிகம் வேண்டாம், வலிகாம யுத்தத்தினையாவது நிதானித்து தொடங்கியிருக்கும். அல்லது இனப்பிரச்சினைக்கான தனது தீர்வை வரைய முதலேயே, இப்பிரச்சினையின் அடிப்படையை விளங்கிக் கொள்ள முயன்றிருக்கும்.

ஆனால், பதிலாக இந்த அரசாங்கமோ, தாயகக் கோட்பாட்டைப் பற்றிப் பேசாதீர்கள், பௌத்தமதத்தின் முன்னுரிமை பற்றி கதைக்காதீர்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் என்பவற்றை பெரிது படுத்தாதீர்கள். முதலமைச்சரின் அதிகாரங்கள், கவர்ணரின் அதிகாரங்கள் எல்லாம் இப்போது முக்கியமல்ல. காணி விவகாரத்தையும் வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரத்தையும் ஆறுதலாகப் பேசுவோம் என்று தமிழ் மக்களுக்கு கூறிக்கொண்டே தனது சமாதானத்தை கொண்டுவர முயல்கிறது.

நிரந்தர சமாதானத்துக்கான தீர்வு உண்மையில் வரைந்துள்ள தீர்வில் இல்லை. அது வடக்கு கிழக்கில் யுத்தத்தை நடாத்தி அங்குள்ள மக்களை விரட்டிவிடுவதன் மூலமான ஒரு இன அழித்தொழிப்பில் தான் தங்கியுள்ளது என்ற பழைய கொள்கையினையே இந்த அரசாங்கமும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவே இப்போது தெரிகிறது.

இது தமிழ் முஸ்லிம் மக்களின் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் ஆட்டம் காண வைக்கும் ஒரு நிலமையாகும்.

இதற்கு இங்குள்ள தமிழ்க் கட்சிகளதும், ஜனநாயகவாதிகளதும் பதில் தான் என்ன?

தொடர்ந்தும் பொ.ஐ.மு வையும் சந்திரிகாவையும் நம்புவதா அல்லது முழு தமிழ் முஸ்லிம் மக்களும் இந்து சமுத்திரத்துள் போய்க் குதிப்பதா? பதில் சொல்லுங்கள்!

## ரிவிரண-4 ஆயிரக்கணக்கில் அகதிகள்

மட்டக்களப்பு மேற்கு பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் நகருக்கு அண்மையாக உள்ள வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள கிராமங்களில் சுயமாக திரிந்து படையினரை தாக்குவதை கட்டுப்படுத்தவும், புலிபாய்ந்த கல்லில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பாரிய இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள புலிகளின் முகாம்களை கலைப்பதற்குமாக, மேற்கொள்ளப்பட்ட ரிவிறண -4 ஆயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்கியுள்ளது.

மார்ச் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ரிவிறண-4 ஆயிரக்கணக்கான துருப்புக்களுடன் மட்டக்களப்பு - செங்கலடி வீதியினூடாக மேற்கொள்ளப்பட்டது. கவச வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் முன்னேறிய படையினர் ஷெல் வீச்சுக்களை நடத்தியவண்ணமே முன்னேறினர். ஹெலி கொப்ரர்களும், புக்காரா விமானங்களும் படையினருக்கு பெரிதும் உதவின.

செங்கலடி - பதுளை வீதி நான்கு நாட்களாக போக்குவரத்துக்காக தடைசெய்யப்பட்டிருந்தது. இராணுவத்தினரின் இந்தத் திடீர் அறிவிப்பால் செங்கலடி, ஏறாவூர், வாழைச்சேனைப் பகுதிகளுக்கு பொருட்களை வாங்க வந்தோர், வைத்திய சிகிச்சை பெற வந்தோர் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நிலை பெரும் திண்டாட்டமாகப் போய்விட்டது.

இதை விட கொடுவாமடு, பூமாச்சோலை, தம்பனாவெளி, மகிழவெட்டுவான், வேப்பவெட்டுவான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி காடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதாகத் தெரியவருகிறது.

குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோர் உணவுக்கும் தண்ணீருக்கும் சிரமப்பட்டுக்கொண்டு இருப்பார்கள் என்றும் இதை விட இக்காட்டுபிரதேசத்தில் நான்கு நாட்களாக புக்காரா குண்டு வீச்சுவிமானங்களும் ரஷ்ய ஹெலிகொப்ரர்களும் குண்டு வீச்சுக்களை நடத்துவதால் பெருமளவானோர் கொல்லப்பட்டோ காயமடைந்தோ இருக்கலாம் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிபாய்ந்த கல் இராணுவ முகாமிலிருந்து காடுகளை நோக்கியும் கிராமங்களை நோக்கியும் நான்கு நாட்களாக தொடர்ச்சியான ஷெல்வீச்சுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் நடத்தப்பட்ட றிவிறண இராணுவ நடவடிக்கைகளின் போதும் தப்பியோடிய பொதுமக்கள் வந்தாறுமூலை, செங்கலடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கு வந்திருந்தார்கள். இம்முறை இப்பிரதேசங்கசே இராணுவத்தினர் முழுமையாக தடைசெய்துள்ளதால் பொதுமக்கள் காடுகளை நோக்கியே ஓடவேண்டியுள்ளது. இராணுவத்தினரின் ஷெல்வீச்சுக்கள், குண்டுத்தாக்குதல்களினால் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கையோ தகர்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையோ சரியாகத் தெரியவில்லை. முன்னேறிய இராணுவத்தினர் புலிபாய்ந்தகல், சந்தனமடுஆறு பகுதிகளிலேயே தங்கியுள்ளார்கள். செங்கலடி - பதுளை வீதிகளினூடாக இராணுவ வாகனங்களே ஓடித்திரிகின்றன. இந்நடவடிக்கைளின் பல பொதுமக்களின் வாகனங்களும் பறிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இப்பிரதேசங்கள் முழுமையான விவசாயக் கிராமங்கள் ஆகும். இவற்றில் அறுவடை செய்ய தயாராக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களுக்கு என்ன நடந்ததோ என்பது இங்குள்ள விவசாயிகளது ஏக்கமாகும். மண்முனை, அம்பலாந்துறை, குருமண்வெளிதுறைகளினூடாக படுவான்கரைப்பிரதேசத்திற்கு வாகனங்கள் செல்வதற்கும் படையினர் தடை விதித்துள்ளனர். அத்துடன் விளை நெல், மண்ணெண்ணை, டீசல், உரவகைகள், மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லவும் முழுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இது அறுவடைக்கு தயாராக உள்ள வயல்களை பெரிதும் பாதிக்கும் என அங்குள்ள விவசாயிகள் கருதுகின்றனர்.

மட்டக்களப்பில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் ஆறுமணிக்கு முன்பாக அவ்விடங்களை விட்டு வெளியேறிட வேண்டும். இல்லையேல் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போல் கிண்ணையடி இராணுவமுகாம் தாக்குதல்களைத் தொடர்ந்து கிண்ணையடியில் உள்ள 150 வீடுகள் குடிபோதையில் வந்த இராணுவத்தினரால் எரிக்கப்பட்டு வீடுகளில் இருந்த பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. இக்கிராமமக்கள் இன்னமும் கறுவாக்கேணி, வாழைச்சேனைப் பகுதிகளிலேயே தங்கியுள்ளனர். இத்தாக்குதலின் போது ஒன்பது பொதுமக்கள் சூட்டுக்காயங்களுக்குள்ளானதுடன் பலர் கடுமையாக தாக்கப்பட்டும் உள்ளனர்.

## மீண்டும் 1983?

பெப். மாதம் 19ம்திகதி கொழும்பில் மகசின் சிறைச்சாலையில் இருந்த தமிழ் கைதிகள் கோரத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலின் போது, சிங்கள சிறைக்காவலர்களும் சிறைக்கைதிகளும் சேர்ந்து (அரசியற் கைதிகள் அல்ல) அச் சிறையின் ஜெயிலர் சரத் சந்திர தலைமையிலேயே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் காயங்களுக்குள்ளான தமிழ்க் கைதிகள் நால்வர் இன்னமும் சிறைக்கூட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகிறது.

கடந்த பெப். 19ம்திகதி, இத்தாக்குதலை அடுத்து பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து அங்குள்ள கைதிகள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தினர்.

1. சம்பவத்தில் ஈடுபட்ட உயரதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு புதிய நிர்வாகம் கொண்டுவரப்படல் வேண்டும்.
2. சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாள அணிவகுப்பொன்றின் மூலம் இனங்காண வழிசெய்ய வேண்டும்.
3. ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக் குழு ஒன்றை அமைக்கப்படவேண்டும்.
4. காயமடைந்த கைதிகள் உயிரோடு இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு சக கைதிகளுடன் சேர்க்கப்பட வேண்டும்.
5. கைதிகளது சொந்தப் பிரதேசங்களில் அமைந்திருக்கும் சிறைச்சாலைகளுக்கு அவர்கள் மாற்றப்படவேண்டும்.

ஆனால், இக்கோரிக்கைள் சிலவற்றை நிறைவேற்றுவதாக சிறைச்சாலை பிரதி ஆணையாளர் எச்.ஜீ. தர்மதாச கொடுத்த வாக்குறுதியின் பின் இவ்வுண்ணாவிரத போராட்டம் பெப். 24ம்திகதி கைவிடப்பட்டது. ஆயினும் அப்படி எந்த நடவடிக்களும் இதுவரை எடுக்கப்படவில்லை.

சரிநிகருக்கு இறுதியாக கிடைத்த தவலின் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் மீண்டும் மார்ச். 10ம்திகதி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கப்போவதாக தெரியவருகிறது.

இம்முறை தாம் சாகும் வரையும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் தமது விடயத்தில் அரசு தாமதமாக அல்லது உதாசீனமாக நடந்து கொள்கிறது என்றும் இக்கைதிகள் தெரிவிக்கின்றனர்.

## அனுமதி மறுப்பு!

வடபகுதியிலிருந்து புலம் பெயர்ந்து வன்னி பெருநிலப்பகுதியில் அகதிகளாய் இருக்கும் மக்களைப் பார்வையிட உலக நிறுவனங்கள் சிலவற்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. உலக உணவுத்திட்டம் (WFO), உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), ஐக்கிய அமெரிக்க உதவித்திட்டம் (USAID) என்பனவே பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி மறுக்கப்பட்ட நிறுவனங்களாகும்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இல்லாத மக்களைப் பார்வையிடவும், அவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவும் அப்பிரதேசத்திற்கான அனுமதியை மேற்கூறிய நிறுவனங்கள் பாதுகாப்பமைச்சிடம் (12.1.96) கோரியிருந்தன.

இந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து (WFO) வின் இலங்கைக் கிளைப் பணிப்பாளர் பாதுகாப்பமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எம்.எம்.ஜுனைட், அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் எஸ்.எம்.ஜே. சேணரட்ன ஆகியோருக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார். தமக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணம் யாது எனவும் வினவியுள்ளார்.

அரசின் இந்த மறுப்பானது 'யுத்தம் தமிழ் மக்களுக்கெதிரானதல்ல' என்ற அரசாங்கத்தின் நியாயவாதம் யுத்தத்தினைக் கேளிக்குரியது என்பதைக் காட்டுகிறது. கடந்த காலத்திலும் வடபகுதி அகதிகளுக்கு உதவ முனைந்த பல தொண்டர் ஸ்தாபனங்களும் தடுக்கப்பட்டன.

இனப்பிரச்சினைக்கான தீர்வுப்பொதி போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்ட பிணப்பொதியாக சட்டக்கூறு பெற்றுள்ளது. இராணுவம் விஸ்தீரணப்படுத்தப்படுகிறது. இவையெல்லாம் பேரினவாதத்தை நிலைநாட்ட எடுக்கப்படுகிற முயற்சிகள் என்பதை அரசாங்கத்திற்கு சாமரம் வீசிக்கொண்டிருக்கும் தமிழ் கட்சிகளும், புத்திஜீவிகளும் உணர்வது மட்டும் சாத்தியமில்லை போல் தெரிகிறது.

## தவிசாளரின் பஜிரோப் பவனி!

அண்மையில் ஓட்டமாவடி, வாழைச்சேனை மீராவோடை ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் ஒருவகையான வைரஸ் காய்ச்சல் பரவி பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். பலர் மரணமடைந்தனர்.

இதனை கட்டுப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வாழைச்சேனை சுகாதார பகுதியினரை வேண்டினார்.

இந்த வேண்டுகோளை ஏற்று சுகாதார பகுதியினர் ஒரு வகை மருந்து தெளிக்கும் வேலையினை ஆரம்பித்தனர். இதற்கான ஒரு பஜீரோவும், ஒலிபெருக்கியும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இரவு நேரங்களில் இந்த வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் ஏதோ ஒரு அரசியற் பிரசார கூட்டம் நடாத்துவதைப் போன்று செய்யப்பட்ட ஒலிபரப்பில் இட்டுக் கட்டப்பட்ட செய்திகளும் வெளியாகின, அதாவது இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தவர் ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் அவர்களே என்பது தான் அந்தப் பொய்யான செய்தியாகும்.

இதற்குள் இன்னுமொன்றையும் குறிப்பிட வேண்டும். அதாவது பிரதி தவிசாளர் அவர்கள் மருந்து தெளிக்கும் ஒவ்வொரு இரவிலும் பஜிரோவின் முன்னால் அமர்ந்து கொண்டு அவர்தான் மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்தது போல் வலம் வந்துகொண்டுதான் இருப்பார். ஒரு தினம் ஓட்டமாவடி மெயின் வீதியில் உள்ள ஒரு ஸ்ருடியோவுக்கு வந்து பஜிரோவையும் வைத்து படமும் எடுத்துக்கொண்டார், ஆனால் இப்பிரதேச மக்கள் வைரஸ் காய்ச்சலினால் மட்டும் பாதிக்கப்படவில்லை, ஒரு வகை வைரஸ் அரசியலினாலும் பாதிப்படைந்துள்ளனர். ஆனால் இதில் ஒன்றுமட்டுமே உண்மை. மக்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவியசங்கதி கொழும்பில் உள்ள தவிசாளருக்கு இன்னும் தெரியாதாம்.

ஆஸாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்